# வெள்ளி மலை

## இதழ் 19 (2024)




**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

**பொது நூலகம்**

**சுன்னாகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிமலை

## இதழ் 19 (2024)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
பொதுநூலகம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வெள்ளிமலை | : ஆண்டிதழ் 2024 |
| வெளியீடு | : வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொது நூலகம், சுன்னாகம் |
| பதிப்பு | : 1வது பதிப்பு 2024 |
| பதிப்பாசிரியர்கள் | : செல்வி நர்மதா குமாரசாமி, திருமதி சுதர்சன் ஜெயலக்சுமி |
| பக்கங்கள் | : 77 |
| பிரதிகள் | : 50 |
| அச்சிட்டோர் | : **JR** பிறிண்டேர்ஸ், உடுவில் |


| | |
|---|---|
| பதிப்புரிமை | : இம்மலருக்கான பதிப்புரிமை வலிதெற்கு பிரதேச சபைக்குரியது. இதிலுள்ள ஆக்கங்களுக்கான பதிப்புரிமை அவற்றின் ஆக்கியோருக்குரியது. |


| | |
|---|---|
| Vellimalai | : Annual Issue 2024 |
| Publisher | : Valikamam South Pradeshiya Saba Public Library Chunnakam |
| Edition | : 1st Edition 2024 |
| Editor | :Ms.Kumarasamy Narmatha, Mrs Jeyaluxmy Sutharsan |
| Pages | : 77 |
| No.of.copies | : 50 |
| Printers | : JR Printers, Uduvil. |


| | |
|---|---|
| Copy Rights | : Copy Rights of this Publication belongs to the Valikamam South Pradeshiya Sabha Copy Rights for the individual articales belong to the respective contributors |


ISSN 2989 - 0063



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுழைவாயில்

வெள்ளிமலையின் 19 ஆவது இதழ் பிரதேச மக்களின் எழுத்தாற்றலை வெளிக்கொணரும் வகையிலும் நூலகம் தொடர்பான கட்டுரைகளுடனும் சிறப்பான முறையில் வெளிவருகின்றது. இச் சஞ்சிகையின் தொடர் வருகையினால் இலைமறை காயாக இருக்கும் எழுத்தளர்களின் திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன.

எமது நூலகமானது தற்போது பல நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுடன், வாசிப்பு செயற்பாடுகளிலும் முன்னோக்கி வருகின்றது. வாசிப்பு அனைவருக்கும் சென்றடைய வேண்டுமென பார்வையற்றோருக்கான பகுதியையும் ஆரம்பித்துள்ளோம். மற்றும் தொழிநுட்ப அறிவை விருத்தி செய்யவும் டிஜிட்டல் மையத்தினை உருவாக்கி புதிய விடயங்களை வாசகர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து சிறப்பான சேவையை வழங்குவதன் மூலம் மக்களுக்கு வாசிப்புடன் வளர்ந்து வரும் தகவல் தேவைக்கேற்ப புதிய சேவைகளையும் வழங்கி சிறப்பான சேவையாற்றுவோம்.

நன்றி

பொது நூலகம்
சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

உலகப் பெருமஞ்சமாம் இணுவைத்திருமஞ்சம் ---------- 1

வரலாற்றுச் சுவடிகளின் பின்புலத்தில் 'ஆவணம்'
என்ற சொற்பதம் பற்றிய ஒரு தேடல் ---------- 5

புளங்காங்கிதமும் புண்படலலும் ---------- 16

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் வேலிகள்:
சில குறிப்புகள் ---------- 22

உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே ---------- 27

மாருதப்புரவீகவல்லியும் கோயில்களின்
உருவாக்கமும் யாழ்ப்பாணத்து அரசமரபின் தோற்றமும் ------- 32

இருபதாம் நூற்றாண்டு இசை முன்னோடிகளில்
பாபநாசம்சிவன் ---------- 40

இலக்கியத்தின் இலக்கில் நாம் ---------- 45

ஓவியக்கலை ---------- 48

கந்தரோடையும் குடாரை அருள்விநாயகர்
நூலகமும் அதன் செயற்பாடுகளும் ஒரு பார்வை ---------- 51

வாசிப்பு எனும் இதய சிகிச்சை ---------- 55

ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்கான சரியான பருவ
இதழ்களை தெரிவு செய்தல் : ஆய்வாளர்கள் கவனிக்க வேண்டிய
நான்கு முக்கிய காரணிகள் ---------- 57

ஆசையின் மயக்கம் ---------- 61

மாணவர் திறன் விருத்தியில் வாசிப்பின் அவசியம் ---------- 64

உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே ---------- 69
(தேசிய வாசிப்பு மாத போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பெருமஞ்சமாம் இணுவைத்திருமஞ்சம்

தமிழ்த்தெய்வமாம் முருகப்பெருமானுக்கு ஈழவள நாட்டில் சிறப்புற ஆலயம் அமைந்த இடங்களில் இணுவில் திருவூரும் ஒன்றாகும். முருகப்பெருமானது திருவிளையாடல்களைத் தன்னகத்தே கொண்டமைந்த பெரிய கோவிலென அழைக்கப்படும் கந்தகோட்டத்தைத் தன்னகத்தே கொண்டு இவ்வூர் காணப்படுகின்றது.

காலத்தால் முற்பட்ட வரலாற்றுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு காணப்படும் இவ்வூரானது கலிங்கத்துப் பரணியில் போற்றப்படும் சோழகுலோத்துங்கனின் தளபதியான கருணாகரனால் பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டதென 1567ஆம் ஆண்டு கல்வெட்டுப் பெருமையையும் திருக்கோவலூர் பேராயிரமுடையோன் முதல் ஆட்சித்தலைவனாக 13ஆம் நூற்றாண்டளவில் இணுவிலில் அமர்த்தப்பட்டதற்கான யாழ்ப்பாணச் சரித்திரத்தில் போற்றப் படும் தகைமையையும் தன்னகத்தே கொண்டு காணப்படும் பெரும்பதியாகக் கணிக்கப் படுகின்றது.

இத்துணைத் தன்மை கொண்ட இவ்வூரில் திருக்கோவிலூர் பேராயிரமுடையோன் முதலியால் தனது குலதெய்வமான காஞ்சிபுரத்துக் கந்தக்கோட்டத்து முருகனது ஆணைக்கமைய அமைக்கப்பட்ட திருத்தலமே இன்று திருமஞ்ச உற்சவங் காணும் இணுவில் கந்தசுவாமி கோவிலாகும்.

தைப்பூசத் திருநாளானது முருகப்பெருமானது திருவிளையாடற் சிறப்பினைப் பெற்ற நன்நாளாகும். தேவர்களை வருத்திய சூரனாதியர்களை வதம் செய்வதற்காகவும் தனது வேற்படையின் சிறப்பினை சூரபத்மனுக்கு எடுத்துக் காட்டும் நோக்குடனும் தாரகாசூரன் வாழ்ந்த கிரவுஞ்ச கிரியை முருகப்பெருமான் வேல்கொண்டு பொடிப்பொடியாக்கிய நன்நாளாக இத்தைப் பூசத்திருநாள் போற்றப்படுகின்றது. இச்சிறப்பு மிக்க நன்னாளில் கந்தப்பெருமான் திருமஞ்சமேறி அடியவர்களுக்குக் காட்சி கொடுப்பார்.

எம்பெருமானது திருமஞ்சமானது இணுவைப்பதியில் அருள் தன்மையும், வரலாற்றுச் சிறப்புத் தன்மையும், கலைத்தன்மையும் தன்னகத்தே கொண்டு காணப்படுவது எம்பெருமான் எமக்களித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கொடையே. இத்திருமஞ்சத்தினை இணுவிலில் ஒரு நூற்றாண்டிற்கு முன்பு அவதரித்த சித்தர் பெரியசந்நியாசியார் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் சந்நியாசியார் ஆண்டவனின் அருளாணைக்கமைய அமைத்தார்.

இம்மஞ்சத்தில் பவனிவரும் ஆறுமுகப் பெருமான் திருவுருவம் 1886ஆம் ஆண்டளவில் ஆலயப் பூசகரான செல்லையர் சின்னையரால் உருவாக்கப்பட்டது. தனக்குப் புத்திரப் பேறின்மை கண்ட சின்னையர் எம்பெருமானை வேண்டி புத்திரப் பேற்றினை எய்துவதற்காக எம் பெருமான் திருவுருவத்தினை மயில்மேல் இருந்த பாவனையில் வார்ப்பதற்கு திருவுளங் கொண்டார். பூசகரால் எம்பெருமானை ஆலய வளாகத்தில் வார்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் இருமுறை கைகூடவில்லை. இது கண்டு மனம் நொந்த பூசகருக்கு அவரது தியான நித்திரையில் காட்சி கொடுத்த எம்பெருமான் "வண்ணார் பண்ணையில் ஸ்தபதி வீட்டில் திருச் செந்தூரில் காட்சி கொடுப்பதைப் போன்று நின்ற கோலத்தில் அமையப் போவதாகக் கூறினார். அத்துடன் அமையப் போகும் அளவுப் பிரமாணத்தையும் உணர்த்தி அருளினார். அவ்வருள் வாக்குக்குக்கமைய உருவாகிய திருவுருவமே இன்று நாம் திருமஞ்சத்தில் காணும் திருவுருவம்.

அருள் பொங்கும் இப்பெருமானை வணங்கிய பெரிய சந்நியாசியார் என்னும் சித்தர் இத்திருவுருவத்திற்கேற்ற திருமஞ்சத்தினை அமைப்பதற்கு மனங்கொண்டு எம்பெருமானை அல்லும் பகலும் மனதில் தியானித்து அத்தியானத்தின் வெளிப்பாடாக அமைக்கப்பட்டதே இத் திருமஞ்சம். முறையாக மஞ்சம் அமைய வேண்டுமென்று வேண்டுதல் செய்த சந்நியாசியாருக்கு முருகன் கனவில் காட்சி கொடுத்து மஞ்சம் செய்வதற்கான சிற்பாசாரியார்கள் குறித்த காலத்தில் இந்தியாவில் நின்றும் ஊர்காவற்துறை துறைமுகத்தை வந்தடைவார்கள், அழைத்துவா எனப் பணித்தார்.

அதனோடமையாது தாம் கற்ற சிற்பக்கலையினை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பில்லையே என்று மனமேங்கித் தவித்த தமிழ்நாட்டு சிற்ப வல்லுநர்களிடம் சந்நியாசியார் வடிவில் சென்று இணுவில் மஞ்சம் செய்வதற்காக ஊர்காவற்துறைக் கரையை குறித்த நாளில் அடையவும் பணித்தார். குறித்த தினத்தில் ஊர்காவற்துறை துறைமுகம் சென்ற சந்நியாசியார் சிற்பவல்லுநர்களைக் கண்டு உவகையுற்று அவர்களை இணுவிலிற்கு அழைத்து வந்து தனது தவக்குடில் அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் கிழக்கில் மஞ்சவேலையை ஆரம்பித்ததாக ஊர் மக்கள் கூறுவர். இது நிகழ்ந்தது 1910ஆம் ஆண்டளவிலாகும். மஞ்ச வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட இடம் இன்றும் மஞ்சத்தடி என்னும் காரணப்பெயர் கொண்டு கோவில் வாசலின் அண்மித்த தூரத்தில் காணப்படுகின்றது. இவ்விடத்திலேயே அன்னாரது சமாதிக் கோவிலான அருணகிரிநாத சிவசுப்பிரமணியசுவாமி கோவில் காணப்படுகின்றது.

மஞ்சத்தின் சித்திர வேலைப்பாடுகளைப் பொறுத்தவரையில் கலைக்கூடமாகக் காட்சி தரும் இப்பாரிய மஞ்சத்தினைக் கண்ட கலைஞர்கள், ஸ்தபதிகள், சிற்ப விற்பன்னர்கள், மேல் நாட்டு அறிஞர்கள் போன்றோர் இதுபோன்ற ஒரு கலைக்கருவூலத்தை இதுவரை தாங்கள் கண்டதில்லை என்றும் இனிக் காண்பதும் சந்தேகமே என்றும் பரவசத்தோடு கூறுவர். இதற்குக் காரணம் இதனை உருவாக்கிய சிற்பிகள் சிற்ப சாஸ்திரத்தில் மூழ்கித் திளைத்தவர்கள் என்பதேயாகும்.

இங்கே காணப்படும் சிற்பங்களும் அமைப்பு முறைகளும் சிற்ப சாஸ்திர விதிகளுடன் ஒப்புநோக்கும்போது விதியில் கூறப்பட்டது போன்று "உருவபேதத்தில் சிற்பியின் மனத்தை ஒரு நிலைப்படுத்தி திருவுருவங்களை மனதில் பதிய வைத்து பின்னர் பூரணப்படுத்தியதை" சிற்பக் காட்சிகள் காட்டுகின்றன.

பலமாறுபட்ட உருவங்களின் தோற்றங்கள் உருவ பேதத்தால் உணர்த்தப்படுகின்றன. உருவ பிரமாணங்களை உற்றுநோக்குவோமாயின் உருவங்கள் அவற்றிற்கேற்ப நெகிழ்ச்சி யோடு வெளிப்படையாகத் தோற்றங் கொண்டுள்ளன.

இம்மஞ்சத்தில் காணப்படும் பிற கொத்து வேலைகளும் சிற்பலங்காரங்களும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. நெஞ்சை நெகிழ வைக்கின்ற சிற்பங்களாக பிரம்மா, விஸ்ணு, விநாயகர், வள்ளி, தெய்வானை, சமேத சுப்பிரமணியர், தேவர்கள், கந்தருவர்கள், கிண்ணரர், நாகதேவதைகள் ஆகியவற்றின் உருவங்களும் அரசனும் அரசியும் பரிவாரங்களுடன் வீறுநடை போடும் காட்சியும் கலைஞனின் கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் அம்சங்களாக அமைந்துள்ளன.

இத்துணைத் தன்மை மிக்க இத்திருமஞ்சத்தில் கந்தவேள்ப் பெருமான் ஆறுமுகங்களுடனும் பன்னிரு திருக்கரங்களுடனும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயவரதகரத்துடன் தங்கவேல், தங்கச் சேவற்கொடி தாங்கி நின்ற திருக்கோலத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க சங்கநாதம் ஒலிக்க பக்தர்களின் அரோகரா ஒலியுடன் திருப்பவனி வரும் காட்சியைக் காண்பது எம்மனதில் "நாலாயிரங் கண்படைத்திலனே இந்த நான்முகனே" என அருளாளர் அருணகிரியார் ஏங்கும் எண்ணத்தைச் சித்தரிப்பதாக அமையும்.

அசுரர்களை அழித்து தேவர்களைக் காத்த எம்பெருமானை அவரது திவ்விய நாளாம் தைப்பூசத் திருநாளில் திருமஞ்சத்தில் கண்டு தரிசித்து இணுவைத் திருமஞ்சமாம் உலகப் பெருமஞ்சத்தின் வடம்பற்றி இறையருள் பெறுவோமாக.

**ஞானஏந்தல் மா.ந.பரமேஸ்வரன் (M.A)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுச் சுவடிகளின் பின்புலத்தில் 'ஆவணம்' என்ற சொற்பதம் பற்றிய ஒரு தேடல்

இன்று நூலியல் மற்றும் சுவடிகள் தொடர்பாக 'ஆவணம்'' என்ற சொல்லை அடியாகவைத்து பல்வேறு சொற்கள் புழக்கத்தில் உள்ளன. தமிழகத்திலும் இலங்கையிலும் இன்று நாம் Document, Archive போன்ற ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ப் பதமாக 'ஆவணம்'' என்ற சொல்லை பயன்படுத்தி வருகின்றோம்.

சங்ககாலம் தொட்டு வழக்கிலிருந்த நிகண்டுகளிலும், பின்னைய அகராதிகளிலும் 'ஆவணம்'' என்ற சொல்லுக்கு பல்வேறு விளக்கங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. மொழியியல் வரலாற்றில் இத்தகைய மருவல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. 'நாற்றம்'' என்ற சொல் சங்க இலக்கியத்தில் 'நறுமணம்'' என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்று அதன் அர்த்தம் மாறிவிட்டது. ஆவணமும் இவ்வாறே ஆகிவிட்டது.

**ஆவணம்** என்ற சொல்லுக்கும், **(ஆபணம்)** என்ற வடமொழிச் சொல்லுக்கும் நெருக்கமுள்ளதாக ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். பின்னைய அகராதிகளில் கடைவீதி, தெரு, விலை, உரிமை (Right to Property/ Ownership), அடிமைத்தனம், அடிமைப்பத்திரம் போன்ற கருத்துக்களையும் 'ஆவணம்'' என்ற சொல் காலக்கிரமத்தில் வழக்கில் உள்வாங்கிக்கொண்டு வந்துள்ளது.

6ஆம் நூற்றாண்டில் திவாகர முனிவரால் இயற்றப்பெற்றதே திவாகர நிகண்டு. இந்நூலினை 'சேந்தன் திவாகரம்'' என்றும் அழைப்பர். சேந்தன் திவாகரத்தில் தெருவின் பெயர் என்ற வகையில்,

**'ஆவணம், வீதி, ஞெள்ளல், மறுகு,**
**கோசம் நியமம், மார்க்கம், தெருவே**
**சிறகுஎனவொருவழிச் செப்பவும்படுமே''** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'சூடாமணி நிகண்டு'' என்னும் நூல் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மண்டல புருடர் என்னும் சமணரால் இயற்றப்பட்டது. இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகண்டு ஆசிரியர் மண்டல புருடர் அவர்கள் வீரமண்டல புருடர் என்றும் அழைக்கப்பட்டார். இந்நிகண்டில், ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதியில்,

'கோதில்ஆ வணம்அங் காடிகூலம்பீ டிகையும் அப்பேர்
தீதில்வை யாளிவீதி திகழ்செண்டு வெளியே என்ப
சாதியாம் புரவட்டந்தி ருமுற்றந் தானும் அப்பேர்
வீதியின் பேரே ஞெள்ளல் பூரிய மரசர் வீதி." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'பிங்கல நிகண்டு" நூலைப் பிங்கலம் என்றும் வழங்குவர். இது சோழர்கள் ஆண்ட கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பிங்கல முனிவரால் இயற்றப்பட்டது. இவர் திவாகர முனிவரின் மாணவர்களில் ஒருவர். பிங்கல நிகண்டுவில் ஆவணம் பற்றிய தேடலில் கீழ்க்கண்ட விபரம் கிட்டுகின்றது.

'விச்சை யாவணம் வீதி மறுகு
சேனை நியமஞ் சிறகு ஞெள்ளல்
வாடை கோசு மார்க்க மொலியல்
பாடகந் தெரவின் பெயரா கும்மே"

'தெரு" என்ற சொல்லுக்கு இந்நிகண்டு, விச்சை, ஆவணம், வீதி, மறுகு, சேனை, நியமம், சிறகு, ஞெள்ளல், வாடை, கோசு, மார்க்கம், ஒவீயல், பாடகம் என பல கருத்துக்களை வழங்குகின்றது.

'ஆவணம்" என்ற சொல்லின் பயன்பாடுகள் சங்க இலக்கியங்களிலும், சமய இலக்கியங்களிலும் எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதை சில உதாரணங்கள் வாயிலாக அறிவோம்.

திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திருமுறையில் (25.திருவாரூர்-திருத்தாண்டகம்) சோழநாட்டின் காவிரித் தென்கரையில் அமைந்துள்ள திருவாரூர் பதிகொண்ட அல்லியம்பூங்கோதை உடனமர் புற்றிடங்கொண்டார் மீது பாடப்பெற்ற திருப்பாடல் இது:

'உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே."

'உயிராவணம்'', 'அயிராவணம்'' ஆகிய இரு சொற்கள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆவணவீதி (கடைத்தெரு)

புலியூர்க் கேசிகன் எழுதிய **முத்தமிழ் மதுரை** என்ற நூலின் பின்னைய பதிப்பொன்றின் (சென்னை 18: மங்கை வெளியீடு, டிசம்பர் 2010) பக்கம் 42இல், சிலப்பதிகாரத்தில் 'கோவலன் மதுரையைக் கண்டதனை'' இவ்வாறு கூறுகின்றது:

'பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்,
அந்தியும், சதுக்கமும், ஆவண வீதியும்,
மன்றமும், கவலையும் மறுகும்- திரிந்து,
விசும்புஅகடு திருகிய வெங்கதிர் நுழையாப்
பசுங்கொடிப் படாகைப் பந்தர் நீழல்''

இச்செய்யுளுக்கான புலியூர்க் கேசிகரின் உரையில் 'அந்தியும், சதுக்கமும், **ஆவணவீதியும்,** மன்றமும், கவலையும், மறுகும் ஆகிய அனைத்தும் அதன் பின்னர் அவன் சுற்றித் திரிகின்றான். திரிந்த பின்பு, உச்சிவெயிலும் நுழையாதபடி நெருக்கமான பெரிய வீடுகளையுடையதாகப் பசுமையான கயற்கொடிப் பந்தரின் நிழலின் கீழாக, பாண்டியன் காத்துவரும் பேரூரைக்கண்டு மகிழ்வு எய்திய அக்கோவலன், நகரைக் கடந்து, மீண்டும் புறஞ்சிறை மூதூர்க்குத் திரும்பி வருகின்றான்.''

ஒரு காலத்தில் கோவலன் திரிந்ததாகக் குறிப்பிடும் இந்த ஆவண வீதியை கடைகள் மலிந்த பெருந் தெருவாக நம்மால் உருவகப்படுத்திக்கொள்ளவும் முடிகின்றது.

ஆவண வீதி பற்றி, 'யாழ்ப்பாண வைபவ கௌமதி'' யிலும் அதன் ஆசிரியர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (1860 - 1944) 1918இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளார். இதில் 'ஆவணவீதி'' (கடைத்தெரு) பற்றி பக்கம் 189இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

'123-ம் 124-ம் பக்கத்திற் குறிக்கப்பட்ட சாயக்காரரைக்குறித்து பிந்திக் கிடைத்த சில குறிப்புகள். ஒல்லாந்த அரசர் காலத்தில் முன் குணபூஷண சிங்கைஆரியன் என்னுமரசன் வடதேசத்திலுள்ள மருங்கூரிலிருந்து நாய்க்கரில் ஒரு குடியையும், கவறைச்சாதியாரில் ஒருகுடியையும் அழைப்பித்து நல்லூரிலுள்ள கோட்டைக்குத் தென்மேற்குப் பாகமாயிருந்த **ஆவண வீதியில்** குடியேற்றி வைத்தனரென்றும், அவரீர் மரபினர் எனினும் ஓர் வினையினராயிருந்தமையின் இருபாலாரும் ஒருபாலீர்போல் விளங்கினரென்றும், அவர்கள் சித்திர விசித்திரமான உடற்சாய்கை என்னும் வேலைகளை அரசர்க்குச் செய்து கொடுத்துப் பரிசுபெற்றனரென்றும், அரசர் அவைகளை கோவற் திரைகளாகவும், அரண்மனையலங்கார மேற்கட்டிகளாகவும் கட்டிவந்தனரென்றும்.'' ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

## ஆவண மாக்கள் (பிரமாணம் வாங்குவோர்)

தமிழ்ப் பேரகராதியில் (Tamil Lexicon) **'ஆவண மாக்கள்''** என்றொரு சொல் காணப்படுகின்றது. **பிரமாணம் வாங்குவோர்** (those who administer the Oath) என்று இதற்கான அர்த்தம் வழங்கப்படுகின்றது. ஆவண மக்களா மாக்களா என்ற சந்தேகம் தோன்றக்கூடும். பண்டைய தமிழ் மொழிப்பயன்பாட்டில் 'மாக்கள்'' என்ற சொல் மக்களைக் குறித்தே வழங்கிவந்துள்ளது. காலக்கிரமத்தில் மாக்கள் விலங்குகளைக் குறிப்பதாக மருவுற்றது. **அகநனூறு (பாலை-77)** செய்யுள்களில் இருந்து இதற்கான பயன்பாட்டை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

'கயிறு பிணி குழிசி ஓலை கொண்மார்
பொறி கண்டு அழிக்கும் **ஆவண மாக்களின்,**
உயிர் திறம் பெயர, நல் அமர்க் கடந்த
தறுகணாளர் குடர் தரீஇ, தெறுவர,
செஞ் செவி எருவை, அஞ்சுவர இகுக்கும்'

இங்கு ஆவண மாக்கள் என்பதற்கு 'ஆவணப் பெரியோர்'' என்று சில உரையாசிரியர்கள் கௌரவமாகக் குறிப்பிடுகிறார்கள். இன்று இவர்களை 'Archivist'' என்று பொருள்கொள்ளமுடிகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணக்களம்/ ஆவணக்களரி

தமிழ்ப் பேரகராதியில் **ஆவணக்களம்/ ஆவணக்களரி** ஆகிய சொற்களுக்கு ஊரறிய விற்பனை செய்யுமிடம், பத்திரப் பதிவுச்சாலை (Registration Office) ஆகிய அர்த்தத்தை வழங்குகின்றார்கள்.

10ஆம் நூற்றாண்டுகளில் பயன்படுத்தப் பட்டதாகக் குறிப்பிடும் '**ஆவணக்களத்தே** அறக்கொண்டு விற்று", '**ஆவணக்களரியே** காட்டிக் காப்பிட்டு", 'எப்பேர்ப்பட்டதும் **ஆவணக்களத்தேய்ச்** செலவறக் கொண்டு" (South Indian Inscription- SII, xix, 191) 'எட்டு மஞ்சாடிப் பொன்னும் **ஆவணக்களியேய்** அறக் கொண்டு" (South Indian Inscription- SII, xvii, 636), 'செம்பியன் முனைப்பாடி மூவேந்த வேளான் **ஆவணத்து** இருபது செறுவு கொண்டு" (South Indian Inscription- SII, vii, 811) போன்ற உதாரணங்களை தென்னிந்திய தமிழ்க் கல்வெட்டுகளில் காணமுடிகின்றது.

## ஆவணவோலை

**ஆவணவோலை** என்ற சொல்லுக்கு உரிமைப் பத்திரம் (Title Deed), அடிமை முறி/ அடிமைப்பத்திரம் (Bond of a Slave) போன்ற விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. பணம் கொடுத்து வாங்கும் அல்லது பணத்துக்காக உரிமை மாற்றம் பெறும் அடிமைகளினதும் காணிகளினதும் உரிமங்களை ஆவணங்களாக அந்நாட்களில் குறிப்பிட்டுவந்துள்ளனர்.

கந்தபுராணம் (வழிநடைப் படலம்(23), 12ஆவது செய்யுளில் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகின்றது.

சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமண வேளையில் அங்கு சுந்தரரைத் தடுத்தாட்கொள்ளும் நோக்கில் சிவபெருமான் வந்து திருவிளையாடல் புரிந்த நிகழ்வைக் குறிக்கும் ஒரு செய்யுளில் 'ஆவணவோலை" என்ற பதம் குறிப்பிடப்படுகின்றது. இது அடிமைப்பத்திரமாக, உரிமைப் பத்திரமாக அங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மண்ணுல கிறைவன் செய்யும் மணந்தனை விலக்கி எண்டோள் அண்ணலோர் **விருத்தன் போல்வந் தாவண வோலை காட்டித்** துண்ணென வழக்கில் வென்று சுந்தரன் றனையாட் கொள்ளும் பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப் பெரும்பதி தனையும் கண்டான்." (12)

ஆவணவோலையை ஓலையில் எழுதிய ஆவணம் எனவும் கொள்ளலாம். 'விலையாவண ஓலை எழுதி விற்று" என்ற வரிகள் தென்னிந்திய கல்வெட்டுகளில் காணப்பட்டுள்ளன. (South Indian Inscription- SII, xiv, 19)

பன்னிரு திருமுறை (மூன்றாம் திருமுறை)யில் வரும் ஒரு தேவாரம் (4097)

நாவணங் கியல்பா மஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டாற்
றொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங் கியல்பா மிராவணன் றிண்டோ
ளிருபது நெரிதர வூன்றி
**ஆவணங் கொண்ட** சடைமுடி யண்ண
லாலவா யாவது மிதுவே.

என்று வருகின்றது.

## ஆவணக்காறன்

**ஆவணக்காறன்** என்ற சொல் கடைவைத்து வணிகம் செய்பவன் என்ற அர்த்தத்தில் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

'**ஆவணக்காறனும்** உலகனும் உள்பசும்பைக்கா(றனா)சி தொழில் வாரியநும்" என்ற கல்வெட்டு வாசகம் பற்றி தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆய்விதழான 'ஆவணம்" இதழின் 2ஆவது இதழில் (6 - 8) குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆவணம்- மதுபானசாலை/ கேளிக்கை விடுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணம் என்ற சொல் ஒரு காலகட்டத்தில் மதுபான சாலையாகவும், பெண்களுக்கான தெளிக்கை விடுதியாகவும் கூட குறிப்பிடப்பட்டுள்ளது.

'பட்டினப்பாலையில்'' மகளிர் வெறியாடி விழாக் கொண்டாடும் ஆவணம் -என்ற பகுதியில்,'குறுந் தொடை நெடும் படிக்கால் கொடுந்திண்ணை, பல் தகைப்பின்'' என்ற செய்யுள் தொடரின் இறுதியில்,

'வளி நுழையும் வாய் பொருந்தி,
ஓங்கு வரை மருங்கின் நுண்தாது உறைக்கும்
காந்தள் அம் துடுப்பின் கவிகுலை அன்ன,
செறி தொடி முன்கை கூப்பி, செவ்வேள்
வெறி ஆடு மகளிரொடுசெறியத் தாஅய்,

குழல் அகவ, யாழ் முரல,
முழவு அதிர, முரசு இயம்ப,
விழவு அறா, வியல் **ஆவணத்து**,'' என்று கவிஞர் முடிக்கிறார்.

'ஆவணத்தில் மகளிர் வெறியாட்டு நிகழ்வினைக் கூறும் இப்பாடல் வரிகளில் காணப்படும் ஆவணம் என்ற பதம் இன்றைய மதுச் சாலையினைக் குறித்து நிற்கின்றது.

சிங்கள மொழி அகராதிகளில் காணப்படும் 'அவண'' (Awana) என்ற சொல்லுக்கு 'சந்தை'' அல்லது 'கடை'' என்றே பொருள்கொள்கிறார்கள். 'அவண்ஹல'' (Awanhala) என்ற சொல்லுக்கு தவறணை, மதுபான விற்பனை சாலை ஆகிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இன்றும் இலங்கையின் சிங்களப் பிரதேசங்களில் 'ஆபனசாலாவ'' என்று உணவகங்களை (Canteen) குறிப்பிடுவதையும் அவதானிக்கமுடிகின்றது.

மேற்கண்ட உதாரணங்களின் வாயிலாக 'ஆவணம்'' என்ற சொற்பதம் 'சுவடி'' என்ற கருத்துக்கும் அப்பால் பல்வேறு விளக்கங்களையும் கல்வெட்டுக்களில் தொடங்கி, சங்க இலக்கியங்களிலிருந்து பிற்கால இலக்கியங்கள் வரை தந்துவந்துள்ளது என்பதை அவதானிக்கமுடிகின்றது.
1970களின் நடுப்பகுதியில் 'ஆவணம்'' என்ற சொல் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஈழத்துத் தமிழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் அறிமுகமாகின்றது. ஆங்கிலத்தில் 'Document'', 'Archival Materials'' என்ற பதங்களுக்கு இணையாக 'ஆவணம்'' என்ற சொல் தமிழ்ச் சூழலில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. 'சுவடிகள் காப்பகம்'' என்ற பழைமையான சொல்லுக்கு இணையாக விரிந்ததொரு பரப்பில் 'ஆவணக் காப்பகம்'' என்ற சொல் புழக்கத்திற்கு அக்காலத்தில் வந்திருந்தது. இதனை சமூகமயப்படுத்தியதில் இலங்கை நூலகச் சங்கத்திற்கும் இலங்கை தேசிய நூலகத்திற்கும் முக்கிய பங்கு இருந்துவந்துள்ளது.

இலங்கையில் தேசிய நூலகம் 1970ஆம் ஆண்டு 17ஆவது இலக்க பாராளுமன்ற சட்டத்தின்படி இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. 27.04.1990 அன்று கொழும்பில் புதிய கட்டிடத்தில் இலங்கை தேசிய நூலகமாக உருப்பெற்றது. 1998ஆம் ஆண்டில் இலக்கம் 51 புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் 'தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை'' (National Library Services and Documentation Centre) என்று பெயரிடப்பட்டது. அதன்வழியே 'ஆவணவாக்கல்'' என்ற சொல் இலங்கையில் அதிகாரபூர்வமாகப் பயன்பாட்டுக்குள்ளாகியுள்ளது.

தமிழில் நூலகவியல் கல்வியை ஆரம்பித்தவர்கள் 'சுவடிகள்'' என்ற பதத்தினை ஏட்டுச் சுவடிகளையும், பத்திரிகையல்லாத பண்டைய பதிவுகளையும் குறிப்பதற்குப் பயன்படுத்திவந்தார்கள். மேலும் சுவடிகள், சுவடியாக்கம் என்ற பதங்களுக்கு விரிவான தளத்தை உருவாக்கும் நோக்கில் ஆவணம், ஆவணப்படுத்தல், ஆவணவாக்கம் என்ற சொற்களை பிரதியீடு செய்யத் தலைப்பட்டனர். இது ஆங்கிலத்தில் வழக்கிலிருந்த 'Document'', 'Archives'' ஆகிய பதங்களுக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டது.

ஆ-பணம் என்ற வடமொழிச் சொல்லின் மருவலாக மாத்திரமன்றி, பணத்திற்காக ஒரு பண்டத்தை விற்பனை செய்யும் ஒருவர் அதனை ஓலையில் பதிவுசெய்து வைப்பதையும் 'ஆவணம்'' குறிப்பிடுகின்றது. இன்று 'பற்றுச்சீட்டு'' என்று நாம் பரவலாகக் குறிப்பிடும் சொற்பதத்திற்கு இணையானதாகவே அந்நாளில் 'ஆபணம்'' என்ற சொல் குறிப்பிடப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. காலக்கிரமத்தில் இந்த ஆவணம் காணி விற்பனையின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்யும் 'காணி உறுதிப் படிவத்தையும்'' குறிப்பிடுவதாயிற்று.

எமது சமூகத்தில் 'காணி உறுதி'' என்பது சாதாரண பற்றுச்சீட்டுக்கும் அப்பால் முக்கியமான ஒரு 'ஆவணம்'' என்றாகிவிட்டது. காலக்கிரமத்தில் காணி உறுதிக்கெனப் பயன்படுத்தப்பெற்ற இந்தச் சொல்லின் பயன்பாடு விரிவாகி முக்கியமான வரலாற்றுச் சுவடிகள் அனைத்துக்கும் பொதுவாக 'ஆவணங்கள்'' என்று வழக்கத்தில் படிப்படியாகப் பயன்படுத்தப்படலாயிற்று.

பின்னாளில் கலைச்சொற்களை தேர்வுசெய்யும் கல்வித் திணைக்களக் குழுக்களுக்கும் சுவடிகள் என்ற சொல்லுக்கு விரிவான அர்த்தத்தைத் தரும் வகையில் ஆவணங்கள் என்ற சொல்லே பிரதியீடாகக் கொள்ளப்பட்டது. பின்னாளில் ஆவணங்கள் என்ற பதம் பல கிளைகளாகப் பிரிந்து இன்று ஆவணவாக்கல், ஆவணமாக்கல், ஆவணகம், ஆவணக் காப்பகம் எனப் பல்வேறு சொற்களாக விரிவடைந்து அன்றாடப் பயன்பாட்டில் நிலைபெற்றுள்ளன.

இந்நிலையில் அன்றைய 'ஆவணம்'' என்ற மூலச் சொல்லின் அர்த்தம் இன்றைய காலகட்டத்தில் வழக்கிலுள்ள 'ஆவணம்'' என்ற சொல்லுக்கு பொருத்தமற்றது என்றும் அதனை வழக்கிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு முன்னைய 'சுவடிகள்'', 'சுவடிச்சாலை'' என்ற பதங்களை பிரதியீடு செய்யவேண்டும் என்று சில குரல்கள் அண்மைக்காலத்தில் ஆங்காங்கே எழுந்தவண்ணம் உள்ளன.

அதே வேளை, 'ஆவணம்'' என்றசொல் அன்று வர்த்தகம் சார்ந்த பணம் சம்பந்தப்பட்ட பதிவோலைகளுக்கென மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை எனவும், அது பல்வேறுபட்ட பிற அர்த்தங்களுடனும் வழக்கில் தொடர்ந்து இருந்து வந்துள்ளதால் இதனை மாற்ற வேண்டிய அவசியமில்லை எனவும் ஒருசாரார் மறுதலித்து வருகின்றனர். இன்றைய நிலையில் ஆவணம் (Document) என்ற சொல்லின் பயன்பாடு வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மிக விரிவானது என்றும், அதற்குப் பிரதியீடாக, குறுகிய நோக்கில் சிந்தித்து, நவீன தொழில்நுட்பப் பயன்பாடுகள் வளர்ச்சியுறாத வரலாற்றுக்காலமுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்ட ‘சுவடிகள்’’ என்ற பதத்தை ஆவணத்திற்காக மீள் அறிமுகம் செய்வது தேவையற்றது என்பதும் இவர்களது வாதமாகின்றது.

விக்கிபீடியாவின் வரைவிலக்கணத்தின் படி, ‘ஆவணம்’’ என்றால் வேறு ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு வெளியிட்ட கடந்த கால வரலாற்றுப் படைப்புகள் என்பதையே பொதுவாக ஆவணம் என்று நினைக்கின்றார்கள். உதாரணத்திற்கு புத்தகங்கள், பத்திரிகைகள், புகைப்படங்கள், ஒளியும் ஒலியும் என்று கடந்த கால படைப்புகளையே ஆவணம் என்று கருதுகின்றனர்’’ என்று அறியமுடிகின்றது. (A document is a written, drawn, presented, or memorialized representation of thought, often the manifestation of non-fictional, as well as fictional, content. The word originates from the Latin Documentum, which denotes a "teaching" or "lesson": the verb doceō denotes ‘to teach’ )

இன்றைய தமிழ்ச் சூழலில் ‘ஆவணப்படுத்தல்’’ (Documentation) என்னும் சொல் ‘குறித்த ஒரு விடயத்தின் அல்லது பொருளின் வரலாற்றை பதிவுசெய்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் செயல்முறைக்குக் கையளித்தல்’’ என்ற கருத்தினையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு பிரயோகிக்கப்படுகின்றது. ‘ஆவணம்’’ என்பது, பதிவுசெய்தல், மதிப்பீடுசெய்தல், தெரிவுசெய்தல், அதனைப் பேணிப்பாதுகாத்தல், அதனை சமூகத்தினரிடையே பரவலாக்கம் செய்தல், பயன்படுத்துதல் என்று பல்வேறு படிமுறைகளின் ஊடாகவே உருவாக்கப்பட்டு பேணப்படுகின்றது. ‘ஆவணம்’’ என்பது வரலாற்றுத் தகவல்களை மாத்திரம் உள்ளடக்கியதல்ல. அது தனிமனிதர், சமூகம், தேசம், என்பவற்றின் அசைவியக்கம், மொழி, பண்பாடு, பாரம்பரியம், தொன்மை, அரசியல், பொருளாதாரம், சமய நம்பிக்கை எனப் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியதொன்று.

இன்று மக்களின் வாழ்வில் பின்னிப் பிணைந்து போயுள்ள ‘ஆவணம்’’ என்ற சொல்லை வெளியே எடுத்து அதற்குப் பிரதியீடாக மற்றொரு சொல்லைப் புகுத்துவதென்பது தனிமனித விருப்புவெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது. ‘நாற்றம்’’ என்ற சொல்லை மீண்டும் நறுமணமாக்குவதற்கு சமூகத்தில் நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் ஒன்றே மாறாதது. (இக்கட்டுரைக்கான தேவையை எனக்கு அடிக்கடி இடித்துரைத்தும், தேவைப்படும் போதெல்லாம் தனது அறிவுத் தேட்டத்திலிருந்து தகவல்களை பகிர்ந்துகொண்ட நோர்வே வாழ் நண்பர் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி அவர்களுக்கு எனது நன்றி).

**என்.செல்வராஜா**
**நூலகவியலாளர், லண்டன்**



**டிஜிட்டல் அறிவு மையத்தின் மூன்று மாத கற்கை நெறியில் பங்குபற்றிய மாணவர்களின் புத்தாக்க கண்காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளங்காங்கிதமும் புண்படலலும்

சாலையோர கடையில் ஒருநாள் எங்கள் எல்லோரையும் ஒரு குட்டி வண்டி இறக்கிவிட்டுசென்றது. பிறந்த குழந்தைபோல் நெகிழி பைக்குள் சொகுசாய் கிடந்த என்னை கடைக்காரர் தன் பொருள் பீடத்தில் எடுத்து அடுக்கினார். என்னைப்போன்று பலர் அதில் புதிதாய் மினுமினுத்தனர். கடைக்கு வருவோர் போவோர் பிறந்த குழந்தையை தொட்டு தூக்கி முகர்ந்து மகிழ்வதுபோல் என்னையும் ஆராதித்தனர். ஆனால் நாட்காட்டி காகிதங்கள் கிழிந்தன. என்னைப்போன்ற மற்றவர்கள் பலர் அக்கடையிலிருந்து விடைப்பெற்றனர். புதிதாக பலரும் வந்து கொண்டிருந்தனர். நான் மட்டும் இன்னும் தங்கியிருப்பது குறித்து கடைக்காரர் அலுத்துப்போனார் போலும், ஒருநாள் பீடத்தின் கடைசி வரிசையில் இருந்த என்னை கையில் எடுத்த அவர் நன்றாக துடைத்து முன்வரிசையில் வைத்தார். வரிசை மாறினால் வரவு வந்துவிடும் என்பது பொய்த்தது. மீண்டும் கடைசியில் போய் கிடந்தேன். நாட்கள் பல கடந்தாலும் பெண்பிள்ளை ஒருத்தி தன் தாயுடன் அக்கடைக்குள் நுழைந்தாள். அங்குமிங்குமாக அவளது கண்கள் அலைபாய்ந்தோடியது, இறுதியாக என்னை கரைசேர்ந்தாள். பழுப்புநிற கடதாசிபைக்குள் பக்குவமாக வைக்கப்பட்ட நான் கடைக்காரரின் பார்வையில் தெரிந்த நிம்மதியுடன் கடையிலிருந்து விடைபெற்றேன். இந்தப்பிள்ளையோ என்னை அப்படியே அவளது அக்காவின் பிறந்தநாள் பரிசாக கொடுத்து மகிழ்ந்தபோது இவ்வளவு நாட்கள் தவம் கிடந்த வரத்தை நான் பெற்று நெகிழ்ந்தேன்.

சுமார் இருவருட காலமாக அவளுடன் தான் வசித்து வருகிறேன். எங்கு வெளியில் சென்றாலும் என்னையும் மறவாது எப்போதும் கூட்டிச்செல்வாள். சௌகரியமாக அவள் கைகளில் இருந்து நழுவாமல் தழுவிக்கொண்டே இருப்பேன். நானும் நன்மதிப்புடன் பக்க உறுதுணையாக அவளுடன் இருந்து வந்தேன். அன்பின் அடையாளமாக நான் அவளுக்கு கிடைத்திருந்ததாலும் உரிய மரியாதையை அவள் அளித்து வந்தாள். ஆனால் அவை எல்லாம் நான் அவளிடமிருந்து பறிபோகும் வரையிலே நீடித்திருந்தது.

ஆம் அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை அவள் எனக்குள் இருந்த சில பணநோட்டுக்களை சரிபார்த்துவிட்டு அவளது தோள் பைக்குள் எடுத்துவைத்தாள். ஏற்கனவே அதற்குள் சில கட்டுப்புத்தகங்கள் இருப்பதை கண்டேன். அவள் மினக்கட்டு தன் கையால் செய்த கட்டுப்புத்தகங்களாக அவை இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு நாள் தன் தாயிடம் அவள் செய்த கட்டுப்புத்தகங்களுடன் வரும் ஞாயிறு காலை தங்கை வீட்டுக்குச் சென்று வர தீர்மானித்திருப்பதாக பேசிக்கொண்டிருந்ததை மேசைமேல் இருந்த நான் கேட்டு அறிந்தேன்.

அதற்கு தான் இப்போது புறப்படுகிறாள் போலும். "இதுவென்ன அவளின் நறுமண திரவியத்தின் மணம் வருகிறது, கூடவே வாகனங்களின் சத்தமும் கேட்கிறது. வீட்டை விட்டு கிளம்பி சாலையோரம் வந்துவிட்டாள். அப்படியென்றால் வழமையாக முச்சக்கர வண்டியை பயன்படுத்தும் அவள் இம்முறை தனியாக பேருந்தில் சென்றுவர முடிவு செய்திருக்கிறாளா? இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள், என்றாலும் வெளியில் நடமாடுவது இப்போதைய காலக்கட்டதில் சில அபாயங்களை சந்திக்க நேரிடலாம் என்பதை அவள் பெரிதாக கருதவில்லையா?! ம்ம்...என்ன பெரிய அபாயம்? பெண்பிள்ளைகள் துணிவு கொண்டாள் பணியாதா அவை?! பாட்டையும் பயனையும் யோசித்தபின் அமைதியானேன்.

அவளது இருப்பிடத்திலிருந்து அரைமணிநேர தூரத்தில் இருக்கும் தங்கையின் வீட்டுக்கு நானும் அவளுடன் சென்று இருக்கிறேன். அப்போதெல்லாம் நான் தோல் பைக்குள்ளேதான் இருப்பேன். வெளியே வருவதற்கான அவசியமே இருக்காது. எனினும் பேருந்தின் தொலைதூர தனிப்பயணத்தை ரசிக்காமல் இருக்கமுடியுமா? அதுவும் நகரம் தாண்டிய யாழ் மண்ணின் கிராமங்கள்; பச்சைப்பேசல் வயல் வளங்களின் காட்சிகளையும் ஊர்மனைகளின் தோற்றங்களையும் கடந்து வருகையில் இன்னமும் பூமி உயிர்ப்புடன் வழிவிடுவதை எப்படி கடப்பது என எண்ணும் அவளின் சிந்தனை தோளில் இருந்து மடியில் கைகளால் பதித்துவைக்கப்பட்டு இருக்கும் எனக்கு தெரியாதா!

சன நடமாட்டம் குறைந்திருந்த காலை நேரமும் பரபரப்பு இல்லாத சூழலும் பேருந்து அமைதியாய் அவளை சேர வேண்டிய இடம் சென்று நிறுத்தியது. பேருந்தை விட்டு இறங்கிய இடத்தில் இருந்து தோள் பைக்குள் அவள் கையின் துலாவலில் நான் அந்தபக்கம் சாய்ந்து கைப்பேசி எடுப்பதற்கு வழிவிட்டேன். சற்று நேரத்திற்குள் அவளது தம்பியின் குரல் கேட்டது.

தங்கை வீட்டுக்கு தம்பி வந்து அழைத்துகொண்டு போக வந்துள்ளான் போலும். குறு நடையில் அதோ இளைப்பார அவர்களின் வீட்டுக்கதிரையில் இறக்கிவைக்கப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்குடும்பத்துடன் உண்ட மதிய உணவின் மணம் அடுத்த சில மணிநேரங்களில் வந்தது, அது அவளின் கைதான். பையில் இருந்து தங்கையிடம் கையளிப்பதற்காக கொண்டுவந்த கட்டுப்புத்தகங்களை எடுத்தாள். இடமில்லாமல் ஒரு ஓரமாக நின்றுவந்த எனக்கு கொஞ்சம் சுகமாய் படுத்துக்கொள்ள வழி கிடைத்தது.

அசந்து உறங்கிக்கொண்டு இருந்த என்னை அவளின் கை மீண்டும் உலுப்பி எழுப்பியது. நான் எங்கே இருக்கிறேன் என சுற்றும் முற்றும் பார்த்தேன். இன்னமும் அவளின் தங்கை வீட்டில்தானே இருக்கிறேன் அவசியமில்லாமல் என்னை எடுக்கமாட்டாளே என வியந்து அவள் முகத்தை நோக்கினேன். முகத்தின் பிரகாச ஒளி அவள் மனதில் ஏற்பட்ட புளங்காகிதத்தால் என்பதை ஊகித்தேன். அதற்கு பின்னால் உள்ள காரணத்தை அறிந்துகொண்டேன். மீதமாகும் பொருட்களினால் முயற்சித்து தானே உருவாக்கிய கட்டுப்புத்தகங்கள் முதன்முதலாக இன்னார் என்று அறிமுகமற்ற நபர்களுக்கு விலையாகப்போவதில் ஏற்படும் இன்பமும் அதற்கு உடனே கிடைத்த பணமும்தான். அந்தப்பணத்தை வைப்பதற்காகத்தான் இப்போது அவள் என்னை திறந்திருக்கிறாள். மறுபடியும் என்னை தோள் பைக்குள் வைப்பதற்கு அவசரப்பட்டாள். அவளின் நிதானம் அவதானமின்றி காணப்பட்டதை உணர்ந்தேன். என்ன இது! தோள் பைக்குள் ஏற்கனவே இன்னொரு துணிப்பை அடசிக்கிடக்கிறது. மேலாப்பில் என்னைவைத்துவிட்டு வேகமாக தன் தோளில் மாற்றிக் கொண்டுவிட்டாளே.

அப்படியானால்.. இன்று மாலையே வீடு திரும்புகிறாளா? சித்தி வீட்டுக்கு வந்தால் உடனே திரும்பும் பழக்கம் இல்லாதவள்' வழக்கத்தை மறந்துபோனாளா இவள்! தங்கையின் குரலும் அருகில் கேட்கிறதென்றால் மாலை நேர வகுப்பிற்காக செல்லும் தங்கையுடன் இவளும் புறப்பட்டு வெளியே வந்துவிட்டாள் போலும். பிரதான சாலையோரம் வந்து ஒரு மணிநேரமாக என்னையும் சுமந்தபடி நிற்கிறாள்! அன்றைய நாளின் இறுதி பேருந்து வந்துசேர இவ்வளவு நேரமாகும் என நினைத்திருக்கமாட்டாள். ஓரளவு ஆட்களுடன் பேருந்து வந்து சேர்ந்ததையடுத்து இருக்கையில் இருந்து என்னை சுமந்து நிற்கும் தோள் பையை மடியில் வைத்துக்கொண்டாள். வேகமாக நகர்ந்த பேருந்தில் மெல்ல மெல்ல சனக்கூட்டம் ஏறி வருவதை அமுக்கத்தில் உணரமுடிந்தது. இது என்ன..? என் மேலே பாரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக்கிறது. யாரோ ஒருவரின் பெருத்த பையை வாங்கி வைத்திருக்கிறாள் இவள்.
அடுத்த அரைமணிநேரத்திற்குள் ஊரின் பிரதான பேருந்து தரிப்பிடத்தில் ஒரு கூட்டம் இறங்கிச்சென்றதால் என் மேல் கனத்துக்கொண்டிருந்த பை அகற்றப்பட்டது. ஆனால் அடுத்த நொடி நான் ஏதோ தரைக்கும் சக்கரத்திற்கும் இடையில் சிக்கிக்கொண்டதுபோல் தவிக்கிறேன். சிக்கிக்கொண்டு உருண்ட பின் மீண்டும் சிக்கிக்கொண்டும் வருகிறேனே... என்னை வைத்துக்கொண்டு இவள் என்னதான் செய்கிறாள்...! இன்னும் இந்த பேருந்தை விட்டு பாதிக்கூட்டம் இறங்கவில்லையா? இந்த கூட்டத்தை தாண்டி இறங்கும் வாசல் வரை அவள் வந்து சேர்வதற்குள் நான் இப்படி பாடுபடுகிறேன்.. இத்தனைக்கும் இந்த பிரதான பேருந்து தரிப்பிடத்தை தாண்டி அடுத்துவரும் தரிப்பில் அவள் இறங்க வேண்டும். அவ்வாறு இறங்கினால் வீட்டுக்கு நடந்து செல்லும் தூரம் குறைவு' என்பது நான் அறிந்த விடயம்தான், அதற்காக இவள் இப்படியா அவசரப்படுவது என்னவாயிற்று இவளுக்கு?! நானோ தோள் பையின் மேலாப்பில் உள்ளேன். தோள் பையின் வாயை கூட இழுத்துப் பூட்டாமல் வந்திருக்கிறாளே!

முதலையின் வாய் போல அது திறந்தபடியே உள்ளது, கொஞ்சம் கூட கவனிக்கின்றாளே அதை!? இந்த சனங்களோ நகர்வதாக இல்லை. நெருக்கி அடித்தபடி வருகிறது. அந்தோ! ஆ! யாரின் கை இது? யாரிவன்....? அவளது இடுப்பிலிருந்து விலகி எங்கோ சிக்கிக்கிடக்கும் தோற்பைக்குள் இவன் எவன் கையை விடுகிறான். புகைநாற்றம் அனல் அடிக்கிறதே! கண்களால் என்ன மேய்கிறான்? அடக்கடவுளே என்னைத்தொட்டு பிடித்துக்கொண்டான்! யாருக்கும் தெரியாமல் தனக்குள் மறைக்கிறானே. ஓ..! என் அன்பே! இங்கே திரும்பி ஒரு முறை என்னை பார்! வேகமாக ஓடும் பேருந்தின் ஜன்னலின் ஊடாக சனநெருசலிலும் அந்திசாயும் தருணத்தை அல்லவா அவள் விழிகள் நோக்கிக்கொண்டு இருக்கிறது. கனப்பொழுதில் நிறுத்தம்' வந்துவிட்டதால் சுய நினைவின்றி பேருந்தை விட்டு இறங்கி போகிறாள். தோள் பை மட்டும் சிக்கலில் இருந்து விடுபட்டு அவளுடன் முதுகில் போய் மோதிச்செல்கிறது. என்னை மறந்தாள். தன்னையும் மறந்து வேகமாக நடை போட்டு வீட்டுக்கு போகிறாள். நான் அவளிடமிருந்து பறிபோனதை வீடு சென்ற பின்னே தெரிந்து கொள்ளப்போகிறாள். போகட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கென்ன கால்களாக இருக்கிறது? இறங்கி உடனே அவள் பின்னால் ஓடுவதற்கு.. அவளின் விதி அவ்வளவுதான்..!
இவன் இன்னும் எவ்வளவு நேரம் என்னை இடுப்பில் மறைத்து செருகிவைத்திருக்கப்போகிறான். கசியும் வியர்வையில் குளித்தபடி மிருதுவான என் தோல் நசிப்பட்டு துன்பப்படும் என் வாழ்க்கையை அவளிடம் இருந்துவந்த வாழ்க்கையுடன் ஒப்பிட்டு நோகிறேன். இதோ கடைசி பேருந்து தரிப்பிடம் வந்து சேர்ந்த பேருந்திலிருந்து இறங்குகிறான். அவன் எப்படியும் என்னை வெளியே எடுத்து பரவிக்கிடக்கும் பழக்கமற்ற சூழலை காட்டப்போகிறான். நான் இவ்வளவு காலமாக பத்திரப்படுத்தியிருந்த அவனது மிகப்பெரும் தேவையான பணத்தை அபகரிக்கப்போகிறான். அத்தோடு என்னை விட்டு விடுவானா? அல்லது தூக்கி சாக்கடையில் எறிவானோ? எதுவும் தெரியா அச்சத்தின் உச்சத்தில் இருக்க எனது பூட்டிய இழைவரி திறக்கப்படுகிறது. ஐயகோ! நான் நினைத்தது போல் பணம் முழுவதையும் வளித்து தன் கைக்குள் அடக்கிகொண்டான். மீதமிருப்பது அவளது அடையாள அட்டையும் வங்கி அட்டையும். அவை இரண்டும் இவனுக்கு அவசியமே இல்லாதது. ஆனால் அவளுக்கு அவைதான் அத்தியாவசியமானது. இந்நேரம் அவள் என்னைக் காணாது தேடி அலைந்து அழுதிருப்பாள். உடனே வங்கி அட்டையை தடை செய்திருப்பாள். ஆச்சர்யம்! அந்த விடயங்கள் இவனுக்கும் தெரிந்திருக்கிறது. இல்லை என்றால் என்னை அபகரித்த அதே பேருந்தின் மேல் கம்பித்தட்டுக்குள் மறுபடியும் செருகி விட்டிருக்கமாட்டான்.

ஆம்.. கறல் பிடித்த இரும்புக்கம்பித்தட்டில் பரிதாபமாக கிடக்கும் நான் இப்போது நம்பிக்கொண்டிருப்பதேல்லாம் மீண்டும் அவளிடமே சேர்ந்துவிடவேண்டுமென்பது மட்டுமே. அப்போதுதான் நான் பட்ட வேதனை எல்லாம் மறையும். பல கெட்டவர்களை போல ஒரு நல்லவர் இங்கே இருக்கமாட்டாரா? என்னை கண்டெடுத்து அவளிடமே கொடுக்கமாட்டாரா? என் நம்பிக்கை வீண் போகவில்லை. இதுதான் பேருந்து எனும் அடையாளமே தெரியாமல் நிரம்பியிருந்த சனக்கூட்டம் இப்போது இல்லை. வெறுமையான பேருந்து, எங்கோ ஒரு வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது போலும். இரவைக்கடந்து விடியும் பொழுது சூரியனின் கதிர்கள் என்மேல் பொருத்தப்பட்டிருக்கும் தங்க நிற கவச அங்கியில் பட்டு ஒளி தெரிக்கிறது. அதனால் பரவும் சூட்டில் எனக்குள் ஒருவித புத்துணர்வு. யாரோ சிறு குழந்தைகள் உள்ளே பிரவேசிக்கின்றனர். ஆட்டம் போட்டு அங்குமிங்கும் ஓடி விளையாடுகிறார்கள். விளையாட்டின் குதூகலத்தில் பேருந்தில் குதித்து குதித்து பாய்கிறார்கள். இதோ நான் கம்பித்தட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல மெல்ல அரக்கப்பட்டு தரையில் விழுகிறேன். உடனே அதைக்கண்ட ஒரு குழந்தையின் கை என்னை பற்றித்தூக்கியது. அந்த பிஞ்சு கரத்தில்தான் எத்தனை சுகம். என்னைத் தூக்கிக்கொண்டு அந்த வீட்டு பெரியவரிடம் ஓடுகிறது. என்னை நீட்டி அவரிடம் கொடுத்துவிட்டு மீண்டும் பேருந்துக்குள் சென்று அந்த சூதுவாது தெரியாத வெள்ளை மனம் மறைகிறது. அந்தப்பெரியவர் என்னை உற்றுபார்த்தபின் கைப்பேசியை எடுத்து விவரம் கூறிவிட்டு வீட்டிற்குள் சென்று மேசை மீது என்னை வைத்தார். அங்கிருந்து வீட்டின் வாசலை உற்று பார்த்தவாறு காத்திருந்தேன். என் உரியவள் வருகிறாளா? என்னை வாரி எடுத்து அனைத்துக்கொள்வாளா என்ற எண்ணங்களில் மூழ்கினேன்.

சூரியன் அடிவானில் முழுகியதுதான் மிச்சம். இல்லை நான் மனம் தளரவில்லை. அவள் என்னைத்தேடி வருவாள். அதோ வாசலில் புதிதாக இருபெண்மணிகள் முச்சக்கரவண்டியில் வந்து இறங்குகிறார்கள். அதில் ஒருவர் அவளின் தயார், மற்றவர் அயலராக இருக்கவேண்டும், அவள் வரவில்லை! எது எப்படியோ நான் மீண்டும் அவளிடம் கிடைக்கப்போகிறேன். அவளின் தாயிடம் நான் ஒப்படைக்கப்பட்டேன். அதுவே ஆறுதலாக என்னை அணைத்தது. அவர் உள்ளே இருப்பு சொப்புக்களை சரிபார்த்துக்கொண்டார். முன்பின் பழக்கமில்லாத நாலைந்து நபர்களுடன் ஒரு வாகனத்தில் பயணிக்கும் அசௌகரியத்தில் அவளது தாயாரின் தோள் பைக்குள் இருந்து வீட்டுக்கு வந்திறங்கினேன். ஒரு நாள் விட்டுப் பிரிந்த இருவரது கண்ணீரையும் துடைத்தெடுக்கும் மிகச்சிறந்த தருணம் வந்தது. என் அன்புக்குரியவளின் கைகளின் மீண்டும் நான் தழுவி குழாவினேன். வாரி அணைக்கும் முன் கிருமி நீக்கி திரவத்தால் முதலில் நனைத்தாள். அவளது பஞ்சு விரல்களால் எனது பூட்டைத் திறந்து அத்தியாவசிய அட்டைகளை எடுத்துக்கொண்டாள். ஆனால் அந்தப்பணம் இல்லாததின் ஏமாற்றம் சற்றென அவள் முகத்தை சுருக்கியது. தனது அலட்சியத்தால் என்னை பறிகொடுத்த குற்றவுணர்வும் அகத்தில் பதிந்த மோசமான அனுபவமும் முகத்தில் தெரிந்தது. ஒரு சிறு கீறலும் விழாமல் பாதுகாப்பாக அவளிடம் வசித்து வந்த நான் இப்போது இருண்ட தூசி மண்டல பரனின் ஒரு மூலையில் உள்ளேன்.. அங்கேதான் அவள் என்னை வெறுமையாக்கி வைத்துவிட்டாள்..

**சி. ஜெகாரணி**
**உடுவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் வேலிகள்: சில குறிப்புகள்

ஒரு காலத்தில், வீட்டு வளவுகளைச் சுற்றி அமைந்த வேலிகள் யாழ்ப்பாணத்தின் நிலத்தோற்றத்தில் முக்கியமான அம்சங்களாக விளங்கின. அதுமட்டுமன்றி, பாதுகாப்பு, தனிமைக்கான தேவை, அயலவருடனான தொடர்பின் தன்மை, வேலி சார்ந்த தொழில்கள், கால்நடை வளர்ப்பு, வேளாண்மையில் உரப்பயன்பாடு முதலிய பல்வேறு அம்சங்களின் ஊடாக யாழ்ப்பாண வாழ்வியலில் வேலிகளுக்கு முக்கியமான பங்கு உண்டு. நீண்ட காலமாகவே யாழ்ப்பாணத்துக்கு வெளியிலிருந்து வருபவர்களின் கவனத்தைக் கவர்ந்த அம்சங்களுள் வேலி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் எந்தக் காலத்திலிருந்து வேலிகள் புழக்கத்தில் உள்ளன என அறிவதற்குச் சான்றுகள் இல்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் எழுதப்பட்ட நூல்களிலோ அறிக்கைகளிலோ வேலிகள் பற்றிய குறிப்புகள் எதையும் காணமுடியவில்லை. ஒல்லாந்தர்காலத் தொடக்கத்தில் (1658–1665), யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவரான பிலிப் போல்தேயஸ் பாதிரியார் எழுதிய நூலில் யாழ்ப்பாண மக்கள் பற்றியும் அவர்களது பண்பாடு, வாழ்க்கைமுறை பற்றியும் பல தகவல்கள் உள்ளன. எனினும், அவர்களுடைய வீடுகள் தொடர்பாகவோ அவற்றைச் சுற்றி இருந்திருக்கக்கூடிய வேலிகளைப் பற்றியோ தகவல்கள் இல்லை. இதை வைத்து அக்காலத்தில் வேலிகள் இருக்கவில்லை என்ற முடிவுக்கும் வரமுடியாது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும் அதற்குப் பிற்பட்ட காலங்களையும் சேர்ந்த சில பதிவுகளில் வேலிகள் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. முக்கியமாக, 1867 ஆம் ஆண்டைச் சேர்ந்த கொலரா ஆணைக்குழு அறிக்கையில் பல இடங்களில் வேலிகளைப் பற்றியும் சூழலில் அவற்றின் எதிர்மறையான தாக்கங்களைப் பற்றியும் குறிப்புகளைப் பார்க்க முடிகிறது. இந்த அறிக்கையிலுள்ள சில குறிப்புகளிலிருந்து யாழ்ப்பாணப் பண்பாட்டில் வேலிகள் பிரிக்க முடியாத அம்சங்களாக விளங்கியதையும் உணர முடிகிறது. அக்காலத்தில், வேலிகள் யாழ்ப்பாணத்தில் இன்றியமையாத அம்சங்களாக நிலைபெற்றுவிட்டதைப் பார்க்கும்போது, அவை நீண்டகாலம் அங்கே புழக்கத்தில் இருந்திருக்கும் என ஊகிக்கலாம். 20ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வந்து அதைப்பற்றி எழுதிய பலரும் வேலிகளை யாழ்ப்பாணத்துப் பண்பாட்டின் தனித்துவமான அம்சங்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இன, மத, பொருளாதார, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால், யாழ்ப்பாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேலிகள் பயன்பாட்டில் இருந்ததைக் கொலரா ஆணைக்குழு அறிக்கை தெளிவாகவே காட்டுகிறது. அக்காலத்து வேலிகளின் அமைப்பைப் பற்றியும் அறிக்கையில் விவரங்கள் உள்ளன. அறிக்கையில் உள்ளபடி, யாழ்ப்பாணத்து வேலிகள் உயிருள்ள பகுதி, உயிரற்ற பகுதி என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தன. உயிருள்ள பகுதி ஆறு அல்லது எட்டு அங்குல இடைவெளிகளில் நடப்பட்ட கிளுவை (Protium Caudatum), சீமைக் கிளுவை (Balsamodendron Berryi), பூவரசு (Tespesia Populnea) மரங்களால் ஆனது. உயிரற்ற பகுதி பனையோலைகள் அல்லது கிடுகுகளால் ஆனது. இவற்றை உயிருள்ள பகுதியான மரங்களுடன் இணைத்திருப்பர். இந்த உயிரற்ற பகுதி நில மட்டத்திலிருந்து சராசரியாக ஆறு அடி உயரத்திற்கு இருக்கும். இலைகுழைகளைக் கொண்ட உயிருள்ள வேலிகளின் மேற்பகுதி அடர்த்தியாகவும், உயரமாகவும் இருக்கும். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏழு முதல் எட்டு அடி அளவுக்குக் குழைகளை வெட்டிவிடுவர்.

தற்காலத்தில், யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் உயிர் வேலிகள் மிகவும் குறைந்துவிட்டாலும், அவை இருக்குமிடங்களில் மேலே குறிப்பிட்டவாறே அவற்றை அமைத்துப் பேணுகின்றனர். வேலிகளிலிருந்து கிடைக்கும் குழை ஆண்டு முழுதும் கால்நடைகளுக்குத் தீவனமாகவும் பயன்படும். வேலிகளிலிருந்து வெட்டப்படும் குழைகளைத் தோட்டங்களுக்குப் பசளையாக இடுவர். இத்தேவைக்காகக் குடாநாட்டின் பல்வேறிடங்களிலுள்ள வீட்டு வேலிகளில் வளர்ந்திருக்கும் குழைகளைப் பணம் கொடுத்து வெட்டி வண்டிகளிலேற்றித் தோட்டங்களுக்கு விற்பதைத் தொழிலாகக் கொண்டவர்களும் இருந்தனர். அக்காலத்தில் வேறு வகையான வேலிகளும் இருந்திருக்கக்கூடும் எனினும், கொலரா ஆணைக்குழு அறிக்கை அவற்றைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

யாழ்ப்பாணச் சமூகத்தில் மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதில் வேலிகள் முக்கிய பங்காற்றின. வீடுகளையும் அவை அமைந்துள்ள வளவுகளையும் சுற்றி வேலிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று பாதுகாப்பு. பாதுகாப்பு எனும்போது அது, ஆடு, மாடு முதலிய விலங்குகளிடமிருந்து வளவுக்குள் இருக்கக்கூடிய பயிர்களைக் காப்பதும் திருடர்கள் வீட்டிலுள்ள பெறுமதியான பொருட்களைத் திருடிச் செல்வதைத் தடுப்பதும் அடங்கும். இது தவிர, வீட்டில் இருப்பவர்களையும் வீட்டிலும் வளவுக்குள்ளும் நடைபெறக்கூடிய செயற்பாடுகளையும் அந்நியரின் கண்களுக்குப் படாமல் தடுக்கும் மறைப்புகளாகவும் வேலிகள் பயன்படுகின்றன. இதனாலேயே மனிதரின் கண் மட்டத்துக்கு மேல் உயரமாக இருக்கும்படி யாழ்ப்பாணத்தில் வேலிகளை அமைத்தனர். வளவுகளின் எல்லையைப் பாதுகாப்பதும் வேலிகளின் ஒரு நோக்கமாக இருந்தது.

அடிப்படையில் தனிப்பட்ட வாழ்க்கை என்று வரும்போது, தான், தனது குடும்பம் என்ற உள்நோக்கிய வாழ்க்கை முறையை யாழ்ப்பாணத்தவர் விரும்பியதை இந்த நடைமுறை எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம். இதையே, 1903 – 1905 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தவரும் பிற்காலத்தில் பிரபல ஆங்கில எழுத்தாளராக அறியப்பட்டவருமான லெனார்ட் வூல்ஃப் என்பார் யாழ்ப்பாணத்தவரைப் பற்றிக் குறிப்பிட்டபோது, "ஒரு இந்து தன்பாட்டில் தனக்காகவே வாழ விரும்புகிறான், ஒவ்வொரு குடும்பமும், உயரமான வேலிகளால் சூழப்பட்ட வளவுக்குள் அமைந்த வீட்டில் வாழ்கின்றது. என்று எழுதினார்". யாழ்ப்பாணத்தார் இதைத் தமது பண்பாட்டோடு ஒட்டிய இயல்பான அம்சமாகக் கருதினாலும், வெளியார் இதை ஒரு விநோதமான நடைமுறையாகக் கருதியதாகவே தெரிகிறது. இதற்கும் மேலாக, 1867 இன் கொலரா ஆணைக்குழுவினர் சுகாதார நோக்கில் இதை ஒரு விரும்பத்தகாத பழக்கமாகவே கருதினர். வேலிகளை, பெண்ணுரிமை, சமூக சமத்துவம் முதலிய நோக்கு நிலைகளில் இருந்து பார்க்கும் வேறு சிலர், இதைப் பெண்ணடிமைத்தனம், சாதியம் ஆகியவற்றின் வெளிப்பாடாகவும் பார்ப்பதுண்டு.

லெனார்ட் வூல்ஃப் யாழ்ப்பாணத்துக் கிராமங்களைப் பற்றி எழுதும்போது, வீதியோரமாக மைல்கணக்கான தூரத்துக்கு வளவுகள் ஒன்றுடன் ஒன்று நெருங்கி அமைந்துள்ளதாகவும், அதனால், வீதியின் இரண்டு பக்கங்களிலும் வேலிகள் நீண்ட தூரத்துக்குக் காணப்பட்டதாகவும் எழுதியுள்ளார். இருபக்கங்களிலும் வேலிகளுக்குப் பின்னால் இருக்கக்கூடிய மரங்கள் வீதிகளுக்கு மேலாக வளர்ந்து வீதியின் பெரும்பகுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடியிருந்ததால், அவ்வீதிகளில் பயணம் செய்பவர்கள் சூடான, காற்றோட்டமில்லாத சுரங்கப் பாதையூடாகச் செல்வதாக உணர்வர் என்றும் அவர் கூறுகிறார்.
வேலிகள் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் காற்றோட்டத்தைத் தடுக்கிறது என்பதே முன்னர் குறிப்பிட்ட கொலரா ஆணைக்குழுவின் முதன்மையான குற்றச்சாட்டு. காற்றோட்டம் இல்லாததால், காற்றில் ஈரப்பதன் அதிகரிப்பதாகவும், அதனால், மாசடையும் காற்று அப்பகுதியிலேயே நிலைத்து நின்று கொலரா முதலிய தொற்று நோய்கள் பரவுவதை ஊக்குவிக்கிறது என்றும் ஆணைக்குழுவினர் கருதினர். வேலிகளில் உள்ள ஓலைகளும் கிடுகுகளும் உக்குவதனாலும் சூழல் பாதிக்கப்படுவதாக அவர்கள் நம்பினர்.

இவ்வாறு வேலிகளின் பயன்பாட்டுக்கு எதிரான கருத்துக்களை ஆணைக்குழுவினர் தெளிவாகத் தெரிவித்தபோதும், வேலிகளை முற்றாக அகற்ற வேண்டும் என அவர்கள் பரிந்துரை செய்யவில்லை. வேலிகள் யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புள்ளவையாக இருப்பதால், அவற்றை முற்றாகத் தடை செய்வது நடைமுறைச் சாத்தியமாக இருக்காது என்றோ எதிர்ப்புகள் கிளம்பக்கூடும் என்றோ அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆனால், முடியுமான இடங்களில் வேலி அடைப்பதற்கு ஓலைகளையும் கிடுகுகளையும் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று அவர்கள் பரிந்துரைத்தனர். ஆணைக்குழுவின் கள ஆய்வுகளின்போது ஏனைய மரங்களைக் காட்டிலும் பூவரசு மரங்களே உயரமாகவும் அடர்த்தியான இலைகுழைகளுடனும் இருந்ததைக் கவனித்ததால், வேலிகளில் பூவரசு மரங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரை செய்திருந்தனர்.

எல்லை வேலிகளுக்கு உள்ளே கிணறுகளைச் சுற்றியும் வீடுகளுக்கு மறைப்பாகவும் அமைக்கப்பட்ட வேலிகளில் ஓலைகளையும் கிடுகுகளையும் பயன்படுத்துவதை ஆணைக்குழு தடுக்கவில்லை. யாழ்ப்பாணத்தவரின் தனிமைத் தேவை தொடர்பான விடயத்தில் தலையிட அவர்கள் விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது. எல்லை வேலிகளில் ஓலைகளையும் கிடுகுகளையும் தடுக்கும் பரிந்துரைகளும் நடைமுறைக்கு வரவில்லை என்றே தோன்றுகிறது. அண்மைக் காலத்தில் உயிர் வேலிகளைத் தகர வேலிகளும், கற்களால் கட்டிய மதில்களும் அகற்றும்வரை பூவரசம் கதியால்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையோலை, கிடுகு என்பனவும் வேலி அடைப்பதற்குத் தொடர்ந்தும் பயன்பட்டு வந்தன.

தற்காலத்தில், யாழ்ப்பாணப் பகுதியில் உயிர் வேலிகள் பெருமளவு குறைந்துவிட்டன. உயிர் வேலிகளோடு தொடர்புடையனவாக இருந்த நடைமுறைகளும் செயற்பாடுகளும் தொழில்களும் இன்று இல்லை. ஆனாலும், பாதுகாப்பு, தனிமை ஆகியவை தொடர்பாக யாழ்ப்பாண மக்களின் தேவைகள் இல்லாமல் போய்விடவில்லை. உயிர் வேலிகளின் பதிலீடுகளாகத் தற்காலத்தில் பயன்படும் உயரமான தகர வேலிகளையும் மதில்களையும் அத்தேவைகளின் வெளிப்பாடாக யாழ்ப்பாணப் பகுதி முழுவதும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

**இ. மயூரநாதன்**
**கட்டடக்கலைஞர்**


யாழ்ப்பாணத்துக் கிடுகுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே

நான் வாசித்துக்கொண்டிருப்பதனால் உலகை வென்று கொண்டிருக்கின்றேன் - ஆம் இன்றைய வெற்றியாளர்களின் மகுட வாக்கியமாகவும் இதுவே காணப்படுகின்றது. 'வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்கும்'' என்ற சிந்தனை உலகளவில் அன்று தொட்டு இன்று வரை பேசப்பட்டுக்கொண்டிருக்கும் விடயம். இணைய உலகினில் கூட வாசிப்பின் வடிவங்கள் மாறினாலும், ஊடகங்கள் மாறினாலும் இந்த வாசிப்பானது தொடருகின்றது என்றால் அதன் பயன், செயற்பாடு, வெற்றியளித்துள்ளது என்ற முடிவுக்கு வரலாம். அந்த வகையில்தான் இலங்கை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை இவ் வருட வாசிப்பு மாத தொனிப்பொருளினை 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே'' என்று அறிமுகப்படுத்தியுள்ளனர். இவ் வேளையில் யாவருக்கும் ஒரு சந்தேகம் வரும் உலகை வென்றவர்கள் யாவரும் வாசித்த மக்களா? ஆம் அதனைப்பற்றி ஒரு சிறு ஆய்வு செய்கின்றது இக்கட்டுரை.

கட்டுரையாளன் எவ்வாறு ஆய்வு செய்யலாம் என்ற எண்ணமும் ஏற்படலாம் நானும் வாசித்துக்கொண்டிருப்பதனால் வாசிப்பினால் அடைந்த வெற்றிகளால் இதனை ஆய்வு செய்வது பொருத்தமானது என்பதனால் இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

இக் கட்டுரையானது பின்வரும் வகையிலே அமைகின்றது

- உலகை வென்றவர்கள் என்பதன் பொருள்
- உலகை எவ்வாறு வென்றார்கள்
- வாசித்ததனால்தான் உலகை வென்றார்களா? எவ்வாறு?
- நாமும் உலகை வெல்ல என்ன செய்ய வேண்டும்
- வாசிப்பினால் நான் கற்றுக்கொண்டிருப்பவை

### ❖ உலகை வென்றவர்கள் என்பதன் பொருள்

உலகினில் பிறந்து, வளர்ந்து, கல்விகற்று, வேலை உலகினில் வாழ்ந்து, இல்லறத்தில் இணைந்து, தமது குடும்பங்களுடன் மகிழ்வுடன் வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் இவர்களா? இல்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாழ்பவர்களுக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக, அவர்களின் வாழ்வினில் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு தீர்வாக தீர்வுகளை கூறுபவர்களாக, புதிய கண்டு பிடிப்புக்களை அறிமுகப்படுத்துபவர்களாக, உலகின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை சொல்பவர்களாக இருப்பவர்களே உலகை வென்றவர்கள், மக்கள் மனதை வென்றவர்கள் என்று அடையாளப்படுத்தலாம்.

உலக மக்கள் இயக்கத்திற்கு காரணமான அனைத்து துறைகளிலும் தம்மாலான ஒத்துழைப்பை வழங்கிய வழங்கிக்கொண்டிருக்கும் அனைவரும் உலகை வென்றவர்கள் என்று கூறலாம்.

### ❖ உலகை எவ்வாறு வென்றார்கள்

ஆம், இவர்கள் எவ்வாறு உலகை வென்றார்கள்? உலகிலுள்ள மக்களை பற்றி, தம்மைப்பற்றி சிந்தித்ததன் விளைவு இவர்களை உலகிற்கு வெற்றியாளர்களாக காட்டியுள்ளது. இது எவ்வாறு? உலகில் மக்கள் எதிர் நோக்கும் பொருளாதார பிரச்சினைகள், சமூகப்பிரச்சினைகள், தொழிநுட்பரீதியான பிரச்சினைகள், மருத்துவபிரச்சினைகள், இயற்கை,செயற்கை அனர்த்தங்கள், போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றது? இவற்றிற்கு தீர்வு என்ன? என்னால் என்ன செய்ய முடியும்? என்ற சிந்தனைத் தூண்டல் இவர்களை அவை தொடர்பான ஆய்வுக்கு உட்படுத்தி, தீர்வுகளை முன்வைக்க வைத்தது. அது மக்களிற்கு தீர்வாக அமைந்ததால் இவர்கள் வெற்றியாளர்கள் ஆனார்கள்.

### ❖ வாசித்ததனால்தான் உலகை வென்றார்களா? எவ்வாறு?

ஆம், வாசித்ததனால் தான் உலகை வென்றார்கள் அதில் எவ்வித மாற்றுக்கருத்துக்களும் இல்லை. எவ்வாறு?

**அன்றாட செய்தித்தாள்களை வாசித்தார்கள்.**

செய்தித்தாள்களில் நாட்டு நடப்புக்கள், வெளி நாட்டு அரசியல் நிலைமைகள், நாட்டின் அரசியல், பொருட்களின் விலை ஏற்ற இறக்கம், என்ற விடயங்களை தினந்தோறும் வாசிக்கின்ற போது நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளிற்கு அடிப்படையான காரணங்களை தேடியறிந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக எரிபொருள் இறக்குமதியாகும் நாடுகளில் எரிபொருள் கிடைக்காது விட்டால் அல்லது அந் நாடுகளால் எரிபொருளை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றபோது எரிபொருளை பயன்படுத்தும் அனைத்தும் ஸ்தம்பிதம் அடையும் நிலையை இவர்கள் வாசித்து அறிந்து கொண்டதன் விளைவு அதற்கான மாற்று வலுக்களை கண்டறிந்தார்கள். (சூரிய சக்தி, காற்று சக்தி, கடலலை சக்தி மூலமான மின் உற்பத்திகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.)
உள்ளூர் உற்பத்திகள் குறைவடைவதனால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பதனை அறிந்தார்கள். உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான மாற்று நுட்பங்களை கண்டறிந்தார்கள்.

(குறைந்த காலத்தில் கூடிய விளைச்சலைத் தரக்கூடிய விதையினங்களின் கண்டுபிடிப்பை குறிப்பிடலாம்)
மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்கின்றார்கள் என்பதனை அறிந்தார்கள் மக்களுக்கான பொருளாதார சிந்தனைகளை தீர்வுகளாக முன்வைத்தார்கள் (கார்ல் மார்க்சு அவர்களுடைய சிந்தனைகள் அன்று, இன்று நவீன பொருளாதார நிபுனர்களின் சிந்தனைகள்)

இவ்வாறாக நாளாந்த செய்தித்தாள்களை வாசித்ததன் மூலம் அன்றும் இன்றும் மக்களின் பல்வேறு பிரச்சினைகளை அறிந்தார்கள், தீர்வுகளை முன்வைத்தார்கள், மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன அவர்கள் வெற்றியாளர்களானார்கள். உலகை வென்றார்கள்.

உதாரணமாக உலகின் பல்வேறு விதமான கண்டுபிடிப்புக்களை குறிப்பிடலாம்.

**நூல்களை வாசித்தார்கள்**

பல்வேறு அறிஞர்களின் அனுபவங்கள், தாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் அவற்றை தீர்த்துக்கொண்ட முறைகள், வரலாற்றுத் தகவல்கள், இறந்த காலத்தில் நிகழ்ந்த தவறுகள், தவறுகளுக்கான காரணங்கள், பெற்ற வெற்றிகள் வெற்றிகொண்ட விதங்கள் இவ்வாறாக பல்வேறான தகவல்களின் பொக்கிசமாக விளங்குபவை நூல்கள்.
ஆறுதலுக்காக, பொழுது போக ஒரு நண்பனாக, வழிகாட்டும் ஆசிரியனாக, பக்தியை ஏற்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி ஊடகமாக, என்றவாறெல்லாம் திகழ்பவை நூல்களே. இவற்றை அவர்கள் வாசித்தார்கள். சுருக்கமாக கூறின் அனைத்து வகையான நூல்களையும் வாசித்து அவ் அறிவை பெற்றார்கள். பெற்ற அறிவின் மூலமாக தமது வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று அறிந்து கொண்டார்கள். அதன் வழி உலக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சொன்னார்கள் உலகை வென்றார்கள். வாசிப்பால் தாமும் உயர்ந்து மக்களுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்கிய கார்ல்மார்க்சு, அப்துல்கலாம், அறிஞர் அண்ணா, போன்றோரை உதாரண வெற்றியாளர்களாக குறிப்பிடலாம்.

## ❖ நாமும் உலகை வெல்ல என்ன செய்ய வேண்டும்

இதற்கு பதில் யாவருக்கும் தெரிந்ததுதான். வாசிக்க வேண்டும். ஆனால் இன்று வாசிப்பு என்பது இணையத்தில் தகவலை தேடி வாசிப்பது இல்லை என்றால் குறித்த புத்தகத்தை இணையத்தில் தரவிறக்கம் செய்து படிப்பது. ஆனால் அதுவும் இப்போது தமக்கு தேவையான வினாக்களுக்கு விடையுள்ள பக்கங்களையும், பரீட்சைக்கு தேவையான பக்கங்ளையும் வாசிப்பதே இன்று பெரும்பாலும் நிகழ்ந்து வருகின்றது. நூலறிவு என்பது தம் தேவைகளை நிறைவு செய்தால் போதுமென்ற நிலையிலேயே இன்றைய வாசிப்பின் போக்கு காணப்படுகின்றது. நூலின் முழு பகுதியையும் வாசித்தறிய வேண்டும் என்ற வாசிப்பு அவா இல்லை. இவ்வாறு காணப்படும் போது நாம் எவ்வாறு புதிய கருத்துக்களை, புதிய தீர்வுகளை எழுதுவது, உலகை வென்றவர்கள் ஆவது சிந்தனைதான்.

தீர்வு புராதன காலம் போல் நூலினை கையினில் தாங்கி அதன் அனைத்து பக்கங்களையும் எம் கைகளால் புரட்டி அதன் ஒவ்வொரு வரிகளையும் ஆழமாக வாசிப்பதன் மூலமே அவ் நூல்தந்த அறிவால் எம்மால் மாற்றத்தை நோக்கி சிந்திக்க முடியும் என்பது எனது முடிவாகும்.

## ❖ வாசிப்பினால் நான் கற்றுக்கொண்டிருப்பவை

➢ நான் ஓர் ஆசிரியனாக இருப்பதனால், வாசித்த புத்தகங்களிலுள்ள சில தகவல்கள் பாடப்புத்தகங்களில் பாடங்களாக இருக்கின்றன. அவற்றுள் சில சுருக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. அவற்றை விரிவாக கூறுவதற்கு நான் வாசித்த நூல்கள் துணையாக உள்ளன.

- பாடப்புத்தகங்களில் இல்லாத விடயங்களை மாணவர்கள் வினாக்களாக கேட்கும் போது இலகுவாக விடையளிக்க கூடியதாக உள்ளது. அல்லது சில வேளைகளில் குறிப்பிட்ட நூலில் உள்ளது என்ற தகவலை கூறக்கூடியதாக உள்ளது.

- சில வினாக்களுக்கு உடனடியாக பதிலளிப்பதற்கு இணையத்தை நாடும் போது குறிப்பிட்ட புத்தகத்தை மட்டும் தரவிறக்கம் செய்து பார்ப்பதற்கு அதனை முன்னர் வாசித்தது பயனுடையதாக இருக்கின்றது

- பாடசாலையில் எந்நேரமும் உடனடியாக எவ் விடயப்பரப்பிலும் உரையாற்றுவதற்கு முடியுமாக இருத்தல்

- மாணவர்களுக்கு நீதிக்கருத்துக்களை உடைய கதைகளை கூறுவதற்கு இயலுமாக இருத்தல்

- மாணவர்களுக்கு எந்த எந்த நூல்களை வாசித்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதை கூறமுடியுமாயிருத்தல்.

- மாணவர்களுக்கு பேச்சு, பட்டி மன்றம் போன்றவற்றை பழக்கும் போது நூல்களில் கற்ற சிந்தனைகளை அவர்களிடம் கூறக்கூடியதாக இருத்தல்.

- பாடம் சார்ந்த நூல்கள், கவிதைப்புத்தகங்களை வெளியிட்டுள்ளேன் அதற்கு உந்துதலாக இருந்தது எனது வாசிப்பு பழக்கமே.

இவ்வாறாக நான் கற்றுக் கொண்டிருக்கின்றேன். வாசித்துக் கொண்டிருப்பதனால்.

**ச.வாகீசன்**
**ஆசிரியர்**
**யா/ இணுவில் இந்துக்கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாருதப்புரவீகவல்லியும் கோயில்களின் உருவாக்கமும் யாழ்ப்பாணத்து அரசமரபின் தோற்றமும்

சோழ அரசின் இளவரசியான மாருதப்புரவீகவல்லி ஈழத்தின் வடபகுதியில் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி தனது குன்ம வியாதியை நீக்கியதுடன் கோயில்கள் பலவற்றை உருவாக்கி பெரும் திருப்பணி செய்ததுடன் பெரும் குடியிருப்பு மையங்களை நிறுவி தொழிலாளர்களை அவ்விடங்களில் குடியமர்த்தி நகர் மையக்கட்டமைப்புகளையும் உருவாக்கியதுடன் யாழ்ப்பாணத்துக்கான தனி அரசமரபின் தோற்றத்திற்கும் வழிவகுத்த அரசியாவாள்.

மாருதப்புரவீகவல்லி வட இலங்கையில் வந்திறங்கிய செய்தி யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் போன்ற யாழ்ப்பாணத்தின் வரலாறு கூறும் நூல்களில் உள்ளன. இன்று யாழ்ப்பாணத்து கலாசாரப் பண்பாட்டை கந்தபுராணக் கலாசாரத்துடன் கூடிய திருக்கோயிற் பண்பாடென அறிஞர் விதந்து கூறுவர். இப்பண்பாட்டினை தொடக்கி வைத்தவளாக மாருதப்புரவீகவல்லியை இனங்காண முடியும். வரலாற்றுத் தொடக்க காலங்களில் மக்கள் தமது பரம்பரைத் தொழில்களையே வருமானத்திற்குரிய தொழில்களாக மேற்கொண்டு வந்தனர். இதனால் ஒவ்வொரு வகைத்தொழில் செய்வோரும் ஒவ்வொரு வகைத் தொழிற்பிரிவினராக உருவாகினர். இத்தொழிற்பிரிவினர் அனைவருக்கும் அவ்வப் பிரதேசங்களில் திருக்கோயில்களுடன் இணைந்ததாக குடியிருப்பு மையங்களை நிறுவி தொழிலாளர்களின் நலன்களை கவனித்ததுடன் திருக்கோயிற் பண்பாட்டுடன் இணைந்த வகையில் தொழில் சமுதாய உறவுகள் வளர்ச்சியடைவதற்கும் மாருதப்புரவீகவல்லி வழிசமைத்தாள் எனக் கூறலாம். இதுவே ஆரம்பகால யாழ்ப்பாணத்து அரசின் தோற்றத்திற்கும் வழிவகுத்தது.

## மாருதப்புரவீகவல்லியும் கோயில்களின் உருவாக்கமும்

இங்கு முதலில் மாருதப்புரவீகவல்லியின் வடஇலங்கை நோக்கிய வருகை பற்றிப் பார்க்கும் போது அது கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் வரலாற்றுடனும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுடனும் தொடர்புபட்ட வகையில் அமைந்துள்ளதை அவதானிக்கலாம். குதிரை முகத்தவளான திசையுக்கிர சோழன் மகள் மாருதப்புரவீகவல்லி கண்டகி புனித தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரரையும் முருகப்பெருமானையும் வழிபட்டு குன்ம நோயும் குதிரை முகமும் நீங்கப்பெற்று கோயிற்கடவை முருகன் கோயிலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலாகக் கட்டுவித்தாள் எனக் கூறப்படுகிறது. இது தவிர யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியில் பல விநாயகர் ஆலயங்களையும் சில அம்மன் ஆலயங்களையும் அமைத்து வழிபட்டாள் என்ற செய்தியை கர்ணபரம்பரைக் கதைகள் ஊடாகவும் அவ் ஆலய தலவரலாற்றுச் செய்திகள் ஊடாகவும் அறியமுடிகிறது. மாருதப்புரவீகவல்லி பாவவிமோசனம் பெறுவதற்கு நகுலேஸ்வரர் ஆலயத்தையும் அதனை அண்டியுள்ள கீரிமலைச் சாரலையும் தேர்ந்தெடுத்தமைக்கு இப்பிரதேசத்தின் தொன்மை வரலாறுகளும் விசேடம் பெற்ற தீர்த்தச் சுனையும் (உவர்நீரும் நன்னீரும் கலந்த தீர்த்தம்) காரணமாக இருந்திருக்கின்றது. மாருதப்புரவீகவல்லிக்கு முன்பே யுகங்கள் தோறும் பற்பல முனிவர்கள், தேவர்கள், கந்தவர்கள், அரசர்கள் எனப்பலரும் வந்து தீர்த்தமாடி ஆதியில் அமைந்த திருத்தம்பலேஸ்வரி சமேத திருத்தம்பலேஸ்வரப் பெருமானை வழிபட்டு பாவவிமோசனம் பெற்ற செய்தியை பலரும் சொல்லக்கேட்டு கீரி முகமுடைய நகுலமுனிவராக இருந்த ஜமதக்கினி முனிவரும் இங்கு பாவவிமோசனம் பெற்றார் என்ற செய்தியையும் அறிந்திருந்தாள் எனக் கொள்ளலாம். யாழ்குடா நாட்டில் தீவகப் பிரதேசத்திலிருந்து வடமுனைக் கடற்கரையோரமாக பொன்னாலை திருவடி நிலையூடாக பருத்தித்துறை கற்கோவளம் வரை இன்னும் பல புனித தீர்த்த மையங்கள் இருக்கின்றமையை அவதானிக்கலாம். இவற்றுள் விசேடம் பெற்ற தீர்த்தமாக புனித கண்டகி தீர்த்தம் காணப்படுகிறது.

ஈழத்தின் வடபகுதிக்கு வந்த இச்சோழ இளவரசி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை கட்டுவித்தது மட்டுமன்றி விநாயகர் வழிபாட்டை மேற்கொண்டு அதனை முதன்மைப்படுத்தி பல விநாயகர் ஆலயங்களையும் இதே காலப்பகுதியில் அமைத்தாள் என்பதனை ஐதீகக் கதைகள் (செவி வழிச் செய்திகள்)) மூலம் அறிய முடிகின்றது. இது பற்றி நோக்கும் போது மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்தினவளாக விளங்கி தீர்த்த யாத்திரை மேற்கொண்டு கீரிமலையில் தீர்த்தமாடி நகுலேஸ்வரனையும் கோயிற்கடவை முருகனையும் வழிபட்டு குதிரை முகம் நீங்கப் பெற்று பேரழகியாகத் திகழ்ந்தாள் எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை முகம் மற்றவர் பார்வைக்கு நீங்கியும் தனது பார்வைக்கு நீங்காததால் இது பற்றி அவள் பிரஸ்தாபிக்க ஓர் பெரியவர் விநாயகர் வழிபாடு மேற்கொள்ளாததால் இத்துன்பம் ஏற்பட்டதெனக் கூற இளவரசியும் தன் தவறை உணர்ந்து ஏழு விநாயகர் ஆலயங்களை ஸ்தாபித்து வணங்குவேன் எனக் கூறி கொல்லங்கலட்டி, பன்னாலை, அளவெட்டி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் முறையே வீரகத்தி விநாயகர் ஆலயம், வரத்தலம் கற்பகப்பிள்ளையார் ஆலயம், அழகொல்லை விநாயகர் ஆலயம், கும்பழாவளை விநாயகர் ஆலயம், பெருமாக்கடலை விநாயகர் ஆலயம், ஆலங்குழாய் விநாயகர் ஆலயம், கல்வளை விநாயகர் ஆலயம் என ஏழு விநாயகர் ஆலயங்களை ஸ்தாபித்து வணங்கினான் எனக் கூறப்படுகிறது.

மேலும் அவர் தான் அமைத்த முருகனாலயம் அல்லது விநாயகர் ஆலயங்களை வழிபட யானையில் ஏறிச் செல்லும் போது அவளது யானை ஓரிடத்தில் முன்னங்கால் நீட்டி விழுந்து வணங்கியது. யானை விழுந்து வணங்கின திசையை ஆராய்ந்த போது புதர்களுக்கிடையே விநாயகர் விக்கிரகம் இருக்கண்டு அதனை வழிபாடு செய்து சென்றாள். பின்னர் அவ்விடத்தில் கோயில் ஒன்றையும் கட்டுவித்தாள். அவளது யானை விழுந்து வணங்கியதால் அவ்விடத்திற்கு ஆனைவிழுந்தான் என அன்றிலிருந்து வழங்கப்பட்டு வருவதுடன் அவ்வாலயம் ஆனைவிழுந்தான் விக்னேஸ்வரர் ஆலயம் என அழைக்கப்படுகிறது. இதே போன்று மாருதப்புரவீகவல்லி தனக்கு சேவை செய்து வந்த சலவைப் பணியாளர்களுக்கு அவர்களின் தொழில் நிமித்தம் துணிகளை உலர்த்தவென ஆனைக்கோட்டையில் பொருத்தமான ஓரிடத்தினை வழங்கி அவர்களை குடியமர்த்தினார் என்றும் அவ்விடத்தில் ஓர் விநாயகர் ஆலயம் அமைந்ததென்றும் அதுவே கரைப்பிரான் ஆதிவிநாயகராலயம் ஆயிற்று என்றும் செவி வழிச்செய்திகள் கூறுகின்றன.

இன்னொரு செய்தியின்படி மாருதப்புரவீகவல்லி தீர்த்த யாத்திரை மேற்கொண்டு கடலில் படை பரிவாரங்களுடன் வரும் போது புயற்காற்றினால் அவர்கள் வந்த படகு அங்குமிங்கும் தள்ளாடவே கசாயத்துறை ஆனந்தப்பிள்ளையாரை வேண்டி வழிபட புயற்காற்று நீங்கியதென்றும் அவர்கள் சுகமாக கரையை வந்தடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. பின்னர் கசாயத்துறை ஆனந்தப்பிள்ளையாரையும் மாருதப்புரவீகவல்லி சென்று வழிபட்டால் என்ற செய்திகளுமுண்டு. கீரிமலைச்சாரலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள தீர்த்தக்கரைப் பிள்ளையார் ஆலயமும் மாருதப்புரவீக் வல்லியின் வழிபடு தலமாக இருந்துள்ளதெனக் கூறுகின்றனர்.

விநாயகர் மட்டுமன்றி மாருதப்புரவீகவல்லியின் வரலாற்றுடன் அம்மன் வழிபாடும் தொடர்பு பெற்றுள்ளதை அவதானிக்கலாம். கீரிமலையின் கடற்கரையோரத்தையண்டி அமைந்துள்ள ஸ்ரீ மகாமுத்துமாரியம்மன் ஆலயமும் கோண்டாவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள சிவமகாகாளி அம்மன் ஆலயமும் இவ்வாறு தொடர்பு பெறும் இரு ஆலயங்களாகும். நளமகாராசன், அருச்சுனன், முசுகுந்தச்சக்கரவர்த்தி, ஆகியோர் தீர்த்தமாடி அம்பாளைத் தரிசித்து நோய், பிணி பாவங்கள் நீங்கப்பெற்று புண்ணியப்பேறு பெற்றனர் என்றும் நகுலமுனிவர் தனது கீரிமுகம் மாறவும் தனக்கு ஏற்பட்ட வெப்பு நோய் நீங்கவும் வழிபட்ட தலமெனவும் கூறப்படுவதுடன் நகுலமுனிவரின் சொற்படி மாருதப்புரவீகவல்லி புனருத்தாரணம் செய்து வழிபட்டாள் எனவும் செய்திகள் உண்டு இதே போன்று கோண்டாவில் சிவமகாகாளி அம்மன் ஆலயம் தலசிரேஸ்டர்கள் சிவயோகிகளால் வழிபடப்பெற்ற ஆலயமாக இருப்பதுடன் மாருதப்புரவீகவல்லியினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு வழிபடப்பட்ட ஆலயமாகவும் உள்ளது. அத்துடன் முற்காலத்தில் மாவிட்டபுரம் கீரிமலை ஆகிய தலங்களை வழிபடச்செல்லும் மக்கள் இந்த அம்மன் ஆலயம் அமைந்துள்ள பகுதியினூடாகவே சென்றுவந்தனர் எனவும் கூறுவர்.

இவ்வாறாக சோழ இளவரசியின் வருகை யாழ்ப்பாணத்தில் கோயில்களின் உருவாக்கத்துடனும் குடியிருப்பு மையங்களின் உருவாக்கத்துடனும் பெருமளவில் தொடர்புறுவதை அவதானிக்கலாம். குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வடகடற்கரையோரங்களில் புனிதநீர் . நிலைகளுக்காமையிலும், வலிகாமத்தின் மையப்பிரதேசங்களிலும் பல கோயில்களை மாருதப்புரவீகவல்லி அமைத்து வழிபட்டாள் என்ற செய்தியையும் அக்கோயில்களின் நித்திய, நைமித்திய கிரியைகள் பூசை வழிபாடுகள் எக்காலத்திலும் குறைவின்றி நடைபெற ஒவ்வோர் பணிகளுக்கு ஏற்ப தொழிலாளர்களை அவ்வவ் பிரதேசங்களில் குடியிருத்தி குடியிருப்பு மையங்களை நிறுவினாள் என்ற செய்தியையும் வரலாற்றுத் தகவல்களின் மூலமாகவும் சில இலக்கியக் குறிப்புக்கள் மூலமாகவும் அறியக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக மாருதப்புரவீகவல்லியினால் அமைப்பட்டதாக அல்லது புனரமைக்கட்டதாக கூறப்படும் ஆலயங்கள் அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையான நகரக் குடியிருப்புகள், விவசாயக் குடியிருப்புகள், பயிர் செய் நிலங்கள் ஆகியவற்றுக்கும் மத்தியிலும் புனித நீர் நிலைகளான கடற்கரையோரங்கள், ஆற்றுப்பள்ளத்தாக்குகள், குளங்கள் ஆகியவற்றுக்கு அருகாமையிலும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இன்றும் மாருதப்புரவீகவல்லியினால் அமைப்பட்டாதாகக் கூறப்படும் முருகனாலயம் என்றாலும் சரி, விநாயகர் ஆலயங்கள் என்றாலும் சரி அம்மன் ஆலயங்கள் என்றாலும் சரி இவ்வாலயங்கள் அமைந்தள்ள சூழலில் தொன்மையை பறைசாற்றக்கூடிய பல விடயங்கள் அமைந்திருக்கின்றன.

மூல விக்கிரகங்களின் பழமையும் தூர்ந்து செல்லும் கட்டடங்களும் மண்மேடுகளும் ஆலயத்தல விருட்சங்களும் வழிபாட்டு நெறிமுறைகளும் இதற்கு சான்றாக உள்ளது. அத்துடன் வரலாற்றுடன் தொடர்புபட்ட இவ்வாலயங்களின் தூபிகள், விமானங்கள் பிரகாரசுவர்கள், முன்வாயில்கள், முன்றல்கள் ஆகியவற்றில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் இவற்றுக்கு சான்று பகருகின்றன். 18ம், 19ம், 20ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெரும் அறிஞர்கள், புலவர்கள் இவ்வாலயங்கள் மீது பிரபந்தங்களும் பக்திப்பாமாலைகளும் பாடியிருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆதிக்குடியிருப்பும் யாழ்ப்பாணத்து அரசமரபும்

யாழ்ப்பாணத்தில் தோன்றிய ஆதிக்குடியிருப்புகளில் பெரும்பாலான குடியிருப்புகள் வலிகாமம் பிரதேசத்திலேயே தோன்றியதாக வரலாற்றாய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய 40 குடியிருப்புகள் யாழ்ப்பாணத்தில் தோன்றியிருந்தன என குறிப்பிடப்படுகிறது. இவற்றுள் கந்தரோடை முக்கிய குடியிருப்பு மையமாக விளங்கியது. கிறிஸ்துவிற்கு முன் முதலாம் நூற்றாண்டில் கந்தரோடை நகரமாக வளர்ச்சியடைந்துவிட்டது. ஏறத்தாழ இதே காலப்பகுதியில் அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்தில் பல நகரக்குடியிருப்புகள் கந்தரோடை, ஆனைக்கோட்டை, தெல்லிப்பழை, மயிலிட்டி, இளவாலை, காங்கேசன்துறை, கோண்டாவில் பகுதியில் வளர்ச்சி பெற்றிருந்ததை அவ்வவ் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது. கி.பி. 7ம், 8ம் நூற்றாண்டுகளில் கந்தரோடை ஒரு இராசதானியாக வளர்ச்சியடைந்துவிட்டது. இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியிலேயே சோழ இளவரசியின் ஈழத்தை நோக்கிய விஜயம் நிகழ்கிறது. மாருதப்புரவீகவல்லி கீரிமலைச்சாரலில் வந்திறங்கி "குமாரத்திபள்ளம்" என்ற இடத்தில் பாளையம் அமைத்திருந்த வேளையில் இச்சமகாலத்தில் கதிரமலையை தலைநகராகக் கொண்ட கந்தரோடை இராசதானி தோற்றம் பெற்றிருந்தது. இவ்விராசதானியை உக்கிரசிங்கன் எனும் மன்னன் ஆண்டு வந்தான். இவனே கதிரமலைச் சிவன் ஆலயத்தை ஸ்தாபித்தான் என ஆலய வரலாறு கூறுகிறது. உக்கிரசிங்கனும் நகுலேசுவரனைத் தரிசிக்கவேண்டி கீரிமலைச்சாரலில் "வளலர்கொன்" என்னுமிடத்தில் பாளையம் அமைத்திருந்தான். இதன் போது உக்கிரசிங்கனும் மாருதப்புரவீகவல்லியும் முதன் முதலில் சந்தித்து கொள்கின்றனர். பின்னர் ஏற்பட்ட பல சந்திப்புகளினூடாக இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி மனமொத்து திருமணம் புரிகின்றனர். இதன் பின்னர் உக்கிரசிங்கனுடன் பட்டத்தரசியாக மாருதப்புரவீகவல்லியும் கதிரமலையில் அரசியற்றினாள் என்பது வரலாறு. அதன் பின்னரான காலப்பகுதியில் இருவரும் இணைந்து பல ஆலயங்களின் திருப்பணியை நிறைவேற்றுகின்றனர். கதிரமலையைத் தலைநகராகக் கொண்ட கந்தரோடை இராசதானியில் தோற்றம் பெற்ற இவ்வரசே யாழ்ப்பாணத்தில் தோன்றிய முதலாவது அரசாகக் கருதப்படுறது. இதன் பின்பாக சோழராட்சி இலங்கையில் நின்று நிலவுவதற்கும், 13ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தை மையமாகக் கொண்ட அரசமரபு தோன்றி வளர்வதற்கும் கதிரமலை அரசே முன்னோடியாகத் திகழ்ந்தது என்றால் மிகையில்லை.

மாருதப்புரவீகவல்லி வந்திறங்கிய பிரதேசம் துறைமுக நகராக வளர்ச்சி பெற்ற ஒரு இடமாக இருந்துள்ளது. இது கோயிற்கடவைப் என அக்காலத்தில் அழைக்கப்பட்டது. போக்குவரத்தது உட்பட வெளிநாட்டு வர்த்தக வாணிப கலாச்சார பண்பாட்டு தொடர்புகள் இக்கோயிற் கடவை பிரதேச துறைமுகத்திற் கூடாகவே நடைபெற்றிருந்தது. ஏறத்தாழ இதே காலப்பகுதியில் உள்நாட்டு நீர்ப்பரப்பாகப் காணப்பட்ட வழக்கையாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசமும் பெருநகரக் குடியிருப்புப் பிரதேசமாக விளங்கி வந்தது. இங்கு குடியிருப்புகளும் வழிபாட்டிடங்களும் பெருந்தெருக்களினால் இணைத்து வைக்கப்பட்டு ஒரு நகரமையமாக விளங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. சோழர் காலத்தில் நாகப்பட்டினத்திற்கும் கந்தரோடைக்குமிடையில் நாவாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணிகளின் போக்குரவத்து பண்ணைத்துறையூடாக பண்ணைக்கடலுடன் வழுக்கையாற்றுப் நீர்ப்பரப்பும் இணைந்த வகையில் நடைபெற்றிருந்தது என்பதைனை தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. மேலும் கந்தரோடையிலிருந்து வடக்காக அளவெட்டி வரை வர்த்தக வாணிப கலாசாரப் பண்பாட்டுத் தொடர்புகள் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கினூடாக நடைபெற்றிருந்தன. இத் தொடர்புகளின் நீட்சி தெல்லிப்பழை, மயிலிட்டி வரை தொடர்ந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. கந்தரோடை இராசதானியுடன் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தக வாணிப கலாசார பண்பாட்டுத் தொடர்புகள் மாருதப்புரவீகவல்லி காலத்திலேயே நிகழ்ந்துள்ளது எனலாம். அத்துடன் சோழர்காலத்தில் மயிலிட்டி பிரதேசத்தில் கோயில்கள் உருவாக்கம் பெற்றிருந்தன. இக்காலத்தில் ஆட்சி செய்த சோழ அரசர்களாலும் அரச பிரதானிகளாலும் பல ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அரச பிரதானிகளை நியமிக்கும் முறைமை மாருதப்புரவீகவலி காலத்திலேயே தொடங்கியிருக்கலாம் என்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. எனினும் இவை பற்றிய மேலதிக ஆய்வுகள் தேவைப்படுகின்றன. மாருதப்புரவீகவல்லியின் வருகை யாழ்ப்பாணக் குடாநாட்டில் வரலாற்றுத் தொடக்ககால மக்களிடையே பல முன்னேற்றகரமான மாறுதல்களை ஏற்படுத்தயிருந்தன என்றால் மிகையில்லை. மக்களின் வாழ்வியல் அம்சங்களுடன் பல வழிகளிலும் பின்னிப்பிணைந்திருந்த சைவாலயங்கள் பல மாருதப்புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்டதுடன் புனருத்தாரணமும் செய்யப்பட்டன.

பல ஆலயங்கள் ஆகமப்படுத்தப்பட்டதுடன் கோயில்கள் நித்திய நைமித்திய பூசைவழிபாடுகள் கிரியைகள் இக்காலத்திலும் குறைவின்றி நடைபெற சிவாச்சாரியார்களையும் கோயிற்பணிக்கென குலங்குடி முறையிலான மக்களையும் அக்காலப்பகுதியில் குடியமர்த்தினாள். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் பூசைக்கிரியைகள் மற்றும் பரிபாலனத்திற்கென கி.பி. 789 ஆம் ஆண்டு தில்லைச்சிதம்பரத்திலிருந்து தீட்சிதர்கள் வரவழைக்கப்பட்டார்கள் என மாவை ஆதீனக்குறிப்புகள் கூறுகின்றன. சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலயம் கி.பி. 780-785 ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஸ்தாபிக்கப்பட்டதாக கல்வெட்டுக் குறிப்புகள் கூறுகிறது. அதே போன்று மாருதப்புரவீகவல்லியின் வருகையுடனேயே யாழ்குடாநாட்டிற்குள் அரசமரபொன்று தோற்றம் பெற்று வளர்சசியடைந்ததுடன் பிற்காலத்தில் அது யாழ்ப்பாண இராச்சியமாக பரிணமித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வழிகோலியது என்றால் மிகையில்லை.

யாழ்ப்பாண வைபமாலையில் கூறப்பட்ட மாருதப்புரவீகவல்லி பற்றிய செய்திகளையும் ஐதீகமாகக் கூறப்பட்டு வந்த செய்திகளையும் புனைவுகளாகவும் கட்டுக்கதைகளாகவுமே பலரும் பார்த்து வந்த சூழலில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சில தொல்லியல் ஆய்வு முடிவுகளும் இலக்கிய ஆதாரங்களும் மாருதப்புரவீகவல்லியின் ஈழத்து விஜயம் உண்மையிலேயே நிகழ்ந்தது என்பதனை நிரூபிப்பதற்கான தொடக்கப்புள்ளியாக அமைகின்றன. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் தொல்லியல் அகழ்வாய்களும் கிடைக்கும் இலக்கிய ஆதாரங்களும் இவற்றின் உண்மைத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் என நம்பலாம்.

**உசாத்துணைப்பட்டியல்**


1. நடராசா, ஆ.சி.தொகுப்பாசியரியர், வரலாற்று உலா, சிவத்தமிழ் மானிடவியற் கழகம்,2010.

2. இரகுபதி,பொ. பெருங்கற்கால யாழ்ப்பாணம், சமூகவெளி இதழ் 03, ஒக்.-டிச. 2015.

3. கிருஸ்ணராஜா,செ.இ கந்தரோடையை இணைத்து வைத்த வெளிநாட்டு வாணிக கலாசார மையங்கள், சமூகவெளி ஜன.-மார்ச் 2012.

4. கட்டுரையிற் குறிப்பிடப்பட்ட ஆலயங்களின் தலவரலாறு பற்றிய நூல்கள்.

5. பிரதேச மக்களின் வாய்மொழிமூலத் தகவல்கள்.

6. கள ஆய்வுத் தகவல்கள்.



**சண்முகலிங்கம் சஜீலன் (SAJEELAN)**
**பன்னாலை, தெல்லிப்பழை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டு இசை முன்னோடிகளில் பாபநாசம்சிவன்

இசையியல் வரலாற்றில் தமிழ்த்திரை இசைக்கு என்று தனியான ஒரு இடத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு **'கர்நாடக இசை'** வழி வந்த மரபு காரணமாக இருந்தது. இந்தமரபு செழுமையுடன் வீரியமுடன் வருவதற்கு அடித்தளம் அமைத்தவர்களுள் பாபநாசம்சிவன் குறிப்பிடத்தக்கவர். **20ஆம் நூற்றாண்டு** இயலிசைப் புலவர்களில் தம்முடைய பலவிதமான இசைப் படைப்புக்களாலும், பல்துறைப் புலமையாலும் தன்னிகரற்று விளங்கியவர் பாபநாசம்சிவன் ஆவார். இவர் தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுகாவில், பூலோக கைலாசமான **'போலகம்'** என்னும் கிராமத்தில் 1890 ஆம் ஆண்டு இராமாம்ருத ஐயர், யோகாம்பாள் தம்பதியருக்கு மகனாக அவதரித்தார். தனது ஆறாவது வயதில் தந்தை காலமானதால் போலகம் கிராமத்தை விட்டு நீங்கி திருவனந்தபுரம் சென்று தங்கினார். அங்கு 1898 முதல் 1907 வரை முடிய மகாராஜா சமஸ்கிருத கல்லூரியில் படித்து **'உபாத்யாய'** மற்றும் **'வ்யாரணி'** என்ற பட்டத்தையும் பெற்றார்.

இசைத்திறமையை தாயிடமும், பாட்டனாரிடமும் பெற்றிருந்தாலும், முறையான இசைப்பயிற்சியை **பாலக்காடு பரமேஸ்வர பாகவதர்** மற்றும் **நூரணி மகாதேவ பாகவதரிடமும்** தொடங்கினார். சில நாட்கள் **நேமம் நடேச பாகவதர், சாம்ப பாகவதர்** ஆகியோரிடம் மாணவராக இருந்து இசை பயின்று இசைப்புலமையை நன்கு வளர்த்துக் கொண்டார். **ஸ்ரீ நீலகண்டசிவனின்** தொடர்பு பாபநாசம்சிவனுடைய வாழ்வில் திருப்புமுனை ஏற்பட காரணமாயிருந்தது. இவருடன் இருந்து **தேவாரம், திருவாசகம், திருப்புகழ், அருட்பா**, **தாயுமானவர் பாடல்** என தமிழ் பக்தி இசை மரபிலும் தோய்ந்து வளம் பெற்றார். **தமிழ், மலையாளம், சமஸ்கிருதம்** ஆகிய மொழிகளில் நன்கு புலமை மிக்கவராக இருந்தார். இசையின் நுணுக்கங்களை ஆழ்ந்து ரசித்து மனமுருகி வெளிப்படுத்தும் பாங்கு பாபநாசம்சிவனின் தனித்தன்மையாக விளங்கியது. இயலையும், இசையையும் நன்கு அறிந்து அதில் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

இவர் தனது முத்திரையாக **'ராமதாஸ'** என்பதை வைத்து **கிருதி, வர்ணம், பதம், ஜாவளி, இசைநாடகங்கள்** ஆகிய பல இசை வடிவங்களை இயற்றியுள்ளார். இராகம், தாளம், பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கோவை மிகச்சிறப்பாக பாபநாசம்சிவனிடம் வெளிப்பட்டது. இவரது பாடல்களை கீர்த்தனை மாலை என்ற பெயரில் ஏழு பாகங்களாக தொகுத்து வெளியிட்டுள்ளனர். பஜனைப் பாடல்கள் பாடுவதிலும் சிறந்து விளங்கினார் பாபநாசம்சிவன். இவருடைய பக்திப் பாவத்தில் கல்லும் கரைந்து உருகும். சிவனின் பஜனைக் கோஷ்டி என்றால் பக்தர் கூட்டம் கலையாமல் இருக்கும். சிவன் தேசப்பற்று நிரம்பியவராகவும் அதனை இசை மொழியில் வெளிப்படுத்துபவராகவும் இருந்து வந்துள்ளார்.

கர்நாடக இசையில் தன்னிகரற்ற சிறந்த **வாக்கேயகாரராகவும், மாமேதையாகவும்** விளங்கிய பாபநாசம்சிவனிடம் 1935 ஆம் ஆண்டு முதல் சினிமா அலைமோதத் தொடங்கியது. **'சீதாகல்யாணம்'** என்ற தமிழ்ப்படத்தின் இசையமைப்பாளராக பாபநாசம்சிவன் திரை உலகப்பிரவேசம் செய்தார். இப்படத்தில் தசரதனின் மனைவி கௌசல்யா தேவியை துதித்துப் பாடுவதாக **"அந்த தாயே ஏழைபால் தயவு செய்வாயாக..."** என்ற **பைரவி** இராகப் பாடல் மிகவும் புகழ் பெற்றது. இப்படமும் பாடல்களும் அமோக வரவேற்பைப் பெற்றது. இந்தத் தொடக்கம் திரையுலக இசை வரலாற்றில் பாபநாசம்சிவன் தன்னிகரற்று திகழ்வதற்கு சாதகமான சூழல்களை உருவாக்கிக் கொடுத்தது. சிவன் பாடல்களைத் தானே எழுதி அதற்கு தானே மெட்டமைத்துப் பாடினார். இது திரையிசை வளர்ச்சிக்கு புதிய அடித்தளம் அமைத்தது. பாபநாசம்சிவன் எழுதிய பாடல்களும் மெட்டுகளும் புதிய இசை அனுபவப் பகிர்விற்கு வித்திட்டது. திரைப்படங்களுக்காக எழுதிய பாடல்களில் **"மன்மதலீலையை வென்றார் உண்டோ..", "ராதே உனக்கு கோபம்.."** போன்ற பாடல்கள் புகழ் பெற்றவை.

**பாபநாசம்சிவன் பாடல் எழுதி இசையமைத்த படங்கள் ஏராளமானவை. 1933 இல் சீதாகல்யாணம், 1934 இல் பவளக்கொடி, கிருஸ்ணலீலா, லவகுசா, 1935களில் நவீனசதாரம், மார்க்கண்டேய சந்திரசேனா, 1936களில் நவீன சாரங்கதாரா, ரத்னாவளி, பக்தகுசேலா, உஷாகல்யாணம், 1937இல் அம்பிகாபதி, கௌசல்யா பரிணயம், சிந்தாமணி, பாலயோகினி, 1938இல் அநாதைப் பெண் தாயுமானவர், யயாதி, துக்காராம், 1939இல் சங்கராச்சார்யா, சாந்தசக்குபாய், திருநீலகண்டர், தியாகபூமி, பிரகலாதா, பாண்டுரங்கா, மாத்ருபூமி, மா சிவகவி, நந்தனார், சத்யசீலன், பக்தசேதா,** போன்ற படங்களில் மதுரகீதங்களை இசைத்தார். அவை இன்றுவரை ஜனரஞ்சகமான கேட்பதற்குரிய இசைப்பாடல்களாக அமைந்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1940களில் கிருஷ்ணன்தூது, சகுந்தலை, பக்தசேதா, மணிமேகலை, 1941களில் அசோக்குமார், கச்சதேவயானி, காமதேனு, சாவித்திரி, சுபத்ரா அர்ஜுனா, திருவள்ளுவர், சூர்யபுத்திரி, வேதவதி அல்லது சீதாஜனனம், மதனகாமராஜன், 1942களில் அனந்தசயனம், நந்தனார்(ஜெமினி), நாரதர், ராஜசூயம், 1943களில் அருந்ததி, காரைக்காலம்மையார், குபேரகுசேலா, சிவகாமி, மங்கம்மா சபதம், 1944ஆம் ஆண்டில் பர்த்ருஹரி, பக்தஹனுமான், ஜகதலப் பிரதாபன், ஹரிதாஸ், 1945ஆம் ஆண்டில் என்மகன், பரஞ்சோதி, மீரா, 1946இல் ஆரவல்லி, உதயணன் வாசவதத்தை, குண்டலகேசி, ஸ்ரீமுருகன், ருக்மாங்கதன், லவங்கி, வால்மீகி, ஏகாம்பவாணன், கன்னிகா, 1947களில் கடகம், துளசிஜலந்தர், தெய்வநீதி, விஷ்வாமித்திரா, அபிமன்யு, 1948களில் ஆதித்தன் கனவு, கோகுலதாஷி, ஞானசௌந்தரி, பில்ஹணா, சந்திரலேகா, சக்ரதாரி, பக்தஜனா, ராமதாஸ், ராஜமுக்தி, காமவல்லி, திருமழிசை ஆழ்வார், வேதாள உலகம், 1949களில் தேவமனோஹரி, ரத்னகுமார்,**

**1950களில் கிருஷ்ண விஜயம், பாரிஜாதம், 1951களில் சுதர்சன், லாவன்யா, புதுவாழ்வு, மலைக்கள்ளன், மாயமாலை, 1952களில் அமரகவி, காஞ்சனா, வேலைக்காரன். 1953ஆம் ஆண்டில் அன்பு, அவ்வையார், என்வீடு, சத்தியசோதனை, 1954இல் எதிர்பாராதது, பெண், 1955ஆம் ஆண்டில் கணவனே கண்கண்ட தெய்வம், கிருகலட்சுமி, கோடீஸ்வரன், மன்னன் மகள், 1956ஆம் ஆண்டில் கண்ணின் மணிகள், 1957இல் புதுவாழ்வு, 1958இல் செஞ்சுலட்சுமி (மொழிமாற்றுப்படம்), பக்தராவணா (மொழிமாற்றுப்படம்), 1959இல் அவள்யார், நாரதர் கல்யாணம் (மொழிமாற்றுப்படம்), 1960இல் மரகதம், இரும்புத்திரை, சிவகாமி, 1963இல் அறிவாளி** இவை அனைத்தும் பாபநாசம்சிவனால் பாடல் எழுதி இசையமைக்கப்பட்ட படங்களாகும்

**"பாரத புண்ணிய பூமி....", "அம்மா மனம் கனிந்து...", "இனி ஒரு கணம்...", "உன்னையல்லால் கதி...", "பதிபதம் பணிவது..."** என்று எண்ணற்ற கீர்த்தனைகளைத் துணிந்து திரைப்படத்தில் புகுத்தி மாபெரும் சாதனை நிகழ்த்தினார். கர்நாடக இசையின் அடிப்படைகளை மீறாமல் ஆனால் தமிழ் மரபு வழிவந்த பக்தி இசை மரபின் செழுமைக் கூறுகளையும் உள்வாங்கி புதிய தமிழ்க் கீர்த்தனைகளாக வழங்கி வந்தார். அரங்கத்திலேயே பாடல்களை எழுதி அமைக்கும் திறமை சிவனுக்கு இருந்தது. படங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபநாசம்சிவனைத் தேடி வாய்ப்புக்கள் பல வந்தன. அதில் முக்கியமான படமாக **'பவளக்கொடி'** விளங்கியது. **எம்.கே.தியாகராஜ பாகவதர் - பாபநாசம்சிவன்** என்ற அருமையான இசைச் சங்கமத்திற்கு பிள்ளையார்சுழி போட்ட படம்.

பாபநாசம்சிவன் திரைப்படங்களுக்கு பாடல் எழுதி இசையமைத்தது மட்டுமல்லாது தான் நடித்தும் இருக்கிறார். 1936ஆம் ஆண்டில் **பக்தகுசேலா** என்ற படத்திலும், 1938இல் **சேவாசதனம்** என்ற படத்திலும், 1943இல் **குபேரகுசேலா** என்ற படத்திலும் நடித்துள்ளார். இவற்றை விட **பக்தசேதா, தியாகபூமி, அம்பிகாபதி, அசோக்குமார், சிவகவி, ஹரிதாஸ்** ஆகிய படங்களிலும் நடித்தார். இந்தப் படங்களுக்கு தாமே பாடல் எழுதி, இசையமைத்து சொந்தக்குரலில் பாடி நடித்துள்ளார். பாபநாசத்திலேயே Drama கம்பெனியில் பாட்டெழுதி, மெட்டமைத்து, இசையைப் போதித்தும் வந்த இவர் மார்க்கண்டேயனாக ஒரு நாடகத்தில் வேடம் தாங்கி நடித்துள்ளார்.

பக்தகுசேலா என்ற படத்தில் குசேலராக வேடமேற்று நடித்தார் என்பதை விட குசேலராக, கண்ணனுடைய நண்பனாக மாறிவிட்டார் என்று சொல்லும் அளவிற்கு இவருடைய நடிப்பு அபாரமாக இருந்தது. குசேலராக பாபநாசம்சிவன் நடித்ததைத் தனது விமர்சனப் பார்வையால் எழுதிய கல்கி, **"குசேலர் வேசம் போடுவதற்காகவே இந்தப் பாபநாசம்சிவன் பிறந்தாரா, அல்லது இந்தப் பாபநாசம்சிவன் தம்முடைய வேஷம் போடுவதற்காகவே அந்தக் குசேலர் பிறந்தாரா?"** என்று புகழ்ந்திருக்கிறார். இந்தப் படம் வந்த காலத்தில் படப்பிடிப்பையும், பாட்டையும் தனித்தனியே பதிவு செய்யும் தொழில்நுட்பம் இல்லாத காரணத்தால் கமராவிற்கு முன்னே பாபநாசம்சிவன் நடித்துக் கொண்டே பாடியிருக்கிறார்.

பாபநாசம் சிவனுடைய சரீரம் இனிமையானதல்ல. ஆனால் அதில் உள்ள நடுக்கம் அதற்கொரு கம்பீரத்தை அளிக்கிறது. குசேலர் படத்தில் உருக்கமான கட்டிடங்கள் வரும்போது, அந்த நடுக்கம் உணர்ச்சியைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டுகிறது. தியாகபூமி படத்தில் கதாநாயகி சாவித்திரியின் தந்தை, **நெடுங்கரை கிராமத்து மிராசுதர் சம்பு சாஸ்திரியாக** நடித்தார் பாபநாசம்சிவன். பக்தசேதா என்ற படத்தில் **'சேதா'** என்ற கதாப்பாத்திரத்தில் நடித்திருக்கிறார். திரைப்பட பணிக்காலத்தில் பாபநாசம்சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய பாடல்கள் **800க்கும்** மேல். அவர் எழுதிய பாடல்கள் அக்காலத்தில் புகழின் உச்சியைத் தொட்டன. தமிழிசைமரபு வேறொருவடிவில் திரையிசைமரபில் தொடர்வதற்கு பாபநாசம்சிவன் காரணமாக இருந்துள்ளார். திரையிசைக்கு ஓர் கௌரவத்தைக் கர்நாடக இசை வல்லுநர்களும் பாராட்டும் வகையில் தனியான திறனை ஏற்படுத்திக் கொடுத்தார்.

தமிழ்த் திரைப்பட வரலாறு தமிழக மக்களின் வாழ்வியல் நடத்தைக் கோலங்களுடன் பின்னிப்பிணைந்து வளரத் தொடங்கியது. இந்த வளர்ச்சி திரையிசை மரபாகவும் தொடர்ந்தது. இந்த இசைமரபு செழித்து கர்நாடக இசை மரபின் அடிப்படை இராகங்களையும் உள்வாங்கிக் கொண்டு இசையின் கூறுகள் புதிய வடிவில் வெளிப்பட்டன. இது இன்று வரை தொடர்கிறது. இந்த மரபு பேணுதலின் இசைப்படைப்பாளியாகவும் முன்னோடியாகவும் திகழ்ந்தவர்தான் பாபநாசம்சிவன். பாபநாசம்சிவன் 01.10.1973 இல் இறைவனடி சேர்ந்தாலும், இவரது பாடல்களிலுள்ள மெட்டுக்களின் திறனானது இவரின் இசைப்புலமையை எடுத்துப் பேசுபவையாகவே உள்ளன. **'ஒரு நல்ல இசை மனதை மெழுகாக உருக்கிவிட வேண்டும்'** அதற்குள் நாம் புகுந்து வரும்போது நாமாக இல்லாமல் போகவேண்டும். பாபநாசம்சிவனின் பாடல்களும், இசையும் அத்தகைய பண்புகளைக் கொண்டவை. சிறந்த **கவிவாணராகவும், இசைவாணராகவும், கலைவாணரவும்** தொண்டாற்றிய பாபநாசம்சிவனுக்கு கலையுலகமும், தமிழிசை உலகமும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

**'கலாவித்தகர்'**
**திருமதி. எழிலினி. சித்தாந்தன்.B.FA(Hons).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியத்தின் இலக்கில் நாம்

இன்பத்தேனை இனிதாய் அளிக்கும்
இன்றமிழ் போலொரு மொழியில்லை
அன்பொடு அகமலர்ந்து வணங்கி
இன்றே வாழ்த்துவோம் இனிதே

ஆம் எம்மொழிக்கு நிகர் எதுவுமில்லை. ஈரடி தொடர்ந்து எம்வாழ்வில் வர, இனிதே வழிகாட்டியாக இலக்கிய இலக்கணத்தின் பால் நம்வாழ்வுகளைகட்டி நிற்கிறது. தேர்க்காலில் நீதி சொன்ன தமிழ், தராசில் ஏறித் தன்னை ஈந்த தமிழ், பாரியின் தேரில் பற்றிப்படர்ந்த தமிழ், கம்பன் கவியில் உருண்டு பாரியின் தேரில் பற்றிப்படர்ந்த தமிழ், கம்பன் கவியில் உருண்டு தமிழ் புரண்ட சிந்து வெளியில் நீராடிய தமிழ், பொதிகையில் நடந்த தமிழ், குமரியில் பிறந்த தமிழ் என எத்தனை சிறப்புகள். அதனால் தான் ஏண்டமிழ், தண்டமிழ், செந்தமிழ், அந்தமிழ், செம்மொழி, குன்றாத் தமிழ், இன்றமிழ், இயற்தமிழ், அணித்தமிழ் என்றெல்லாம் எண்ணுக் கடங்காப் பெயர்கள் இருப்பினும் இளமை மாறாத கன்னித்தமிழ் என்றால் அதன் சிறப்பினைச் சொல்லவும் வேண்டுமா?.

நாம் இலக்கியத்தினுள் சென்றால் சங்ககால இலக்கியங்கள், பத்துப்பாட்டு எட்டுத்தொகையென அகம், புறம், அகப்புறம் என முப்பிரிவுகளாகி நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, கலித்தொகை, அகநானூறு என அகம் சார்ந்தும் பதிற்றுப்பத்து, புறநானூறு எனப்புறம் சார்ந்தும் பரிபாடல் என அகம்புறம்சார்ந்து உள்ளன. அதே போல பத்துப்பாட்டில் குறுஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை என அகம் சார்ந்தும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, மதுரைக் காஞ்சி என்பன மதம் சார்ந்தும் உள்ளன.

சங்கமருவிய கால இலக்கியங்களாக நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னாநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய பதினொன்றும் அறநூல்களாகவும் கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை என அகநூல்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவழி நாற்பது என்பன புறநூலாகவும் உள்ளமை நாம் அறிந்ததே.
இவை காலம் கடந்தும் அழியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழன் சிறப்பை ஒவ்வாரு தனிமனிதனுக்கும், அனைத்து உலக மொழிகளுக்கும் எடுத்தியம்புகின்றன. நாம் இலக்கிய ரசிகர்களாக, கலைஞர்களாக இலக்கியத்தின் பால் சென்றதால் அவை நம்மை விருந்தாளிகளாகப் பார்த்து வரவேற்று தமிழ் மொழிக்கே உரித்தான விருந்தோம்பலை அறுசுவை உணர்வுடன் பரிமாறுவதை காணமுடியும். யாராலும் இதனை மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

நாம் விருந்தாளிகளாகச் சென்று பார்த்தால் அவை நம்மோடு பேசுகின்றன. எதனைப் பேசுகின்றன என்றால் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு தோன்றிய வீரத்தைப் பேசுகின்றன. கொடுக்கும் கரங்கள் நிறைந்த கொடையைப் பேசுகின்றன. அழகழகான காதலைப் பேசுகின்றன. பெண்மையின் உயர்பண்புகளைத் தியாகங்களைப் பேசுகின்றன. விருந்தோம்பலைப் பேசுகின்றன. கிழவன் கிழத்தி என்கிற உறவு முறையைப் பேசுகின்றன. கூடி வாழ்தலைப் பேசுகின்றன. தனிமனித ஒழுக்கங்களைப் பேசுகின்றன. புனிதமான காமத்தைப் பேசுகின்றன. மடலூர்தலைப் பேசுகின்றன. அரசாட்சியை, சிறந்த மக்களைப் சிற்றின்பத்தை, இறைவனை, வணிகயிலை என எல்லாவற்றையும் பேசுகின்றன.

இலக்கு + இயம் = இலக்கியம். அதாவது இலக்கை இயம்புவது இலக்கியம். இலக்கியங்கள் எழுந்த வண்ணம் எதையும் சொல்லவில்லை. அனுபவத்தை பாடமாக்கி அதனையே சொல்கின்றன. அன்றைய இலக்கியங்கள் வாழ்வின் வழிகாட்டிகளாக, உண்மையை உரைப்பனவாக இன்றைய ஆய்வாளர்களை, நூலாசிரியர்களை உருவாக்குபவையாக மனிதவாழ்வியலுக்கு உதாரணங்களாக நல்வழிப்படுத்தும் ஆசான்களாகவே உள்ளன. திருக்குறளை நோக்கின் ஒன்றேமுக்கால் அடிகளில் முப்பாலையும் வாழ்வியலுக்காகத் தந்துள்ளான் ஐயன் வள்ளுவன். குறளில் இல்லாதது எதுவுமுண்டோ என்னும் அளவிற்குப் படைக்கப்பட்டுள்ள அழகிய நூல். அக்காலம் தொட்டு இக்காலம் தழுவி எக்காலமும் வேண்டப்படுகின்ற அழகான அருமையான கருத்துப் புதையல் திருக்குறள். ஏராளமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் பொதுமறையாகப் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதைவிடத் தமிழின் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை, உரைநடை, நாடகம் யாவும் இலக்கியத்தின் உள்ளங்கமே. திருக்குறள் இலக்கணக் கவிதையின் முக்கிய வடிவமான வெண்பாவில் குறள்வெண்பா வடிவத்தில் படைக்கப்பட்டுள்ளது. மரபிலக்கணம் கற்போர்க்கு திருக்குறள் சிறந்த வழிகாட்டியாக இலக்கணத்தின் வாய்க்கின்றது. அசைபிரித்தல் பயிற்சிக்கு திருக்குறளே எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இலக்கியங்கள் தொன்மைக்கால பண்பாட்டு முறைமைகளை, பண்பாட்டு கலாசாரம், அன்றைய சிந்தனை வடிங்களை எல்லாம் கூறுகின்றன. ஆனால் நாம் இலக்கியங்களை சுவைக்க விரும்புவதில்லை. காரணம், அதிவேக உலகில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறோம். இதனால் தான் நாம் மகிழ்ந்திருந்து பெற்ற பிள்ளைச்செல்வங்களுக்கு பற்கள் கொளுவிக் கொள்ள, காற்று வெளிச் செல்கின்ற பெயர்களைச் சூட்டி மகிழ்வடைகிறோம். ஆனால் பெயரின் அர்த்தம் பிள்ளைகளுக்கு தெரியாது. பெயரிட்ட பெற்றோருக்கும் தெரியாது என்பதே கசப்பான உண்மை.

இலக்கியத்தை விரும்பக் கற்பதால் தெளிவான அறிவு மட்டுமல்ல, ஆத்ம திருப்தியும் எற்படும். தமிழர் என்கிற மார்தட்டும் நெஞ்சார்ந்த வீரம் பிறக்கும். இலக்கியம் தெய்வீகத் தூண்டுதலால் படைக்கப்பட்டது என்பது பிளேட்டோவின் கருத்து. ஆகவே அவற்றைப் படிக்கும் போது அகத்துணர்ச்சிகள் தூண்டப்பட்டு உறங்கிக்கொண்டிருக்கும் மனித சிந்தனை தட்டி எழுப்பப்பட்டு அறிவின் ஊற்றுப் பெருக்கெடுக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. பொதுமை, பொருண்மை, பெருமை, புதுமை ஆகியவற்றை சிறப்பாகக் கொண்ட இலக்கியங்களைச் சுவைக்கும் கலைஞர்களாக நாம் மாறும் போது எமக்குள் தமிழொடு சுடர்விட்டுப் பிரகாசிக்கும். பிறமொழிகளின் எல்லை வெகுதூரம் சென்றுவிடும். சுவைப்போமா....

**உடுவிலூர் கலா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியக் கலை

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்திலும் அறிவாற்றலுடனும் உணர்வுகளுடனும் சிந்தனையாற்றலுடனும் வாழ்ந்துவரும் சமூக விலங்கினமாக மனித இனம் காணப்படுகின்றது. தன்னினம் வாழவும் பிறஇனம் வாழவும் சிந்தித்து செயல்படுவது மட்டுமன்றி தன் இனத்தை விருத்தி செய்து நீண்டகாலம் வாழ்ந்து தன் சந்ததியை வாழவைத்து முதுமை பெற்று மடியும் ஒரே இனமாக மனித இனம் காணப்படுகின்றது.

ஆதிமனிதன் தன் கருத்தை பலவழிகளில் வெளியிட்டான். அதற்காக குறியீடுகளைப் பயன்படுத்தினான். தொடர்பாடலுக்கான மிகப் பெரும் சக்தியான பேச்சாற்றலை கொணர்ந்தான். அவ்வப் பிரதேச சமூகப்பாங்கில் மொழியை வளர்த்தான். வாய் மொழிக்கான எழுத்துருவை கண்டறிந்தான். பற்பல தேசங்களுடன் தொடர்பாடலினை பெற்றான். பேச்சு என்பது காற்றுடன் கலந்தாலும் எழுத்துரு என்பது ஓலைகளில் காவியமாகவும் கற்களில் சரித்திரமாகவும் இன்நாள் வரையும் மிளிர்கின்றது. பல ஆயிரம் வருடங்களில் நடந்தேறிய மனித விருத்தியே இவை.

காடுகளிலும் கற்குகைகளிலும் ஆற்றங்கரைகளை அண்டியும் குடி கொண்ட மனிதன் தமக்கென வகுத்துக் கொண்ட வாழ்க்கைப்படி வாழத்தெரிந்து கொண்டான். மிருகங்களுடன் அன்பாக பழகவும், மிருகங்களை எதிரியாகப் பார்க்கவும், மிருகங்களை இரைக்காக குறிவைக்கவும், மிருகங்களிடமிருந்து எச்சரிக்கையாக இருக்கவும் தெரிந்து கொண்டான் என்ற ஒரு விடயத்தை ஆதிமனிதன் பேச்சிலோ அல்லது எழுத்திலோ கண்டறியவில்லை. அவனால் வரையப்பட்ட ஓவியங்களினூடாகவே கண்டறிய முடிந்தது. இவற்றை இன்றைய மனிதன சமூகம் வளர்ச்சி வரலாற்று ஆய்வுகளை விஞ்ஞானரீதியில் நிரூபிக்கின்றது.

ஓவியங்கள் என்பது காலத்தை காட்டும் கண்ணாடியாக கூறப்படுகின்றது. அந்த வகையிலே அவ்வக்கால சூழ்நிலைகளில் வாழ்கின்றவர்களினால் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் அனுபவ வாயிலாக கண்ட காட்சிகளாகவும் காட்சிகளுடன் கலந்த கற்பனையாகவும் இவற்றைத் தாண்டிய ஆய்வுச் சிந்தனையாகவும் ஓவியமாக படைத்தவரை ஓவியக் கலைஞன் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டு பரம்பரையாகவும், திறமைசார்ந்த கலையாகவும் பேணப்பட்டு வருகின்றது. குறியீட்டைப் பயன்படுத்திய ஆதிமனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் கருத்தை வெளிப்படுத்தி தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டு தனக்கென ரகினை ஈர்த்த கலைஞர்களாக மாறிவிட்டனர். ஓவியக் கலைஞர்களைப் பொறுத்த மட்டில் மரபுரீதியான ஓவியங்களையும், பிரதம ஓவியங்களையும் இயற்கையாகவும் கற்பனையாகவும் படைக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதனால் சமூக முன்னோடிகள், அரசர்கள், வீரர்கள் முன்னின்று அவர்களைப் பார்த்து வரைகின்ற செயற்பாடானது புகைப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் சற்று வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் பிரதமைக் கலை ஓவியர்கள் இன்னும் வாழ்கின்றனர். முன்னைய காலங்களில் நடைபெற்ற யுத்தங்களைப் பற்றி நாம் புத்தகவாயிலாக வாசித்து அறிகின்ற பொழுது அக்காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை காட்சிப்படமாக பார்க்கின்றோம். இவையாவும் அப்போர்க்கள வீரனின் தன்மை ஆடைஇ கவசம், ஆயத தளபாடம், போர்க்கள நிலை என்பன யாவும் வரையப்பட்ட ஓவியத்தினூடாகவே அக்காலத்தினுள் நாம் கற்பனையாக செல்கின்றோம். ஓவியக் கலைஞனின் கற்பனை ஆற்றலின் வெளிப்பாடாகும்.

சிலை வணக்கத்தைப் பின்பற்றும் சமயத்தவர்கள் பிரார்த்தனையிலீடுபடும் பொழுது அனைவரது மனக்கண்களிலும் மாதிரியான முறையில் அவர்தம் கடவுள், தெய்வம், இறைதூதர், தேவர், அசுரன், என பல உருவங்கள் தோன்றுவது வழமை. இவ்வடிவங்களுக்கு உருகொடுப்பவர்கள் ஓவியக் கலைஞர்களாக இருக்கின்றனர். ஆலயங்கள் தோறும் புராணக் கதைகளை விளங்கவைக்கின்றனர். இது தொன்றுதொட்டு வரும் செயலாகவுள்ளது. இவையாவும் இயற்கையான முறையில் வரையப்படும் உருவமைப்புக்களாகும். கற்றவராலும் பாமராலும் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையிலான ஓவியமாகும்.

நவீன யுகத்தில் 17ம் நூற்றாண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் ஓவியக்கலையில் திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. இப்படியும் வரையலாம் எப்படியும் கருதலாம் என்றவொரு நிலைக்குத் தீவிரமடைந்துள்ளது. மரபுரீதியிலான ஓவியங்களை வரைந்த கலைஞர்கள் கலை நுட்பங்களை இரசித்த கலைஞர்கள் சலிப்படைந்து மாற்றத்தை நாடினர்.

ஐரோப்பிய நாடுகளில் நவீனத்துவத்தை நோக்கி உருவெடுத்த கலைஞர்கள் புதிய இயக்கங்களாக செயற்படத்தொடங்கி ஐரோப்பிய மறுமலர்ச்சியை ஓவியக்கலைஞர்களின் மேன்மையை திசை திருப்பி தமக்கென புதிய நுட்பங்களைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனப்பதிவுவாத" ஓவியத்தை படைக்க கலைக்கூடங்களை ஸ்தாபித்தனர். ஒளியியல் வாதம், நிழலியல் வாதம், கனவடிவ வாதம், என்பன இவற்றுள் பிரபல்யமடைந்த வாதங்களாக கருதப்படுகின்றது. இயற்கை வாதத்தைக் காட்டிலும் இவை நுட்பமானதாகவும் மறைமுக கருத்து வெளிப்பாடாகவும் கனவடிவவாதம் விளக்குவதுடன் காலநிலைக்கேற்ப மாறுபடும் காட்சியின் அமைப்பை ஒளியியல்வாதமும் நிழலியல்வாதமும் குறிப்பிடுகின்றது. இவ்வாறு ஓவியக்கலையானது பாரிய வளர்சி கண்டுள்ளது.

ஆதிமனிதன் வரைந்த கோடுகள் ஆதார ஆவணமாக வரலாறாக மாறி இன்று மாணவர்கள் படிப்பதுடன் இயல்பாக பிறந்த கலையாக வந்த ஓவியம் இன்று கற்பிதல் கலையாக மாறியுள்ளது. இருப்பினும் எத்துறை சார்ந்தவராயினும் இயல்பாக பிறந்த கலையாயின் கைதவறாது வளர்த்தால் மேலோங்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை சிறுவயதில் இனங்கண்டு ஊக்குவித்தால் ஓவியக் கலையை மேன்மேலும் வளர்க்கலாம் வாழவைக்கலாம்.

**சி.ச.சு.நேமி**
**பிரதி அதிபர்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**



**தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு எமது நூலகத்தில் நடாத்தப்பட்ட சி.ச.சு.நேமி அவர்களது ஓவியக்கண்காட்சியின் பதிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரோடையும் குடாரை அருள்விநாயகர் நூலகமும் அதன் செயற்பாடுகளும் ஒரு பார்வை

நூலகம் என்பது ஓர் அறிவாலயம். தேடத் தேட பல்துறை சார்ந்த புதையல்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். அறிவுப் பசி தீர்க்கும் அமுத சுரபி. இதன் மூலம் பயனடைந்தவர்கள் பல்துறைசார் விற்பன்னர்களாகத் திகழ்கின்றனர். உலகப் பெரியார்களின் வரலாறு இதற்கு உதாரணமாகும். ஒரு நூலகம் திறக்கப்பட்டால் பல சிறைசாலைகள் மூடப்படலாம். இது மிகவும் சிந்திக்கப்பட வேண்டிய வாக்கியம். எனவே தான் கந்தரோடை குடாரைப் பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள "அருள் விநாயகர் நூலகமும் தமது கிராமத்திற்கும் அயல் கிராமத்திற்கும் பல பணிகளை ஆற்றிவருகின்றது.

கந்தரோடை என்ற கிராமமே மிகவும் நீண்ட கால வரலாற்றுப் பின் இலங்கையில் ஆதிக் குடியேற்றங்கள் இடம் பெற்றதாக சுட்டப்படும் இக்கிராமம் காலத்திற்கு காலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரலாற்று ஆய்வாளளர்களினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்பொழுதும் பணிகள் தொடர்கின்றன. தென் இந்திய வர்த்தக நகரங்களில் ஆதிகாலத்தில் இதுவும் ஓர் வர்த்தக மையமாக விளங்கியிருக்கலாம் என்பதற்கு சான்றாக நாணயங்கள் வர்த்தக குறியீடுகள் பொறிக்கப்பட்ட சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. உலகம் முழுவதுமே வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் பெறும் கிராமமாக காணப்படுவது இக்கிராமத்தின் சிறப்பம்சமாகும்.

**அமைவிடம் :**

யாழ் மாவட்டத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் J/200 கிராமசேவையாளர் பிரிவில் கந்தரோடையின் அமைவிடம் காணப்படுகிறது. இக்கிராமத்தின் எல்லைகளாக கிழக்கில் சுன்னாகம், மேற்கு தென் மேற்கில் சண்டிலிப்பாயும் வடக்கே அளவெட்டியும் தெற்கே உடுவில் கிராமமும் காணப்படுகின்றது. இவற்றுள் இக்கிராமத்தில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் சுன்னாகம் பொது நூலகம் காணப்படுகின்றது. கந்தரோடைக் கிராமத்தின் பகுதிகளாக பருத்தியோலை, தம்மனை, மடத்தடி, குடாரை, இக்கிராணை, கற்பக்குணை போன்ற பிரிவுகள் காணப்படுகின்றது. இங்கு நாம் குறிப்பிட உள்ள நூலகம் குடாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பகுதியில் உருவாக்கம் பெற்றுள்ளது. கந்தரோடை கிராமம் ஆரம்பத்தில் கதிரமலை என அழைக்கப்பட்டதாக சில குறிப்புக்கள் மூலம் அறியமுடிகின்றது. கதுறுகொட என்ற சொல் காலத்தில் மருவி கந்தரோடை என வந்ததாகவும் சில குறிப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. அவற்றிலே இன்று கதுறுகொட புராண றஜமகாவிகாரை என்ற பெயரில் சுற்றுலா மையமாக மாற்றம் பெற்றுள்ளது கந்தரோடைக் கிராமத்தில் மூன்று சனசமூக நிலையமும் எல்லைக் கிராமத்தில் ஒரு சனசமூக நிலையமும் காணப்படுகின்றது. இந்த சமூகமட்ட நிலையங்களும் மாணவர்களின் தேடலுக்கான தளங்களை உருவாக்க முயற்சி செய்கின்றன. அருள் விநாயகர் நூலகம் முன்னோடியாக தனது சனசமூக பணியில் நூலகம் ஒன்றையும் உருவாக்கி சேவை புரிந்து வருகின்றது. 2017ல் இருந்தே இதன் ஆரம்பப் பணிகள் தொடங்கியிருந்தது. இருந்தபோதிலும் JSAC நிறுவனத்தின் வலுவூட்டலும் நிதி உதவியும் கிடைக்கப்பெற்று 2013 ல் சம்பிராதய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டு "அருள் விநாயகர் நூலகம்" என்ற பெயருடன் சேவை வழங்கி வருகிறது.

**நூலக உருவாக்கல் எண்ணக்கரு**

நாட்டில் ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலைக் காலங்களில் இக்கிராமத்தில் உள்ள மக்கள் தங்களுடைய நேரத்தை பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள சிறப்பாக மாணவர்கள் தங்களது கற்றலுக்கு வலு ஊட்டக்கூடிய அமைப்பு ஒன்று இல்லையே என்று ஆதங்கப்பட்ட நேரத்தில் இங்குள்ள பெரியவர்கள் மற்றும் உயர் கல்வி கற்ற மாணவர்கள் நூலகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையதைத் தூண்டினர். இவர்களுள் திரு மு.சின்னராஜா, ப.அருந்தவகுமார், செல்வி கோபிகா, கோபிதாஇ சமிஸ்ரா போன்று குறிப்பிடத்தக்கவர்கள் முன்வந்து இதற்கான அத்திவாரத்தை உருவாக்கி JSAC நிறுவனம் இதற்கு வலு ஊட்டி நிதி உதவியையும் U.N அமைப்பின் மூலம் பெற்றுத்தந்து இதனை முழுமைபெறச் செய்தனர். JSAC நிறுவனத்தின் இணைப்பாளராக இருந்த மிதுன்ராஜ் அவர்களின் பங்களிப்பு இதில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

**நூற் சேர்க்கை :**

கிராமத்தில் உள்ள கல்விமான்கள் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்கள் நலன் விரும்பிகள் நூலகத்திற்கான நூல் இருப்பை வலுவூட்டுவதற்கு அன்பளிப்பையும் நூற் சேகரிப்பையும் மேற்கொண்டிருந்தனர். திரு மு. சின்னராசா தன்னிடம் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பொருட்துறை சார்ந்த நூற்தொகுதிகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தார். இதே போன்று செல்வி இ.கோபிகா தனது சேகரிப்பாக ஒரு தொகுதி வெளியீடுகளையும் இலகுவான சேர்ந்த நூலகவியல் இறுதிக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த கோபி என்பவர் சஞ்சிகை நூல்கள் ஆண்டு நூல்கள் என பலதரப்பட்ட ஆக்கங்களையும் வழங்கியிருந்தனர். இதே போன்று சி.செந்தூரன் அவர்கள் விஞ்ஞானம், கணிதம், பொருளியல், வணிகவியல் சார்ந்த பல நூல்களை அன்பளிப்பு செய்திருந்தார். அண்மையில் நூலகவியலாளர் திரு செல்வராசா அவர்கள் தமது பிறந்த நாளை முன்னிட்டு வழங்கி வந்த நூல்தொகுதி அன்பளிப்பில் எமது நூலகமும் உள்வாங்கப்பட்டு பெறுமதியான புதிய நூல்களை அன்பளிப்பு செய்திருந்தார். மேலும் பிறந்த தினத்தை கொண்டாடும் மாணவர்கள் தங்களது ஞாபகார்த்தமாக நூல்களை அன்பளிப்பு செய்து வருகின்றனர். இவ்வாறு சேர்க்கையில் சிறுவர் நூற்தொகுதி குறைவாகவே உள்ளது. எதிர்காலத்தில் அந்தத் தொகுதி சீர்செய்யப்படவேண்டும் பிரதேச சபையும் சில நூல்களையும் தளபாடங்களையும் வழங்க முன்வந்துள்ளனர். இதுவும் நூலக் வளர்ச்சியில் ஓர் ஆரோக்கியமான செயலாகக் காணப்படுகிறது.

### மேற்கொள்ளப்படும் சேவைகள்

பலதரப்பட்ட நூல்களை உள்ளடக்கி இன, மத, மொழி கலாசார வேறுபாடு காட்டாது அனைவருக்கும் சேவை வழங்கும் நிறுவனங்களாக நூலகம் விளங்குகின்றது. சமூகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவான சேவை ஆற்றுவதில் இவற்றின் பங்கு முக்கியமானது. சிறுவர்கள் மத்தியில் ஆரம்ப காலத்திலிருந்தே நூலகத்தை தரிசிப்பதற்கும் மனதை பக்குவப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்ளவும் எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் தமது சேவையை வழங்கக்கூடிய நிலையில் இதன் சேவை இடம் பெறுகின்றது. அதாவது ஊரடங்கு நேரத்தில் கூட அல்லாது கொவிட் தொற்று காலத்தில் தனது சேவையை வழங்கக்கூடிய அளவிற்கு கிராமிய மட்டத்தில் இதன் அமைவிடம் காணப்படுவது சிறப்பம்சமாகும். தற்பொழுது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் சேவையாற்றிவரும் நிலையம் எதிர்காலத்தில் மாணவர்களின் நன்மை கருதி கூடுதலான நேரம் செயற்படவும் தீர்மானித்துள்ளது. அத்துடன் மாணவர்களின் தேவைகருதி உடனடியாக சேவைவழங்கவும் தயார் நிலையில் உள்ளது. மாணவர்கள் மத்தியில் கற்றல் ஆய்வைத்தூண்டும் வகையில் கட்டுரைப் போட்டிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகூறல்இ வாசிப்பு திறன்இ பொது அறிவுப் போட்டி என பல்வேறு நிகழ்வுகள் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. சிறப்பாக சிறுவர் தினம், வாசிப்பு மாதம் ஆகிய சிறப்புத் தினங்கள் பல்துறைசார் அறிவுத்திறன் போட்டிகள் நடாத்தப்பட்டு பங்குபற்றும் சிறார்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அருள் விநாயகர் சனசமூக நிலையத்துடன் இணைந்து ஆண்டு தோறும் வறிய மாணவர்கள் சுமார் 50க்கு மேல் கற்றல் உபகரணங்களும் வழங்கி வருகின்றது. இப்பணி அயல் கிராமங்களையும் உள்ளடக்கி நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

பலதரப்பட்ட வெளியீடுகளை அல்லது தகவல் வளங்களைத் தன்னகத்தே கொண்டவையே நூலகங்களாகும். இவை தத்துமது வலுவுக்கு ஏற்றவகையில் சிறிது பெரிதாக காணப்பட்டாலும் எல்லாவற்றினதும் நோக்கம் ஒன்றாகவே காணப்படுகின்றது. அறிவுசார் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு தம்மாலான வழிகாட்டிகளை உதவிகளை தகவல் பரிமாற்றத்தை வழங்குவதே இதன் நோக்கமாகும். அவ்வாறானதொரு பணியையே அருள் விநாயகர் நூலகமும் மேற்கொண்டு வருகின்றது. அரசன் தொடக்கம் ஆண்டிவரையும் நூலக தகவல் வளங்களைப் பயன்படுத்தியே தங்களுடைய ஆளுமையை விருத்தி செய்து கொண்டதுடன் அறிவையும் பெருக்கிக் கொண்டனர். இன்றைய இளைய சமுதாயத்தின் நேரத்தை பயனுடையதாக மாற்றக்கூடிய வல்லமை நூலகங்களுக்கு உண்டு. எனவே கிராமங்கள் தோறும் நூலகங்களை உருவாக்கி அதில் மாணவர்கள் இளைஞர்கள் யுவதிகளின் ஈடுபாட்டையும் அதிகரிக்கச் செய்து புதுயுகம் படைப்போம். நெருக்கடியான அல்லது அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்படுகின்ற காலத்தில் கூட கிராமமட்டத்தில் உள்ள நூலகங்களை அணுகி பயமின்றி தமது அறிவுத் தேடலை பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

**முடிவுரை:**

மாணவர்கள் சிறார்கள் மத்தியில் குறைந்து வருகின்ற வாசிப்புப் பழக்கத்தையும் தேடலையும் அதிகரிக்கச் செய்து எதிர்காலத்தில் சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கு நூலகங்கள் வழிகாட்டியாக அமைய வேண்டும். இதற்கு சகலரதும் ஒத்துழைப்பும் வழங்கப்படவேண்டும்.

**திருமதி நி.வர்மிளா**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பு எனும் இதய சிகிச்சை

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு என உளவியலின் உளப்பகுப்பாய்வுச் சிந்தனையை நிறுவியவரான "சிக்மண் ப்ராய்ட்" கூறுகிறார்.

எழுத்திலுள்ளதை கண்களால் கண்டு வாயால் உச்சரித்து உணர்வதே வாசிப்பு எனும் போது கண்கள், வாய் என்பவற்றிக்கும் கூட வாசிப்புப் பழக்கமானது சிகிச்சையாக அமையும் என்பது கூட ஏற்புடையதாகும். மனம் ஒருநிலைப்பட்டு மூளை கிரகிக்கும் போது கவனச் சிதறல் குறையும் கவனிப்புத்திறன் கூடும். எனவே கவனத்தோடு ஒரு செயலில் ஈடுபடும் ஆற்றல் மேம்படும். வாசிக்கும் போது வேறு சிந்தனைகள் அற்றுப்போவதால் மன அழுத்தம் குறைந்து மன ஆரோக்கியம் பேணப்படுவதுடன் நாம் வாசிக்கும் விடயத்தை திரும்ப மனம் அசைபோடும் போது நினைவாற்றலும் அதிகரிக்கும். இது மூளையை சுறுசுறுப்பாக வைத்திருக்க உதவும்.

அறிவாற்றல் இழப்பு அல்லது மறதி நோயின் பொதுவாகக் கருதப்படும் ஆல்சைமர் மற்றும் டிமென்சியா போன்ற நரம்பியல் நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு வாசிப்புப் பழக்கம் முயற்சி செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உடலிலுள்ள ஏனைய தசைகள் போலவே மூளையும் அதை ஆரோக்கியமாக வைத்திருக்கப் பயிற்சி தேவைப்படுகிறது. அத்துடன் அறிவாற்றலைத் தூண்டுவதற்குச் சதுரங்கம் விளையாடுதல், புதிர்களைச் செய்தல் என்பவற்றுடன் வாசிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது.

நாம் அதிகமாக வாசிக்கும் போது புதிய பல விடயங்களையும்இ சொற்களையும் அறிந்துகொள்ள முடிகிறது. இதனால் நமக்கு ஒரு தெளிவும் தன்னம்பிக்கையும் பேச்சுத் திறனும் ஏற்பட்டுவிடும். இதனால் நாம் எதிர்கொள்ளும் எந்தவொரு சவாலையும் எதிர்கொண்டு சமாளிக்க முடிவதுடன் திடமான தெளிவான பேச்சுத்திறனானது நாம் வேலை செய்யும் அலுவலகங்களிலும் சரி சமூகத்திலும் சரி நமக்கென ஒரு தனித்துவம், மரியாதையை ஏற்படுத்தித் தருவதாகவும் அமைந்துவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளாலும், உத்தியோகங்களாலும் தொழில்நுட்ப வளர்ச்சியாலும் எனப் பலதரப்பட்ட வகையிலும் அழுத்தப்பட்டு நோய்க்குள்ளாகும் தன்மை அதிகரித்து வருகிறது. இதிலிருந்து விடுபடத்தினமும் ஒரு மணித்தியாலயமாவது வாசிப்பிற்காக ஒதுக்கி வாசித்து நம்மை ஆசுவாசப்படுத்தி மனம், மூளை, உடல் என்பவற்றின் சமநிலையைப் பேணி அமைதியான ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வோமாக.

உடலை அழகுபடுத்த
அழகுக்கலை நிலையம்
நோக்கி ஓடுகிறோம்.
ஆரோக்கியத்திற்காக
உடற்பயிற்சி நிலையம்
தேடி ஓடுகிறோம்.
இதயம் ஆரோக்கியமானால்
அத்தனையும் அழகாகும்- எனவே
நூலகம் தேடி ஓடுவோமாக

**கவிதாமலர் சுதேஸ்வரன்**
**சுன்னாகம்**



**தொடர்ச்சியாக எமது நூலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் "எங்கட புத்தகங்கள்" கண்காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராய்ச்சிக்கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்கான சரியான பருவ இதழ்களைத் தெரிவு செய்தல்: ஆய்வாளர்கள் கவனிக்க வேண்டிய நான்கு முக்கிய காரணிகள்

ஒரு ஆய்வாளரின் கட்டுரையை வெளியிடும் நேரத்தில் சரியான ஆங்கில ஆவண பத்திரிகையை தேர்வு செய்வது மிக முக்கியமான முடிவாகும். ஆனால், இது ஒரு சிக்கலான செயலாக இருக்கலாம். "உங்கள் ஆராய்ச்சித் திட்டத்தை வெளியிட சரியான பத்திரிகையை தேர்வு செய்வது, பல விருப்பங்கள் உள்ளதால் சவாலாக இருக்கலாம்," என்கிறார் F1000 நிறுவனத்தின் முகாமை இயக்குநர் ரெபேக்கா லாரன்ஸ்.

2019 ஜுலை மாத நிலவரப்படி, 80,000 க்கும் மேற்பட்ட ஆங்கில மொழி, சமீப கால ஆய்வு பத்திரிகைகள் இருந்தன, என ஒரு ஆய்வு தெரிவிக்கிறது அந்த எண்ணிக்கை இன்று கூட அதிகமாக இருக்க வாய்ப்பு உள்ளது. ஆய்வாளர்கள் தங்கள் பணியை பரந்த அளவில் பார்க்க முடியும் என்பதில் உறுதியாக இருக்க விரும்புகிறார்கள், இதன் மூலம் அதன் தாக்கத்தை அதிகரிக்க முடியும். ஆனால், இதற்கு மேலும் பல அம்சங்களை கவனிக்க வேண்டும். ஒருவர் தமது பணிக்கேற்ற சரியான பத்திரிகையை தேர்வு செய்ய, அடிப்படையாக உள்ள நான்கு முக்கிய காரணிகளை பார்க்கலாம்.

**நம்பகத்தன்மை**

தரம்வாய்ந்த ஒரு பத்திரிகையில் கட்டுரையை வெளியிடாமல் இருப்பது, ஆய்வின் நம்பகத்தன்மையை குறைத்து, ஒருவரின் தொழில்முறை வளர்ச்சிக்கு தடையாகவும், ஆய்வு முடிவுகளின் தாக்கத்தை குறைக்கும் விதமாகவும் இருக்கலாம். பத்திரிகையை தேர்வு செய்யும் போது, ஆய்வாளர்கள் தங்கள் சகபணியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் நூலகர்களுடன் ஆலோசனை செய்ய வேண்டும். அவர்கள் பத்திரிகைகளில் எதை வழக்கமாக படிக்கிறார்கள், மற்றும் தங்களது துறையில் மிகவும் பிரபல்யமான பத்திரிகைகள் எவை என கண்டறியலாம். ஒரு கட்டுரையின் நம்பகத்தன்மை மற்றும் நேர்மையை உறுதிசெய்வதற்கு கண்டிப்பான சக ஆய்வு (peer review) செயல்முறை முக்கியமானது. சக ஆய்வு மூலம், ஆய்வின் அறிவியல் சரிவுத்தன்மையும் உயர்ந்த தரத் தரன்களுக்கு ஒவ்வுமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிசெய்யப்படுகிறது மேலும், வெளியீட்டிற்கு சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளின் தரத்தையும் மேம்படுத்த உதவுகிறது.

**காணுபடும் தன்மை மற்றும் தாக்கம்**

ஒரு துறையில் பரந்த அளவிலான தாக்கத்தை ஏற்படுத்த, ஆய்வு முடிவுகள் விரைவாகவும் பரந்த அளவிலும் பகிரப்பட்டு படிக்கப்பட வேண்டும். ஒரு பத்திரிகையின் Impact Factor (தாக்கம் காரணி) இதன் பரவல்தன்மையை மதிப்பீடு செய்ய ஆய்வாளர்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு அளவுகோலாக இருக்கலாம், ஆனால் இதற்குப் பல பொதுவான தரவுகளும் உள்ளன. உதாரணமாக, Scopus ஒரு பத்திரிகையின் தாக்கத்தை மூன்று விதமாக கணக்கிடுகிறது. மேலும், Google Scholar தரவரிசைகளின் மூலம் பத்திரிகையின் தாக்கத்தை ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்ய முடியும்.

பத்திரிகைகளை மதிப்பீடு செய்யும் போது, அவை தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை எங்கு (மற்றும் எவ்வளவு பரவலாக) கிரேதிப்பாளத்தில் பதிவு செய்கின்றன என்பதை அறிய வேண்டும். இந்த நடைமுறை, கல்வித் தளங்கள் மற்றும் வளாகங்கள் மூலம் ஆய்வுகளை எளிதில் கண்டறிய முடியும் என்பதை உறுதிப்படுத்தும். குறுகிய அணுகல் உள்ள பத்திரிகைகளுக்கு மாறாக திறந்த அணுகல் பத்திரிகையில் (Open-Access) ஆய்வை வெளியிடுவது, அதன் காணுபடும் தன்மையை அதிகரிக்க முடியும். திறந்த வெளியீட்டின் மூலம் ஆய்வுகள், ஆய்வாளர்கள், நிதியாளர்கள், கொள்கை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எளிதில் அணுகக்கூடியதாக மாறுகிறது.

சரியான திறந்த அணுகல் பத்திரிகையைத் தேர்வு செய்வதன் மூலம், ஆய்வாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகள் மற்றும் தரவுத் தொகுப்புகளை இணைத்து, பலராலும் கண்டுபிடிக்கப்படவும் மறுஆய்வு செய்யப்படவும் உதவலாம். இதனால், அவர்கள் தங்கள் ஆய்வின் புதிய பதிப்புகளை வெளியிடவும் முடியும். தரவுகளை திறந்தவிடமாகக் கிடைக்கச் செய்வதால், ஆய்வின் சரிபார்ப்பு மற்றும் கண்டுபிடிப்புகளின் ஆழமான புரிதல் கிடைக்கிறது. மேலும், ஆய்வுகள் 25 சதவீதம் கூடுதல் மேற்கோள்களை உருவாக்க முடியும் என்று ஆராய்ச்சி தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

F1000Research என்பது திறந்த அணுகல் தளம் ஆகும், இது குறிப்பிட்ட துறைகளில் கவனம் செலுத்தும் வெளியீட்டு இடங்களை வழங்குகிறது. எடுத்துக்காட்டாக, Routledge Open Research (மனிதவியல் மற்றும் சமூக அறிவியல்), Health Open Research (மருத்துவம் மற்றும் ஆரோக்கியம்), Nuclear Science and Technology Open Research (அணுக்குண்டு ஆராய்ச்சி), மற்றும் MedEdPublish (மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துறை கல்வி) ஆகியவை அடங்கும். F1000Research பல்வேறு கட்டுரை வகைகள் மற்றும் தரவுப் வடிவங்களை ஆதரிக்கிறது, மேலும் அனைத்து கட்டுரைகளும் கண்டிப்பான திறந்த சக ஆய்வுக் கணிப்பை கடைப்பிடிக்கின்றன.

"F1000 அடிப்படையிலான வெளியீட்டு இடங்கள், உங்கள் ஆய்வுகளுக்கான தாக்கமும் அங்கீகாரமும் அதிகரிக்க உதவ உருவாக்கப்பட்ட அமைப்பை பயன்படுத்துகின்றன," என்கிறார் லாரன்ஸ். "பெரிய அளவிலான கட்டுரை வகை விருப்பங்கள், உங்கள் அனைத்து ஆய்வு முடிவுகளையும் எளிதாகப் பகிர உதவுகின்றன. வெளியீட்டிற்குப் பிறகு உடனடியாக திறந்த சக ஆய்வு முறை மூலம், துறையின் நிபுணர்கள் உங்கள் பணியால் ஆரம்பமேல் நன்மை பெற முடிகிறது, மேலும் மதிப்பீட்டாளர்கள் மற்றும் பரந்த சமூகம் உங்கள் பணியை மேம்படுத்தும் வழிகளில் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைச் சேர்க்க ஆரம்பிக்கின்றனர்."

**வேகம் மற்றும் எளிமை**

ஆய்வின் தரத்தையும் நேர்மையையும் உறுதிப்படுத்துவதற்கு சக ஆய்வு (peer review) முறை மிக முக்கியமானது, ஆனால், ஆய்வாளர்கள் தங்கள் பணியை குறைந்த முயற்சியிலும் தாமதமின்றியும் வெளியிட விரும்புகிறார்கள். கண்டிப்பான ஆய்வையும் வேகத்தையும் எளிமையையும் சமநிலைப்படுத்தும் பத்திரிகையைத் தேர்வு செய்வதும் முக்கியம், குறிப்பாக மருத்துவம் போன்ற துறைகளில், காலத்திற்கேற்ப செயல்படுவது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. வாரங்கள், மாதங்கள் அல்லது வருடங்கள் வரை காத்திருப்பது வெளிவருவதற்கான காலத்தில் பெரிய வேறுபாட்டை ஏற்படுத்தும். பத்திரிகைகளை ஒப்பிடும் போது, சமர்ப்பிப்பிலிருந்து வெளியீட்டிற்கு செல்லும் செயல்முறை எவ்வளவு நேரமாகும் என்பதை கண்டறியுங்கள். இந்த செயல்முறையில் எவ்வாறு மற்றும் எந்த படிகள் ஆய்வாளர்களால் செய்யப்பட வேண்டும் என்பதை கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியுங்கள். இந்த காரணிகளைத் தெளிவாக மதிப்பீடு செய்து, உங்கள் முடிவெடுக்கும் செயல்முறையில் கருதுங்கள்.

**தெளிவுத்தன்மை**
வெளியீட்டு மற்றும் சக ஆய்வு செயல்முறைகளில் தெளிவுத்தன்மை பல காரணங்களுக்காக முக்கியமானதாகும். வெளியீட்டின் போது தெளிவுத்தன்மை, ஆய்வாளர்கள் தங்கள் பணியானது வெளியீட்டு சுழற்சியின் எந்த நிலையில் உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது, மேலும் அவர்கள் முழுமையாக தகவலறிந்தவர்களாக செயல்படுவதற்கு வழிவகுக்கும். அதற்கு மேலாக, சக ஆய்வு செயல்முறையில் தெளிவுத்தன்மை, தரமும் பொறுப்புத் தன்மையும் உறுதிப்படுத்துவதற்கான அடிப்படையாக உள்ளது. இது ஆய்வின் கண்டுபிடிப்புகளை நம்பக்கூடியதா என்று வாசகர்கள் அறிய எளிதாக்குகிறது.

"ஆராய்ச்சி தரவுகள், முறைகள், கோடுகள் மற்றும் சக ஆய்வு செயல்முறை ஆகியவற்றைச் சுற்றியுள்ள மாடலில் தெளிவுத்தன்மை மீது கவனம் செலுத்துவது, இந்த முக்கியமான வெளியீட்டு முடிவுகள் மற்றும் செயற்பாடுகளுக்கான அங்கீகாரத்தை பெற உதவும் உங்கள் பணியின் பயன்பாடு, மறுபயன்பாடு மற்றும் தாக்கம் அதிகரிக்கவும் மேலும், அதன் தரம் மற்றும் கடுமையைக் காட்டுவதில் சிறந்த உதவியாக இருக்கும்," என்கிறார் லாரன்ஸ். ஒருவரின் ஆய்வுக்கான சரியான பத்திரிகையைத் தேர்வு செய்வது, அந்தப் பணி அதிகபட்சமாக பரந்த கோட்டத்தில் உள்ளோர் அணுகக்கூடியதற்கான வழியை உறுதிப்படுத்துகிறது. இது அந்த ஆய்வின் நம்பகத்தன்மையை உயர்த்தவும், ஆய்வு கண்டுபிடிப்புகளில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும் உதவும். மேலும், வெளியீட்டு செயல்முறையை ஆய்வாளர்களுக்காக காலதாமதமின்றி மற்றும் எளிதாக்கி மாற்றுவதிலும் உதவும். இந்த நான்கு முக்கிய காரணிகளை கவனத்தில் கொண்டு, ஆய்வாளர்கள் தங்கள் பணிக்கு பரந்த தாக்கம் ஏற்படுத்த சரியான இடத்தை தேர்வு செய்ய முடியும்.

**திருமதி தி.ஜனன்**
**சிரேஸ்ட உதவி நூலகர்,**
**நூலகம், யாழ் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையின் மயக்கம்

ஆசை என்பது உலகில் பிறந்த அனைவருக்கும் இருக்கும் ஆசை அறும் இடம் மரணம். எமது அடிப்படைத் தேவைகளான உணவு உடை உறையுள் என்பவற்றை நிறைவு செய்வதற்கு ஆசை என்ற எண்ணம் தேவை. இந்த உணவு உடை உறையுள் போன்ற பல விடயங்கள் மனிதனுக்கு ஆசை எழக்காரணமாகின்றது.

பொதுவாக ஆசையை மண், பெண், பொன் என்று வகைப்படுத்துகின்றனர் இவையே மனிதனுக்கு துன்பம் விளைவிக்கின்றது. மண் - பாரதப்போர் பெண் - இராமாயணம் என்று இதிகாசங்கள் ஆசையின் விளைவை எடுத்துக் காட்டுகின்றன.

ஆசையை வென்றவர்கள் அண்டத்தில் இல்லை இதனால் வேதாத்திரி மகரிஷி ஆசையை சீரமைக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆசையிலும் நம்பிக்கையிலும் தான் மனிதன் ஓடுகின்றான். ஆசையை சீரமைத்தால் ஆசையை வெல்ல முடியும் என்று கண்ணதாசனும் கூறியுள்ளார். மனிதன் பணம் பொருள் சேர்ப்பதே ஆசையால் தான் என கபீர் அவர்கள் கூறியுள்ளார். எனவே ஆசை தேவைப்படுகின்றது.

ஆசை அறுமின் ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின் என்று திருமூலர் கூறுகிறார். கடவுள் ஆன்மா பாசம் என்ற மூன்றிலும் பாசமானது பற்று உறவு ஆசை எனப்படுகின்றது. இந்த பாசத்தை நீக்கினால் தான் முக்தி அடையமுடியும் என்கிறார்கள். வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஆசையை ஒழிக்க முடியாது என்றும் அதற்கான எல்லை எது என்றும் கூறியுள்ளார். தனக்கோ பிறர்க்கோ சமுதாயத்திற்கோ பயனுள்ளதாக இருக்கும் வரை அதனை ஏற்கலாம் அதன்மேல் சென்றால் அவை பேராசை என்றாகி விடும் அவை கேடு விளைவிக்கும். மனிதன் குறிப்பிட்ட காலம் வரை இப்பூமியில் வாழமுடியும் பின்னர் மரணம் வந்துவிடும் அப்போது நாம் பொருட்களை கொண்டு செல்ல முடியாது. நாம் செய்யும் நல்வினை தீவினைகள் தான் எம்முடன் வரும் எனவே இவ்நிலையாமையை மனிதனின் அறிவு மயக்கத்தினால் ஆசைமேல் ஓங்கி நிற்கின்றது.

இங்கு மனிதன் ஆசை சினம், கடும்பற்று, பால்கவர்ச்சி, தாழ்வு மனப்பாண்மை, வஞ்சகம் போன்ற அறுகுணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரமைக்கப்படாததால் ஆசை அதிகரித்து பேராசை தோன்றுகிறது. இதனால் பொய், கொலை, களவு, கற்பளிப்பு, சூது போன்ற பஞ்சமாபாதகங்களை செய்கின்றார்கள். இந்த நிலையில் மனிதன் அறிவு நிலையை இழக்கின்றான். அவனின் எண்ணம் சொல் செயல் என்பவை சமூகத்தையும் தன்னையும் அழிக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றான் தேவைக்கு அதிகம் ஆசைப்பட மனம் அல்லல்படும் மனம் அல்லல்பட உள்ளம் சோர்வடையும் இதனால் உடல் தளர்வு அடையும் சீவகாந்த சக்தி இழக்கப்படும் அணு அடுக்கு சீர்குலையும் மரணத்தை நெருங்கி விடுவார்கள்.

ஒரு மனிதனின் துன்பத்திற்கு ஆசைதான் காரணம் ஆசை எழக் காரணம் எண்ணம் அதாவது மனதின் இயக்கநிலை எனவே ஆசை இருக்கும் இறைநிலை தான் பற்றற்ற ஜீவாத்மா நிலை

இச்சை இயக்கமே வாழ்வு என்று மகரிஷி பாடல் வரிகள் கூறுகின்றது.

இச்சை எழும்போதே காரணம் கண்டிடு
இச்சை முடித்திட சூழ்நிலை பார்த்திடு
இச்சை முடித்தால் எழும் விளைவை யூகி
இச்சை முறையாய் இயங்கும் அமைதியில்

தேவையின் பொருட்டு எழும் ஆசைகளை நிறைவேற்றுவதுடன் நின்றுவிட வேண்டும் இயற்கை துன்பத்தை போக்கி கொள்ள எழுந்த ஆசை அத்துடன் நின்றுவிட வேண்டும். உணவு தாகம் மருந்து குறித்தஅளவை மீறின் தீமை. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. ஆசை மனிதப் பண்பால் விலக்கி விடும். ஆசையே அலை போலே நாமெல்லாம் அதன்மேலே ஓடம்போலே ஆடிடுவோமே வாழ்நாளிலே இங்கு அலைகடலில் தத்தளிக்கும் ஓடம் போல எமது மனம் ஆசை அலையில் தத்தளிக்கிறது. ஆசை எழும்போது மனதை கடிவாளம் போட்டு நெறிப்படுத்த வேண்டும்.

மனதின் அலை இயக்கத்தை நாம் குறைக்க வேண்டும் அல்பா நிலைக்கு கொண்டுவர வேண்டும் தியானம் அகதவம் போன்றவை செய்யவேண்டும் திருநாவுக்கரசு நாயனார் ஓடும் பொன்னும் சமனென கூறும் நிலையை அடைய வேண்டும்

ஆசை எழும்போது “சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய் சிந்தித்தே தெளிவாய்” என்று மகரித குருவார்க்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. எனவே நாம் அவ்ஆசை என்ன நன்மை பயக்கும் இது அவசியம் தேவைதானா எமது பொருளாதாரம் எப்படி என எண்ண வேண்டும் அவசியமில்லையேல் விடலாம் அல்லது பிற்போட்டு வாங்கலாம் என தீர்மானிக்கலாம்

தற்சோதனை செய்து இது என்னால் முடியுமா இல்லையேல் விட்டுவிடுதல் வேண்டும். பற்றற்ற நிலையில் இறைநிலையும் நுண்ணிய அணுவையும் அதிலிருந்து வரக்கூடிய காந்தஆற்றலையும் மனதையும் எழுச்சி பெற்ற அதாவது அறிவு நிலையில் புலன்களுக்கு எட்டாத பொருளாக உள்ள இறைநிலை அதிலிருந்து தோன்றிய ஆற்றல் நிலையா உள்ள மனம் உணர்ந்து கொள்வதோடு ஆசையின் நிமித்தம் கிடைக்கும் செயல்களில் பற்று அற்று சமூகத் தொண்டுக்குரியதாக நினைத்தல் வேண்டும்

ஆசைகளைத் திட்டமிடல் வேண்டும். ஆசை எழும்போது மீண்டும் மீண்டும் எழாது சங்கல்ப்பம் கொள்ள வேண்டும் பொருள்பற்றுக் கொண்டால் அது தீய குணங்களும் மலர்ந்திடும் துன்பம் அதிகரிக்கும் ஆசையை குறைத்தால் வாழ்வில் அமைதி பெறும்.

**செல்வி நா.நீலாம்பிகை**
**நூலகர் (ஓய்வு நிலை)**
**தேசிய கல்வியற் கல்லூரி, வவுனியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் திறன் விருத்தியில் வாசிப்பின் அவசியம்

"தெள்ளிய அறிவும் நன்னடத்தையும் கொண்ட பண்பட்ட மக்களை உருவாக்குவதே கல்வி" என்று மாட்டின் லூதர் கூறுவதும் "மனிதனை மனிதனாக வாழவைப்பதே உண்மைக்கல்வி" என்று சுவாமி விவேகானந்தர் கருத்தும் "அன்பை உணர்தல் அன்பு காட்டுதல் என்றால் என்ன என்று கண்டுபிடித்தல் அன்பு காட்டுதல்" என்பவையே கல்வி என்ற இந்திய கல்விச் சிந்தனையாளர் ஜோ.கிருஸ்ணமூர்த்தி அவர்களது சிந்தனையும் "உன்னத மரபுகளையும் அன்பையும் இரக்கத்தையும் ஒருவரிடம் பேணி வளர்க்கவும் முழுமையான வாழ்க்கையை வாழ உதவுவதுமே கல்வி" என்று கல்வியியலாளர் ராதாகிருஷ்ணன் சிந்தனைகளும் கல்வி தொடர்பான கண்ணோட்டங்களை எடுத்துக்காட்டுவதனூடாக கல்வியின் நோக்கம் அதன் முக்கியத்துவம் தொடர்பாக அறிய முடிகின்றது.

அத்தகைய கல்வியை ஒரு மனிதனுக்கு இளமைப் பருவத்தில் மாணவனாக இருக்கும் காலத்தில் அவனை முழுமனிதனாக்கும் நோக்குடன் முறைமைக்கேற்ப அவனது அறிவு திறன் மனப்பாங்கு விருத்தியில் மேம்பாட்டை அடைவதற்கேற்ப செயற்படுவது பாடசாலைகளாகும். பாடசாலைகள் மனிதன் சந்திக்கும் முதலாவது அறிவுக் கருவூலங்களாகவே போற்றப்படுகின்றன. மனித வளர்ச்சிக் கட்டங்களில் இளமை, ஆர்வம், துடிப்பு, தேடல் அதிகம் உள்ள குழந்தைப்பருவம் முழுவதையும் தமதாக்கி அவர்களை நாட்டின் மாறிவரும் உலகிற்கேற்ப எதிர்காலத்தை ஒப்படைப்பதற்கான வழிப்படுத்தல் என்ற மாபெரும் பொறுப்பை ஏற்று நிற்பவை பாடசாலைகளாகும்.

அத்தகைய பாடசாலைகளில் மாணவர்களின் விருத்தியில் முக்கிய பங்காற்றுவது நூலகங்களே கற்றல் வள நிலையங்களாக விளங்கும் நூலகங்கள் மாணவர்களது கல்விச் செயற்பாடு முழுமையடைவதற்கான ஆதார நிறுவனமாக தொழிற்படும் கடப்பாடுடையவை மனித ஆளுமையின் ஆத்மீக ஒழுக்க விழுமிய சமூக கலாசார பண்பாட்டு அம்சங்களின் விருத்திக்கு நூலகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அவசியமானதொன்றாக காணப்படுகின்றன. மாணவர்களது வாசிப்பு பழக்கத்திற்கு அடித்தளம் இடும் நிறுவனமாக பாடசாலை நூலகங்கள் காணப்படுகின்றன. தேடலுக்கான ஆரம்பத்திற்கும் பண்பு விருத்திக்கும் நூலகங்கள் அவசியமானதாகும்.

இத்தகைய பாடசாலை நூலகங்கள் மூலம் மாணவர்களது திறன் விருத்திக்கும் அறிவாற்றலுக்கும் இன்றியமையாத செயற்பாடுகளை முன்னெடுப்பதனூடாக சிறந்த சமூக உருவாக்கத்தை தக்க வைத்துக்கொள்ள ஏதுவாக அமைகின்றது.

பலதரப்பட்ட பொருட்துறைகளிலுமுள்ள சிறந்த தகவல் வளங்களின் சேகரிப்பை கொண்டிருப்பதனூடாக கற்பித்தலுக்கு உதவுதல். அறிவை விருத்தி செய்வதற்கான வாசிப்பு பழக்கத்தை ஒவ்வொரு மாணவரிடமும் ஏற்படுத்துதல். உசாத்துணை சாதனங்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதனூடாக மாணவர்களின் ஆளுமையை வளர்க்கக்கூடிய வகையிலும் தம்மில் தாமே மதிப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலும் உதவுதல். மாணவரால் விரும்பப்படுகின்ற அல்லது அவர்களால் தேடப்படுகின்ற அனைத்துவகை அறிவுக்குமான அணுகுமுறையை வழங்குதல். அனைத்து வகை தகவல் அமைப்புகள் தொடர்பான அறிவை அவர்களிடம் வளர்த்து அத்தகைய தகவல் அமைப்புக்களை பயன்படுத்தும் ஆர்வத்தை ஏற்படுத்துவதனூடாக தொடர்ச்சியான வாசிப்பு பழக்கத்திற்கு வித்திடல்.

இத்தகைய தேவைப்பாடுகளை மாணவர்களிடையே நிறைவேற்ற பாடசாலை நூலகங்களும் வாசிப்புப் பழக்கமும் என்றென்றும் இணையாக இருப்பது அவனது அனைத்து திறன் விருத்தியிலும் செல்வாக்கு செலுத்துவதற்கு ஏதுவாக உள்ளதனைக் காணலாம்.

வாசிப்பு என்பது எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட வாக்கியத்திலுள்ள சொற்களை இனங்கண்டு அதில் கூறப்பட்டிக்கும் பொருளை விளங்கிக்கொள்வதாகும். சொற்களை இனம் காணல் மற்றும் பொருளை விளங்கிக்கொள்ளல் ஆகியன வாசிப்பின் இரு பிரதான செயன்முறைகளாகும். மொழியின் எழுத்துருக்களை இனங்காண்பதுவும் அவற்றிற்கான எழுத்தொலிகளை உணர்வதும் சொற்களை இனம்காணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையில் அடங்கும். சொற்களில் அல்லது வாக்கியத்தில் காணப்படும் பொருளை விளங்கிக்கொள்வது கிரகித்தலாகும்.

வாசிப்பதனூடாக மூன்று விதங்களில் மாணவர்கள் பயனடைவதாக குறிப்பிடுகின்றனர்

1. வாசிப்புச் செயன்முறைக்குரிய உளரீதியான ஆயத்தம் மாணவரில் உருவாகுதல்
2. வாசிப்புச் செயன்முறைக்குரிய அறிகைசார் ஆற்றல்கள் விருத்தியடைதல்
3. கற்றல் மற்றும் தொடர்பாடல் என்பவற்றுடன் தொடர்புடைய கட்புல அறிவு விருத்தியடைதல்

இத்தகைய நிலைகளில் வாசிப்பு செயன்முறைக்குரிய உளரீதியான ஆயத்தம் எனும்போது மாணவருக்கும் ஆசிரியருக்கும் மட்டுப்படுத்தப்படாத வகையில் சுதந்திரமான சூழல் ஒன்று அமைவதனூடாக வாசிப்பில் உள்ள ஆர்வத்தை அதிகரித்து உள ஆயத்தத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மகிழ்வான வாசிப்பாகவும் அது இலகுவானது என்ற மனோநிலையையும் உருவாக்க வேண்டும். அத்தகைய செயற்பாட்டிற்கு ஏற்ப படிமுறைகளை வகுத்துக்கொள்ளலாம்.

1. நேயமான மற்றும் சுதந்திரத்தை மதிக்கும் சூழல்
2. வாசிப்பை எளிமையும் இலகுவும் கொண்ட அனுபவமாக்குதல்
3. மாணவர் தமது இரசனை பற்றித் தாமே விளங்கிக்கொள்ளல்

போன்ற விடயங்களின் ஊடாக மாணவர்களது ஆற்றல்களை விருத்தியாக்க முடிகின்றது. இதன் மூலம் மாணவரிடம் வாசிக்கும் ஆர்வம் அதிகரிக்கும்

வாசிப்பு செயன்முறைக்குரிய அறிகைசார் ஆற்றல்கள் விருத்தியடைதல் தொடர்பாக கல்வி உளவியலில் பல்வேறு விதமான அறிகைசார் விருத்தி அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நிலையான கவனம்

ஏதாவது ஒரு செயற்பாட்டினை மேற்கொள்ளும்போது மாணவர் தமது அவதானத்தினை வேறிடம் செலுத்தாமல் குறித்த விடயத்தில் தொடர்ந்து நிலைநிறுத்தி வைத்தல் இத்தகைய செயற்பாட்டின் மூலம் மாணவனது சாதாரண வாழ்க்கைக்கும் எதிர்கால கற்றலுக்கும் நீண்டகால வாசிப்பு பழக்கத்திற்கும் இன்றியமையாததாக உள்ளது. இந்த அறிகைசார் விருத்தியானது வாசிப்பு காரணமாக மாணவரில் விருத்தியடைகின்றது.

2. அறிகைசார் நெகிழுமியல்பு

ஒருவர் இதுவரை தெரிந்து வைத்திருக்கும் ஒரு கருத்தை அல்லது புரிதலைக் கைவிட்டு மற்றுமொரு கருத்திற்குள் அல்லது புரிதலுக்குள் செல்லுதல் அறிகைசார் நெகிழுமியல்பு என்று கூறப்படுகின்றது. இதன் மூலம் அவர்கள் புதிய கருத்தினை ஏற்கும் மனோ நிலையை பெற்றுக்கொள்வர். இத்தகைய இயல்பின் ஊடாக அனுபவங்களையும் மாறுபட்ட முடிவுகளையும் பெற்றுக்கொள்ள வழிவகுக்கிறது.

3. கோலங்களை கண்டறிதல்

புத்தக வாசிப்பில் ஈடுபடும் போது மாணவரிடத்தில் கோலங்களைக் கண்டறிவதற்கான ஆற்றலும் அக்கோலங்களுக்கேற்ப இனி என்ன நடக்கும் என எதிர்வு கூறக்கூடிய ஆற்றலும் விருத்தி அடைகின்றன. இவ்வாறு கோலங்களை கண்டறியும் அறிகைத்திறனே மாணவர்கள் விஞ்ஞான ரீதியாக சிந்திப்பதற்கு உதவுகின்றன எனக் கூறப்படுகின்றன.

கற்றல் மற்றும் தொடர்பாடல் என்பவற்றுடன் தொடர்புடைய கட்புல அறிவு விருத்தியடைதல் எனும்போது படங்கள் அல்லது வேறு கட்புல அம்சங்கள் ஊடாக முன்வைக்கப்படும் தகவல்களை விளங்கிக்கொண்டு அவற்றிற்கு பொருள் கூறும் ஆற்றல் கட்புல அறிவு எனலாம். இவை வாசிப்பிற்கு மிகஅவசியமானவையாவதுடன் இரசனைக்கும் அறிவு விருத்தி செய்வதற்கும் உதவுகின்றது. வாசிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு கட்புல அம்சங்கள் காணப்படும் கற்றல் சாதனங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல் மூலங்களிலும் வெளியீடுகளிலும் ஈடுபாடு காட்டி ஆற்றல் பெற்ற மாணவர்கள் கட்புல அறிவு விருத்தி பெற்று எதிர்காலத்தில் திறமையானவர்களாகவும் சிறப்பான தொடர்பாடல் ஆற்றலுடையவர்களாகவும் காணப்படுவார்கள் என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய திறன் விருத்தி மாணவர்களிடையே ஏற்படுவதற்கு சிறந்த வாசிப்பு பழக்கம் அவசியமானதாகும். "ஒவ்வொரு புத்தகமும் எம்முன்னே மக்களைப் பற்றியும் அவர்கள் ஆசாபாசங்கள் பற்றியும் அவர்கள் இதயம் பற்றியும் கருத்தோட்டங்கள் பற்றியும் அறிந்து கொள்ளத் திறந்து விடப்படும் சாளரங்கள்" என்று ருஷ்ய மண்ணின் புகழ்பெற்ற இலக்கியமேதை மக்சிம் கார்க்கி குறிப்பிடுகின்றார். தனிநபரின் வாசிப்பின் மீதான திறன் புதிய உலகத்திற்கும் அதற்கான வாய்ப்புகளுக்கும் வழிகாட்டுவதாக அமைகின்றது. புதிய அறிவினை அடைந்து கொள்வதற்கும் அதன்வழி திறன் விருத்தி மேம்பாட்டிற்கும் இலக்கிய இரசனைக்கும் கல்வி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்தமாக நவீன உலகிற்கும் பொருத்தமான நவீன இயல்பாக்கத்திற்கும் வாசிப்பு என்பது இன்றியமையாததாகும். இத்தகைய வாசிப்பின் ஊடாக மாணவர்களது அறிவாற்றல் செயல்முறைகளாக மாற்றம் பெறுவதற்கும் ஆளுமைத்திறன் வெளிப்பாட்டிற்கும் எதிர்காலத்தில் திறன்மிக்க மனிதவள சமூக விருத்திக்கும் வித்திட்டு செல்லும் என்பது மிகையாகாது.

**மாணிக்கம் தேவகாந்தன்**
**ஆசிரிய ஆலோசகர் (சங்கீதம், சித்திரம்)**
**மற்றும் நூலக இணைப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**வலிகாமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே

**(தேசிய வாசிப்பு மாத போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை)**

தற்போது வளர்ந்து வரும் நவீன உலகத்தில் வாசிப்பானது மிகவும் கேள்விக்குறியாக போய் கொண்டு இருக்கிறது. "நல்ல நூல் ஒரு நல்ல நண்பனுக்கு ஒப்பானது" என்பார்கள். இதற்கு காரணம் ஒரு நூலினை வாசிக்கும் போது அவ் நூலானது நல்ல வழிக்கு எடுத்து செல்வதோடு சமூக ஒருமைப்பாட்டினை விளக்கி எம்மை ஒரு நற் பிரஜையாக சித்தரிக்கின்றது. வாசிப்பு என்பது யாதெனில் "கை எழுத்துகளிலோ அல்லது அச்சுஎழுத்துக்களிலோ காணப்படும் விடயத்தை கண்னால் பார்த்து வாயால் உச்சரித்து அவற்றின் பொருளை உய்த்துணர்ந்து செயற்படல் வாசிப்பு" என்றார் டாக்டர் ந.சப்பு ரெட்டியார் அவர்கள். இவ்வாறு பலவகையில் சான்றோர்கள் இவ் வாசிப்பின் முக்கியத்துவ த்தை எடுத்து கூறுகின்றார்கள். வாசிப்பதனால் மனிதன் பூரணமாகின்றான் என்ற வாக்கும் இவ் மையக் கருத்தினையே சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

வாசிப்பதனால் மனிதன் பல விடயங்களில் தேர்ச்சி மிக்கவனாகவும், ஆளுமை கொண்டவனாகவும், துணிச்சல் மிக்கனாகவும் தம்மை தாமே வேடம் பூண்டு ஆட்கொண்டிருக்கிறார்கள். இவ் வாசிப்பை நாம் நமது வாழ்வின் அன்றாட தேவைகளில் ஒன்றாக செயற்படுத்த வேண்டும். இவ்வாறு செயற்படுத்தினால் மட்டுமே நாம் இவ் உலகத்தினை நம் கைக்குள் வைத்துக் கொள்ள முடியும். இதற்கமைவாக முன்னைய குறளில் "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு." என்றார் எமது பொய்யா மொழிப் புலவர். இவர் இவ் திருக்குறளில் இவ் அதிகாரத்தின் மூலம் கூற விளைவது என்ன வெனில் ஒரு மணல் உள்ள இடத்தில் கேணி அமைப்பதற்காக எவ்வாறு மண்ணை தோண்டும் போது நீர் குறையாமல் வருமோ அது போல கற்றவர்களுக்கும் இவ் கல்வி அறிவானது சிறிதும் பஞ்சம் இல்லாமல் அமுத சுரபி போல் வரும் என்கிறார் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமல்லாமல் ஒரு பழமொழியும் உள்ளது இவ் வாசிப்பு நமக்கு எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்து காட்டுவதற்கு " கண்டதைக் கற்றவன் பண்டிதன் ஆவான் என்பவற்றின் மூலம் இவ் வாசிப்பு மனிதவாழ்வியலில் எவ்வாறு மேம்பட்டு நிற்கின்றது என்பதை எடுத்து கூறுவதாக உள்ளது.

**"நீர் அளவே ஆகுமாகுமாம் நீராம்பல், தான் கற்ற நூல் அளவே ஆகுமாம் நுண்ணறிவு"** என்கிறார் நமது மூதாட்டி ஔவையார். இவ் குறள் மூதுரையில் அமைந்துள்ளது

இவ் குறளின் மூலம் கூட ஔவைப்பாட்டி ஒருவன் நூல்களை எந்த அளவிற்கு வாசித்து கற்று கொள்கின்றானோ, அந்த அளவிற்கு அவனது நுண்ணறிவு மேம்படும் என்கிறார். இவ்வாறு தமிழ் இலங்கிய மாமேதையான அரிஸ்ரோட்டில் கூட சாவின் விழிம்பை தொட்டு கொண்டு இருக்கும் அந்த வேளையில் அவரது சீடன் அவரிடம் என்ன? ஆசை உங்களுக்கு உள்ளது குருவே" என வினவியபோது எனக்கு ஒர் புத்தகத்தை கொண்டுவா " என்று பதிலளித்தாராம். இதில் இவ் நிலமையில் கூட புத்தகத்தை வாசிக்க கேட்கின்றார் இவ் மாமேதை. இவ்வாறு பல உதாரணங்கள் மூலமும் இவ் வாசிப்பின் முக்கியத்துவத்தினை எடுத்துகூறலாம். இவ் வாசிப்பு பழக்கம் எவ்வாறு மக்களிடையே அதிகரித்தது என நோக்குவோமானால், முதலில் இவ் வாசிப்பு பழக்கம் மக்களிடையே தோன்றக்காரணம் நூல்களே ஆகும். இவ் நூல்கள் எழுச்சி பெற காரணம்.

கிரேக்கத்தில் மத்திய காலத்தில் மக்களிடையே ஏற்பட்ட மாற்றம். அதாவது மக்கள் விழித்தெழுந்தனர். ஆராய்ச்சியில் ஈடுபட்டனர் இதன் விளைவாகவே சம காலத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த ஜோன் கூடன்பேர்க் என்பவரால் அச்சியந்திரம் கண்டுபிடிக்கபட்டது. இதன் மூலம் நாடுகள் எங்கும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், செய்திதாள்கள் நூல்கள் என பலவடிவில் எழுச்சி பெற்று நாடு பூராகவும், இவ் செயற்பாடு வியாபித்து காணப்பட்டது. இதன் விளைவாகவே மக்கள் வாசிப்பதில் ஆர்வம் காட்டினர். நாடு பூராகவும் அச்சியந்திரங்களை பயன்படுத்தி பலர் தமது கருத்துக்களை, கோரிக்கைகள் என்பவற்றை அச்சியந்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி நூல்களாக வெளியிட்டனர். இதனால் நூல்கள் உலக மெங்கும் வியாபித்து காணப்பட்டதை நாம் அறிவோம். இவ்வாறே மக்களிடையே நூல்ப்பாவனையும் வாசிப்பு பழக்கமும் அதிகரித்தது.

முதல் கூறிய விடயத்தினால் மட்டுமே ஓர் அறிவு சாகரத்தை உருவாக்க முடிந்தது. இதன் மூலமே மக்களிடையே புதுப்புது சான்றோர்கள், கல்வி மான்கள் என பலர் இதன் பாற்பட்டு வாசித்தை நோக்கமாக கொண்டு வாசித்து பல துறைகளில், பாடுபட்டு தமது பெயர்ச்சின்னங்களை பதித்தார்கள். இவ்வாறு இவர்கள் பதித்தமையால் தான் நாடு, இவ்வாறு வளர்ச்சி அடைத்தது. நாமும் அவ்வாறு ஒருதுறையில் நம் பெயர்ச்சின்னங்களை பதிக்க வேண்டுமாயின் வாசிப்பு பழக்கத்தை கொண்டு வர வேண்டும். இவ்வாறு நாம் நாளுக்கொரு புத்தகமாய் வாசித்து வருவோம் ஆயின் நமக்கு பல்வேறு துறை சார்ந்த அறிவுத்திறன் வளர்ச்சியடையும்.

ஏனெனில் நாம் ஒவ்வொரு புத்தகமாய் வாசிக்கும் போது நமக்கு அறியாமலே நமது மூளை பல்வேறு தொழிற்பாட்டை பதிவு செய்கின்றது. என்ன வெனில் நாம் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து அதன் பொருளை உணரும் போது, நமக்கு வசனநடை தொடர்பான சிக்கல்கள் ஏற்படுவதை இதன் மூலம் தடுக்கலாம். மற்றும் மொழித்திறன் வளர்ச்சியடைவதை காணலாம். இதன் மூலம் நாம் பல துறைகளில் முன்னின்று செயற்படுவதற்கு இவ் வாசிப்பு திறனே அவசியமாகின்றது.


மன அழுத்தத்தை குறைத்து, தீயவற்றை விடுத்து நல்லவற்றை போதிக்கும் நண்பராக இவ் நூல்கள் அமைவதோடு வாசிப்பு பழக்கமும் இதற்கு உளன்று கோலாய் அமைந்துள்ளது. இவ்வாசிப்பு பழக்கவழக்கத்தை உயிர் மூச்சாக எண்ணி தமது பெயர்களை தடம் பதித்தவர்கள் யாவர் எனின் மாகாத்மாகாந்தி, மகாத்மாத்மா காந்தியின் நூல்களை வாசித்து தேர்ந்தவரான மாட்டின் லூதர் கிங், ஆபிரகாம் லிங்கன், லெனின், அணுக் கொள்கை விளக்கிய டாக்டர் அப்துல்கலாம் என பலரை கூறலாம். இவ்வாறு பலர் மங்களிடையே தோன்றி, வாசிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையப்படுத்தி தமது கால்தடங்களை பதித்தவர்கள் ஆவர். இவ்வாறு நாமும் வாசிப்பை மையமாக கொண்டு உயர்ச்சி எனும் சிறரத்தை தொடுவோம்.

**ஜீ.தர்சிகா**
**தரம் 11A**
**யா/ இராமநாதன் கல்லூரி**




**எமது சிறுவர் பகுதியில் இடம்பெற்ற மாற்றுவலுவுடைய சிறுவர்களுக்கான நிகழ்வின் பதிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய வாசிப்பு மாத காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட முத்திரைக் கண்காட்சியின் பதிவு



எமது நூலகத்தால் ஆரம்பிக்கப்பட்ட கட்புலனற்றவர்களுக்கான KIBO சாதன அறிமுக விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DIGITAL INCLUSION HUB

The Digital Inclusion Hub is a place, that has additional equipment and software to enable people with special needs to acquire digital literacy. KIBO is the key device in the hub that provides an end-to-end content accessibility platform, making reading and learning inclusive for everyone, especially visually impaired individuals.

AI-Powered

Kibo



**Listen | Translate | Digitize | *Audio'tize***

printed and handwritten content
across 60 global languages

**Digital Transformation and Inclusion**

*A place for Digital Technology for All.*

## What is KIBO?

Kibo, an acronym for 'Knowledge in a Box', is a tool that allows users to:

**Listen**
On-the-go audio-based access to printed, handwritten and digital documents.

**Translate**
Translate text from hardcopy documents, images and PDFs across 60 languages.

**Digitize**
Download text from Hardcopy documents, images and PDFs in editable formats.

**Audio'tize**
Convert digitized or translated text into natural-sounding MP3 audio format.

**Save**
Access processed documents anytime, anywhere with unlimited Kibo Cloud storage.

**Public Library,
Pradeshiya Sabha,
Chunnakam.
0776032312.**

## டிஜிட்டல் சேர்க்கை அலகு

AI-Powered

Kibo



**Listen | Translate | Digitize | *Audio'tize***

printed and handwritten content
across 60 global languages

**டிஜிட்டல் பரிநாமம் மற்றும் சேர்க்கை**

*அனைவருக்குமான டிஜிட்டல் தொழில்நுட்பம்*

KIBO என்றால் என்ன?

'பெட்டகத்திலுள்ள உள்ள அறிவு' என்ற தொனிப்பொருள் கொண்ட இக்கருவி கீழ்வரும் வசதிகளை பயனர்களுக்கு வழங்குகிறது

**கேட்டல்**
அச்சிடப்பட்ட, கையால் எழுதப்பட்ட மற்றும் டிஜிட்டல் ஆவணங்களுக்கான உடனடி ஒலி வடிவ அணுகல்.

**மொழிபெயர்த்தல்**
அச்சிடப்பட்ட ஆவணங்கள், படங்கள் மற்றும் PDF களில் உள்ள ஆவணங்களை 60 மொழிகளில் மொழிபெயர்த்தல்.

**டிஜிட்டல் மயமாக்குதல்**
அச்சிடப்பட்ட ஆவணங்கள், படங்கள் மற்றும் PDF களில் இருந்து மாற்றக்கூடிய வடிவங்களில் எழுத்து வடிவங்களை பதிவிறக்கம்.

**ஒலி வடிவமாக்கல்**
டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட எழுத்து வடிவ ஆவணங்களை MP3 ஆடியோ வடிவத்திற்கு மாற்றலாம்.

**சேமித்தல்**
வரம்பற்ற KIBO கிளவுட் சேமிப்பகத்திலிருந்து எந்த நேரத்திலும், எங்கு இருந்தும் செயலாக்கப்பட்ட ஆவணங்களை அணுகலாம்

**பொது நூலகம்
பிரதேச சபை
சுன்னாகம்
0776032312**

Print@JR, Uduvil. 021 222 4484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org